32°c
கூடிய வெப்பநிலை 39°c
குறைந்த வெப்பநிலை 26°c
தெளிவான, வரண்ட காலநிலை காணப்படும்.

# உதயன்

UTHAYAN - A Lively National Tamil Daily

சாரதி பயிற்சியில் நம்பிக்கையை வென்ற நிறுவனம்
216, கண்டி வீதி ,வவுனியா.
(வசந்தம் திரை)
024 2227777, 077 7100444

விலை: யாழ்.– 20/= வன்னி – 20/= கொழும்பு – 30/= | சுடர்: 29 | கதிர்: 139 | வள்ளுவர் ஆண்டு: 2045 | சித்திரை 01 , திங்கள் 14.04.2014

# மே மாதத்தின் இறுதி வாரத்தில் வடக்குக்கு வருகிறார் ராமபோஷ

## அரசு - கூட்டமைப்பு பேச்சுக் குறித்து கலந்துரையாடல்களில் ஈடுபடுவார்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 14
தென்னாபிரிக்க அரசின் விசேட பிரதிநிதி சிறில் ராமபோஷ எதிர் வரும் மே மாத இறுதியில் இலங்கையின் வடக்கு - கிழக்குப் பகுதிகளுக்கு வருகை தரவுள்ளார். இவர் தென்னா பிரிக்க அரசால் இலங்கை இனப்பிரச்சினை தொடர்பான விவகாரங்களைக் கையாள்வதற்காக நியமிக் கப்பட்டுள்ள விசேட பிரதிநிதியாவார்.



இங்கு வரும் சிறில் ராமபோஷ கள நிலைமைகளை நேரடியாக ஆராய்வதோடு, தமிழ் சிவில் சமூக, அரசியல் பிரதி நிதிகளையும் சந்தித்துக் கலந் துரையாடுவார். அதன் பின்னர் இலங்கை அரசுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப் புக்கும் இடையிலான பேச்சுத் தொடர்பாக அவர் ஆலோசனை நடத்தவுள்ளார்.
இதுகுறித்து 'உதயனுக்கு'

19ஆம் பக்கம் பார்க்க





## எண்மர் நேற்று விடுதலை

யாழ்ப்பாணம், ஏப்.14
பயங்கரவாத தடுப்புப் பிரிவினரால் கடந்த மாதம் கைது செய்யப்பட்டவர்களில் ஒரு பெண் உட்பட 8 பேர் நேற்று மாலை விடுவிக்கப்பட்டுள்ளனர். விடுவிக்கப்பட்டவர்கள் அனைவரும் யாழ்ப்பாணத்தைச் சொந்த இடமாகக் கொண்டு கொழும்பில் வசித்து வந்தவர்கள் என்று தெரிவிக் கப்படுகின்றது.
கடந்த மார்ச் மாதம் பளையில், தமிழீழத்தின் காவலர்கள் என்ற துண்டு பிரசுரம் வைத்திருந்த குற்றச்சாட்டில் பயங்கரவாத தடுப்புப் பிரிவினரால் இரு இளைஞர்கள் கைது செய்யப்பட்டிருந்தனர். அதன் தொடர்ச்சியாக வடக்கு மற்றும் தலை நகரிலும் தமிழர்கள் 65 பேர் வரையில் கைது செய்யப்பட்டிருந்தனர். அத்துடன் கோபி, தேவியன், அப்பன் ஆகிய மூவரைத் தேடுவதாகவும் பயங்கரவாத தடுப் புப் பிரிவு அறிவித்திருந்தது.
இந்த நிலையில் கடந்த 11 ஆம் திகதி பதவியா காட்டுப் பகுதி

— 19ஆம் பக்கம் பார்க்க

## சந்தர்ப்பத்துக்கு காத்திருந்து பழி தீர்த்த இராணுவச் சிப்பாய்

### காட்டுமிராண்டித்தனமான தாக்குதலில் பஸ் உரிமையாளர் படுகாயம்



யாழ்ப்பாணம், ஏப்.14
யாழ்.நகர பண்ணை தனியார் பஸ் நிலையத்தில் பஸ் உரிமையாளர் ஒருவர் மீது இராணுவச் சிப்பாய் ஒருவர் காட்டுமிராண்டித்தனமாகத் தாக்குதல் நடத்தியதுடன், அவரின் முகத்தில் துப்பாக்கியின் அடிப்பாகத்தாலும் கடுமையாகத் தாக்கினார்.
நேற்று இரவு இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் ஏழாலை மத்தியைச் சேர்ந்த துரைராஜா மகேந்திரராஜா (வயது -36) என்ற பஸ் உரிமையாளரே படுகாயமடைந்தார்.

19 ஆம் பக்கம் பார்க்க

## தீக்கிரையாக்கப்பட்டு இன்று ஆண்டு ஒன்று பூர்த்தியானது

### காரணமானோர் இன்றும் சுதந்திரமாக

கடந்த ஆண்டு புதுவருடத் தினத்துக்கு முன்னைய நாள் இரவு 'உதயனை' நிலைகுலைக்க ஒரு தாக்குதல் நடத்தப்பட்டது. 'உதயனின்' அச்சு இயந்திரம் 'இனந்தெரியாதோரால்' எரியூட்டப்பட்டது.
அன்றையதினம் தலைக்கவசம் அணிந்து முகத்தை மறைத்த வண்ணம் மூன்று துப்பாக்கிதாரிகள் 'உதயன்' பணி மனைக்குள் நுழைந்தனர். வானத்தை நோக்கித் துப்பாக்கிச் சூடு மேற்கொண்டவாறு அச்சியத்திரம் இருந்த பகுதிக்குச் சென்ற அவர்கள் அச்சியத்திரத்துக்கு பெற்றோல் ஊற்றித் தீ வைத்தனர். அச்சுத்தாள்களும் சேதமாக்கப்பட்டன.
இந்தச் சம்பவம் நடந்து ஓராண்டு பூர்த்தியாகிவிட்டது. இதுவரை இதற்குக் காரணமானவர்கள் நீதியின் முன் நிறுத் தப்படவில்லை. சந்தேகத்தின் பேரிலும் யாரும் கைது செய் யப்படவில்லை.
விசாரணைகள் முடிவுறுத்தப்படாததால், சீர்செய்ய முடியாதவாறு எரியூட்டப்பட்ட அச்சு இயந்திரத்துக்கென இது வரை காப்புறுதி இழப்பீடும் வழங்கப்படவில்லை. சோதனைகள் புதிதல்ல 'உதயனுக்கு'. தடைகளையும் தாண்டி நாள் தோறும் 'உதயன்' தவழ்வான் உங்கள் கைகளில்.

## பிரிட்டனின் அறிக்கையை ஏற்றுக்கொள்ள முடியாது

### இலங்கை அரசு கூறுகின்றது

கொழும்பு, ஏப்.14
பிரிட்டனில் இருந்து வெளியாகியுள்ள அறிக்கை ஏற்றுக் கொள்ளக்கூடியது அல்ல என்று கூறியுள்ளது இலங்கை அரசு. மனித உரிமை நிலைமைகள் மோசமாக உள்ள நாடுகளின் வரிசையில் இலங்கையை மீண்டும் இணைத்துள்ளது பிரிட்டன். அதற்குக் கடும் எதிர்ப்பைத் தெரிவித்துள்ள இலங்கை அரசு, இது ஏற்றுக்

19ஆம் பக்கம் பார்க்க

## மோடியைக் கைக்குள் வைக்கும் கைங்கரியங்கள் ஆரம்பமாகின

### தீவிரமான நடவடிக்கைகள் இலங்கை அரசால் முன்னெடுப்பு

கொழும்பு, ஏப்ரல் 14
இந்திய நாடாளுமன்றத் தேர்தல் ஆரம்பமாகியுள்ள நிலையில் அது குறித்து தனது கவனத்தைத் திருப்பியுள்ளது இலங்கை அரசு. பாரதிய ஜனதாக் கட்சியே ஆட்சியைக் கைப்பற்றும் என்று எதிர்வு கூறப்பட்டுள்ள வேளையில் அந்தக் கட்சியின் பிரதமர் வேட்பாளர் நரேந்திர மோடியுடன் இலங்கை அரசு பேச்சுக்களை ஆரம்பித்துள்ளது என்றும் கூறப்படுகின்றது.
இதுவரை இந்தியாவில் ஆட்சியில் இருந்த காங்கிரஸ் கட்சி இலங்கை அரசுக்குச் சார்பான நிலைப்பாட்டைக் கொண்

19ஆம் பக்கம் பார்க்க

## மோதிவிட்டு பறந்தது டிப்பர்

### காயமடைந்த தம்பதியர் மருத்துவமனையில்

யாழ்ப்பாணம், ஏப். 14
மோட்டார் சைக்கிளில் சென்ற தம்பதியரை மோதி விட்டுத் தப்பிச் சென்றது டிப்பர். அதில் படுகாயமடைந்த தம்பதியர் இருவரும் வழிப்போக்கர்களால் யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.
இந்த விபத்து இயக்கச்சியில் நேற்றுப் பிற்பகல் 3 மணியளவில் இடம்பெற்றது. விபத்தில் சுன்னாகத்தைச் சேர்ந்த சின்னத்தம்பி தர்மலிங்கம் (வயது-46) மற்றும் அவரது

— 19ஆம் பக்கம் பார்க்க

## மாத்தறைப் பெண் சடலமாக விசுவமடுக் கிணற்றில் மீட்பு

கிளிநொச்சி,ஏப்.14
கிளிநொச்சி புன்னை நீராவி பகுதியில் ஆள்களற்ற வீட்டுக்கிணற்றில் இருந்து பெண்ணின் சடலம் ஒன்று நேற்று கிளிநொச்சிப் பொலிஸாரினால் மீட்கப்பட்டுள்ளது. குறித்த பெண் அடித்துக் கொலை செய்யப்பட்ட நிலையில் இழுத்துச் செல்லப்பட்டு கல்லுடன் கட்டி கிணற்றுக்குள் சடலமாகப் போடப்பட்டுள்ளதாக முதற்கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.
சம்பவத்தில் சித்தகந்தவத்த மாத்தறைப் பகுதியைச் சேர்ந்த இராஜசுலோஜினி (வயது - 38) என்ற பெண்ணே சடலமாக மீட்கப்பட்டவர் என தடயப் பொருள்களை வைத்து அடையாளம்காணப்பட்டதாக

19ஆம் பக்கம் பார்க்க

## சர்வதேச புலிகளை தேடுகிறது அரசு

கொழும்பு,ஏப்.14
தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் சர்வதேச செயற்பாட்டாளர்களான விநாயகம் மற்றும் நெடியவன் ஆகியோரை கைது செய்வதற்கு சர்வதேச பொலிஸாரின் (இன்றப் போல்) உதவியை கோருவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளார் பொலிஸ் பேச்சாளர் அஜித் ரோஹண.

— 19ஆம் பக்கம் பார்க்க

## காங்கிரஸ் அரசை போன்று தமிழரை நாம் கைவிடோம்

### நரேந்திர மோடி உறுதி

சென்னை, ஏப்.14
இலங்கைத் தமிழர்களை தற்போது மத்தியிலுள்ள காங்கிரஸ் அரசு கைவிட்டு விட்டது. ஆனால் நாம் ஆட்சியமைத்ததும் இலங்கையிலுள்ள தமிழர்களுக்கு உதவுவோம். அவர்களை ஒருபோதும் கைவிடமாட்டோம் - இவ்வாறு தெரிவித்துள்ளார் பாரதிய ஜனதாக் கட்சியின் பிரதமர் வேட்பாளர் நரேந்திர மோடி.
இந்திய நாடாளுமன்றத் தேர்தல் பரப்புரைகளுக்காக நேற்றுச் சென்னை வந்திருந்தார் நரேந்திர மோடி. அப்போது ஊடகவியலாளர்களைச் சந்தித்துக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

19ஆம் பக்கம் பார்க்க

# அனைத்து இனங்களுக்கும் சுயகௌரவம் உரித்தானது

## அமைச்சர் டியூ. குணசேகர தெரிவிப்பு

கொழும்பு, ஏப்.14

சிங்கள மக்களுக்கு மட்டு மல்ல ஏனைய இனத்தவர் களுக்கும் சுய கௌரவமும், ஆத்ம கௌரவமும் இருக்கின் றது என்று தெரிவித்துள்ளார் சிரேஷ்ட அமைச்சர் டியூ. குண சேகர.



டியூ. குணசேகர.

மாத்தறையில் நேற்று நடை பெற்ற இடதுசாரி அமைப்பு களின் ஆரம்பகாலச் செயற் பாட்டாளரான எஸ்.ஏ.விக்கிரம சிங்கவின் 119 ஆவது ஜனன தின நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரி வித்துள்ளதாவது:

"சிங்கள மக்களுக்கு மட்டுமே சுயகௌரவமும், ஆத்ம கௌர வமும் உரித்தானது அல்ல. அவை அனைத்து இன மக் களுக்குமே உள்ளன. தேசிய ஐக்கியத்தைக் கட்டியெழுப் புவதற்கு நாம் முதலில் நல்ல பண்புகளைக் கொண்டவர் களாக இருக்க வேண்டும். ஏனைய இனங்களின் சுய கௌரவத்தை மதிக்கப்பழகிக் கொள்ள வேண்டும்"- என்று தெரிவித்துள்ளார். (ற)

# தடை குறித்த தீர்மானம் புத்திசாதுரியமானதன்று

## அரசைச் சாடுகின்றார் ராஜீவ விஜேசிங்க எம்.பி.



ராஜீவ விஜேசிங்க

கொழும்பு, ஏப்.14

புலம்பெயர் தமிழ் அமைப்புக் களை தடை செய்வது தொடர் பாக அரசு எடுத்துள்ள தீர்மானம் புத்திசாதுரியமான தீர்மான மாகாது என்று தெரிவித்துள்ள ஆளும் கட்சியின் தேசிய பட்டி யல் நாடாளுமன்ற உறுப்பினர் ராஜீவ விஜேசிங்க, புலம்பெயர் தமிழ் அமைப்புக்களை தடை செய்வதனால் ஏற்படக் கூடிய எதிர்விளைவுகளைக் கருத்திற் கொள்ளாது அரசு இந்தத் தடை உத்தரவைப் பிறப்பித்துள்ளது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரி வித்திருப்பதாவது:

"எமது நாட்டின் தீர்மானம் நிறை வேற்றும் அதிகாரமுடையோரி டம், நல்லிணக்கத்தை ஏற்ப டுத்துவது தொடர்பிலான ஆர் வம் வெகு வரையறுக்கப்பட் டுள்ள அளவிலேயே காணப் படுவதை நான் உணர்கின் றேன். புலம்பெயர் தமிழ் அமைப் புக்கள் சாதகமான முறையில் செயற்பட்ட சந்தர்ப்பங்களை நாம் உரிய முறையில் பயன் படுத்திக்கொள்ளவில்லை.

வெளிவிவகார அமைச்சு நாட் டில் நல்லிணக்கத்தை ஏற்படுத்த எவ்வித முயற்சியையும் எடுக்க வில்லை. உண்மையைக் கண் டறியும் ஆணைக்குழுவின் இறுதி அறிக்கைப் பரிந்துரைக ளுக்கு அமைய புலம்பெயர் தமிழ் அமைப்புக்களுடன் சுமுக உறவுகளைப் பேண வெளி விவகார அமைச்சு முனைப்புக் காட்டத் தவறியுள்ளது. மித வாத கொள்கைகளைப் பின் பற்றும் தமிழர்களையும் சந் தேகக் கண்கொண்டு பார்ப்பத னால் நன்மைகள் ஏற்படப் போவதில்லை.

தன்னார்வ தொண்டுநிறுவனங் களை நெருக்குதல்களுக்கு உள்ளாக்க முயற்சிப்பது உசித மான நடவடிக்கையாக அமை யாது. புலம்பெயர் தமிழ்ச் சமூகம் தொடர்பில் முரண்பட்ட கொள் கைகளை பின்பற்றுவது ஏற்றுக் கொள்ளக்கூடியதல்ல"- என்று அவர் தெரித்துள்ளார். (ற)

# தமிழர் உரிமை வெற்றிபெற ஜய வருடத்தில் பிரார்த்திப்போம்

## புத்தாண்டு வாழ்த்துச் செய்தியில் சரவணபவன் எம்.பி.



மலரும் சித்திரைப் புத்தாண்டு தமிழ் மக்களுக்கு சுபீட்சமாக வும் சாந்தி சமாதானத்தைப் பெற்றுத் தருவதாகவும் இருக்க வேண்டும். நீண்ட நெடுங் காலமாகப் பட்ட துயரங்கள் நீங்கி தமிழர் உரிமைகள் வெற்றிபெறும் வருடமாக ஜய வருடம் அமைய பிரார்த்திப் போமாக. இவ்வாறு தனது புத்தாண்டு வாழ்த்துச் செய்தி யில் தெரிவித்துள்ளார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன்.

அவர் தனது வாழ்த்துச் செய்தியில் மேலும் தெரிவித்துள்ள தாவது:-

'ஜய' என்றால் வடமொழியில் வெற்றி என்று பொருள்படு கிறது. பிறந்திருக்கும் 'ஜய' வருடத்தில் தமிழர் வாழ்வு ஒளி பெற்று உரிமைகளை வென்று வெற்றியை வெளிப்படுத்த வேண்டும். தமிழ் வருடங்களான 60 வருட சுற்றில் 28ஆவது வருடமாக ஜய வருடம் வருகிறது.

ஜய வருடம் வெற்றி வருடமாக மலர்கின்ற போதும் தமிழர் பிரதேசத்தில் எமது மக்கள் இன்றளவும் பல்வேறு நெருக் கடிகளை சந்தித்த வண்ணமே உள்ளனர். போர்க் காலத்தி லும் சரி போர் முடிவுற்ற பின்னரான காலத்திலும் சரி எமது மக்கள் மீதான கெடுபிடிகள் தொடர்ந்த வண்ணமே உள் ளன. இப்படியான நெருக்கடிகளில் இருந்து நாம் விடுபட வேண்டும். எமது மண்ணில் எல்லா உரிமைகளையும் பெற்று சீரும் சிறப்புமாக வாழ்வதற்கு மலரும் ஜய வருடத் தில் நாம் பிரார்த்திப்போம்.

எத்தகைய நெருக்கடிகள் ஏற்படுத்தப்பட்டாலும் தமிழர் பாரம் பரியமும் பண்பாட்டு விழுமியங்களும் எம்மிடத்தில் இருந்து அழிந்துபோய் விடவில்லை. இன்றளவும் தமிழர் வாழ்வில் அவை ஒளியாய் வீசிக்கொண்டே இருக்கின் றன. பறிக்கப்பட்ட உரிமைகளை ஜனநாயக வழியில் வென்று பேதங்கள் இன்றி இந்த ஜய வருடத்தில் நாம் முன்னேறுவோமாக. பிறந்திருக்கும் இந்த புதுவருடத்தில் அனைத்து மக்களுக்கும் சுபீட்சமும் நல்வாழ்வும் கிட்ட இறைவனை வேண்டி அனைவருக்கும் எனது புத்தாண்டு நல் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன் - என்றுள் ளது. (ஐ)

# பொது பல சேனாவின் ஒழுக்கக் கேட்டை காணொலி ஆதாரத்துடன் நிரூபிப்போம்

## ஜாதிக பல சேனா அமைப்புக் கூறுகின்றது

கொழும்பு, ஏப்.14

பொது பல சேனா அமைப்பைச் சேர்ந்த பௌத்த பிக்குகளின் ஒழுக்கக் கேடான செயற்பாடு களை காணொலி ஆதாரங்களு டன் நிரூபிக்கத் தயார் என்றுதெரி வித்துள்ளது ஜாதிக பல சேனா.

கடந்தவாரம் ஜாதிக பல சேனா அமைப்பு நடத்திய ஊடகவிய லாளர் சந்திப்பு ஒன்றில் அத்து மீறி நுழைந்த பொதுபல சேனா அமைப்பினர் குழப்பங்களை விளைவித்தனர். அதன் தொடர்ச் சியாகவே ஜாதிக பல சேனா இவ்வாறு எச்சரிக்கை விடுத் துள்ளது.

இதுகுறித்துக் கருத்துத் தெரி வித்துள்ள ஜாதிக பல சேனா அமைப்பைச் சேர்ந்த வட்ட ரக்க விஜித தேரர்,

"என்னை துண்டு துண்டாக வெட்டப் போவதாக பொதுபல சேனா இயக்கத்தின் பொதுச் செயலர் கலகொட ஹத்தே ஞான சார தேரர், அச்சுறுத்தியிருந் தார். அத்துடன் இனிவரும் காலங் களில் ஊடகங்களுக்கு அறிக்கை வெளியிட்டால் கொலை செய்வ தாகவும் கூறியிருந்தார்.

2013ஆம் ஆண்டில் வில்பத்து காட்டில் பொதுபல சேனா அமைப் பின் பௌத்த பிக்குகள் நடந்து கொண்ட விதம் மிகவும் அநாக ரீகமானது. அது தொடர்பான காணொலி ஆதாரங்கள் காணப் படுகின்றன. குறித்த பௌத்த பிக்குகள் மதுபானம் அருந்தி யிருந்தனர்"- என்று அவர் தெரிவித்துள்ளார். (ற)

# வதிவிட விஸா கோருவோருக்கு மருத்துவச் சான்றிதழ் அவசியம்

கொழும்பு, ஏப்.14

இலங்கையில் வதிவிட விஸா கோருவோருக்கு கட்டாய மருத் துவ பரிசோதனையை நடை முறைப்படுத்த ஆலோசிக்கப் பட்டு வருகின்றது என்று கூறப் படுகின்றது. இலங்கைக்கு புதிய நோய்கள் இறக்குமதி செய்யப் படுவதைத் தடுக்கும் முகமா கவே இந்த நடைமுறை மேற் கொள்ளப்படவுள்ளது என்று சுகாதார அமைச்சு தெரிவித் துள்ளது.

> “ இலங்கைக்கு புதிய நோய்கள், இறக்குமதி செய்யப் படுவதைத் தடுக்கும் முகமாகவே இந்த நடைமுறை மேற் கொள்ளப்படவுள்ளது என்று சுகாதார அமைச்சு தெரிவித் துள்ளது.

முதற்கட்டமாக வதிவிட விஸா வைப் புதுப்பிக்க விண்ணப்பிப் போரிடம் மருத்துவ பரிசோதனை அறிக்கையை கோர அமைச்சு தீர்மானித்துள்ளது. காசநோய், மலேரியா மற்றும் எயிட்ஸ் உட்பட்ட நோய்கள் தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டுள்ள நிலையிலேயே இந்த நடவடிக் கையை முன்னெடுக்கத் தீர் மானித்துள்ளதாகத் தெரிவித் துள்ள அமைச்சு, இந்தத் திட் டத்துக்கு 'ஐஓஎம்' என்ற சர்வ தேச புலம்பெயர்ந்தோருக் கான அமைப்பும் உதவவுள் ளது என்றும் கூறியுள்ளது. (ற)

# மாணவியைக் கடத்தியதாக முறைப்பாடு

யாழ்ப்பாணம், ஏப்.14

இந்தமுறை ஜீ.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவியை இளைஞர் ஒரு வர் கடத்திச் சென்றுள்ளார் என்று முறைப்பாடு செய்யப் பட்டுள்ளதாக சுன்னாகம் பொலிஸார் தெரிவித்தனர்.

பருத்தித்துறையைச் சேர்ந்த 15 வயதுடைய குறித்த மாணவி மருதனார்மடம் பகுதியிலுள்ள பாடசாலை ஒன்றில் கல்வி கற்று வருபவர் என்றும் கடந்த வெள்ளிக்கிழமை அவரை 23 வயதுடைய இளைஞர் ஒருவர் கடத்திச் சென்றுள்ளதாகவும் முறைப்பாட்டில் தெரிவிக்கப் பட்டுள்ளது. இது குறித்து பொலிஸார் விசாரணையை மேற்கொண்டு வருகின்ற னர். (ஐ-4)

# நாட்டை அபிவிருத்தி செய்வதையே போர்க்குற்றம் என்று கூறுகின்றனர்

## சொல்கின்றார் நாமல் ராஜபக்ஷ

கொழும்பு, ஏப்.14

நாட்டை அபிவிருத்தி செய்வ தைப் போர்க்குற்றமாக எதிர்க் கட்சிகள் பார்க்கின்றன என்று குற்றஞ்சாட்டியுள்ளார் நாடாளு மன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ.

மாத்தறையில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குற்றஞ்சாட்டி யுள்ளார்.

அங்கு அவர் மேலும் உரையாற் றும்போது,

"நாட்டின் முழு வரலாற்றிலும் இலங்கையின் ஆட்சியாளர் கள் மேற்குலக நாடுகளுக்குத் தேவையான வகையில் செயற் பட்டுள்ளனர். போரை நிறுத்து மாறு மேற்குலக நாடுகள் கூறும் போது இலங்கையின் ஆட்சி யாளர்கள் அதனை நிறுத்தி னர். தேர்தல் ஒன்று நெருங்கி வரும் போது போரை ஆரம் பிக்குமாறு மேற்குலக நாடுகள் கூறின. இவ்வாறு மேற்குலக நாடுகள் கூறியபடி செயற்பட்ட தலைவர்களுடன் நாங்கள் வாழ்ந்தோம்.

நெஞ்சை நிமிர்த்தி தீர்மானம் ஒன்றை எடுத்து நாட்டில் பயங் கரவாதத்தை ஒழித்தன் காரண மாகவே ஜனாதிபதியை போர்க் குற்றவாளி என்கின்றனர். நாட் டில் வாழும் சகல இனங் களும் சுதந்திரமாக வாழ வழியை ஏற்படுத்திக்கொடுத் தது போர்க்குற்றமா?.

கிராமங்களை அபிவிருத்திசெய்து, விவசாயிகளுக்கு நிவா ரணங் களை வழங்கி, துறைமுகங் கள், விமான நிலையங்கள், வீதி களை நிர்மாணித்தது போர்க் குற்றமா? என்பதை மக்கள் தீர்மானிக்க வேண்டும். சில எதிர்க்கட்சியினருக்கு இந்த அபிவிருத்திகள் போர்க்குற்றங் கள். அபிவிருத்திகள் மேற் கொள்ளப்பட்டால் அவர்களால் ஆட்சிக்கு வர முடியாது என் பதே அதற்கு காரணம்.

அதனால்தான் ஜே.வி.பியும், ஐக்கிய தேசியக் கட்சியும் அபி விருத்திகளை போர்க்குற்றங் களாக பார்க்கின்றன"- என்று தெரிவித்துள்ளார். (ற)

# அவசரகாலச் சட்டம் இப்போது மக்களை அடக்குவதற்காகவே

## கரு ஜெயசூரிய தெரிவிப்பு

கொழும்பு, ஏப்.14

டட்லி சேனாநாயக்க தனது ஆட்சிக் காலத்தில் ஒரு முறை மாத்திரமே அவசர காலச் சட் டத்தைப் பயன்படுத்தினார். ஆனால் தற்போதோ அவசர காலச் சட்டம் மக்களை அடக்கு வதற்கு நித்தமும் பயன்படுத் தப்படுகின்றது - என்று தெரி வித்துள்ளார் ஐக்கிய தேசியக் கட்சியின் பதில் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினரு மான கரு ஜெயசூரிய.

பொரளையில் நேற்று நடை பெற்ற டட்லி சேனநாயக்க வின் 41 ஆவது சிரார்த்த தின வைபவத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

"டட்லி சேனாநாயக்க சலுகை களுக்காக கொள்கைகளை காட்டிக்கொடுக்கும் வஞ்சக அரசியலில் ஈடுபடவில்லை. தனியார் துறை ஊழியர்களுக்கு சம்பள அதிகரிப்பை வழங்க வேண்டிய சந்தர்ப்பத்தில் முத லாளிமார் அதனை வழங்காத தால், பிரதமராக இருந்த டட்லி, அவசரகாலச் சட்டத்தை பயன் படுத்தி தனியார்துறை ஊழி யர்களின் உரிமையை பெற் றுக்கொடுத்தார்.

எனினும் அவசரகாலச் சட்டம் தற்போது இதற்கு முரணாக மக்களை அடக்குவதற்காக பயன்படுத்தப்படுகிறது. நாட் டில் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சியை ஏற்படுத்துவதை டட்லி எதிர்த் தார். டட்லி நிறைவேற்று அதி காரம் கொண்ட ஜனாதிபதி பத வியை வகித்திருந்தால் மக்கள் ஒரு போதும் அதனை மாற்று மாறு கூறியிருக்கமாட்டார்கள்.

அரசியல்வாதி இன்றைய நாள் குறித்து சிந்தித்து செயற்படுவர் எனவும் ராஜதந்திரி எதிர்கால சந்ததியை சிந்தித்து செயற்படு வர் என்று ஆங்கிலத்தில் ஒரு முதுமொழி உள்ளது. டட்லி சேனாநாயக்க அப்படியான ராஜதந்திரியாக நான் காண்கி ன்றேன்."- என்று அவர் மேலும் அங்கு தெரிவித்துள்ளார். (ற)

## ஜய வருட கைவிசேட நேரங்கள்

வாக்கிய பஞ்சாங்கம்

திங்கள் (14.04.2014)
காலை 6.11 - 7.31 மணி வரை, முற்பகல் 10.04 - 12.03 மணி வரை, பிற்பகல் 2.22 - 4.27 மணி வரை, முன்னிரவு 6.21-7.21 மணி வரை .9.15 - 10.23 மணி வரை


புதன் (16.04.2014)
காலை 6.04 - 7.41 மணி வரை, முற்பகல் 7.49 - 9.44 மணி வரை, 9.56 - 11.54 மணிவரை, பிற்பகல் 2.14 - 4.02 மணிவரை, முன்னிரவு 6.13 - 8.00 மணிவரை

திருக்கணித பஞ்சாங்கம்

திங்கள் (14.04.2014)
மாலை 6.02 - 7.30 மணி வரை, பகல் 10.00 - 12.05 மணி வரை.

புதன் (16.04.2014)
காலை 6.01 - 7.37 மணி வரை.

# சந்தைப்படுத்த முடியாத நிலையில் கால்நடைக்கு தீவனமாகும் தக்காளி



தக்காளிப்பழங்களை உண்ணத் தயாராக நிற்கும் பசு

வலி. வடக்கு, ஏப். 14

யாழ். மாவட்ட விவசாயிகள் தமது உற்பத்திப் பொருள்களை சந்தைப்படுத்த முடியாமல் திண்டாடும் நிலை தொடர் கதையாகவே காணப்படுகின்றது.

சுன்னாகம் பகுதியில் தக்காளிச் செய்கையில் ஈடுபடும் விவசாயிகள் தமது உற்பத்திப் பொருளான தக்காளிப் பழத்தை சந்தைப்படுத்த முடியாத நிலையில் அதனை மாட்டுக்கு தீவனமாக தோட்டத்தில் கொட்டி விட்டு சென்றுள்ளதையும் அதனை மாடு உண்பதையும் படத்தில் காணலாம்.

இதேவேளை உடுவில் பிரதேச விவசாயிகளின் உற்பத்திப் பொருள்களான பழவகைகளை கொள்வனவு செய்து அதனை சந்தைப்படுத்தி ஜாம் மற்றும் கோடியல் ஜூஸ்போன்ற உற்பத்திகளை மேற்கொள்ளும் வகையில் பல லட்சம் ரூபா செலவில் உடுவில் பகுதியில் ஐக்கிய நாடுகளுக்கான அபிவிருத்தி நிறுவனம் தொழிற்சாலையை அமைத்துக்கொடுத்துள்ள போதிலும், விவசாயிகளின் சந்தைப்படுத்த முடியாத பழவகைகளை கொள்வனவு செய்வதில் உரிய நிறுவனம் அக்கறை எடுப்பதில்லை என்றும் கவலை தெரிவிக்கின்றனர். (வ-86)

## யாழ்.ப.நோ.கூ.ச. பணியாளருக்கான கொடுப்பனவு வழங்கல்

யாழ்ப்பாணம்,ஏப்.14

யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு பணியாளர்களுக்கு வழங்க வேண்டிய கொடுப்பனவுகளை வழங்கி வருகின்றது.

கடந்த 2010ஆம் ஆண்டுக்கான விடுமுறை நாளுக்குரிய கொடுப்பனவு மற்றும் கடந்த பெப்ரவரி மாதத்துக்கான வாழ்க்கை செலவுப்படி, சித்திரை புத்தாண்டுக்குரிய முற்பணம் போன்ற கொடுப்பனவுகள் வழங்கப்பட்டுள்ளன.

மேற்படி சங்கம் தற்போது ஓரளவு லாபத்தில் செயற்பட்டு வருவதால் இந்தக் கொடுப்பனவுகள் இயக்குநர் சபையின் அனுமதியுடன் வழங்கப்பட்டுள்ளன.

அத்துடன் 2010ஆம் ஆண்டு மற்றும் கடந்த மார்ச் மாதத்துக்கான வாழ்க்கைச் செலவுப்படி போன்ற கொடுப்பனவுகளும் விரைவில் வழங்கப்படவுள்ளதாக சங்க வட்டாரங்கள் தெரிவித்தன. (வ-17)

## பொலித்தீன் சேகரிக்க தனி கொள்கலன்கள்

### புதுவருடத்தை முன்னிட்டு மாநகர சபை முன்மாதிரி



நடைபாதை கடை சுற்றாடலில் வைக்கப்பட்ட கொள்கலன்

சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு யாழ்.முனீஸ்வரன் வீதியில் பொது நூல் நிலையத்துக்கு அருகில் உள்ள நடைபாதை விற்பனை நிலையச் சுற்றாடலில் பொலித்தீன்களைச் சேகரிப்பதற்கென தனியான கொள்கலன்கள் வைக்கப் பட்டுள்ளன.

இந்த கொல்கலன்களிலேயே கழிவு பொலிதீன்கள் மற்றும் சொப்பிங் பைகளைப் போடுமாறு யாழ்.மாநகர சுகாதாரப் பகுதியினர் அறிவுறுத்தியுள்ளனர்.

நடைபாதைகடைகளில்பொலித்தீன் பயன்பாடு அதிகமாகக் காணப்பட்டதால் இம்முறை அவற்றை சேகரிப்பதற்காக இவ்வாறான புதிய நடைமுறை பின்பற்றப்பட்டிருப்பதாக சுகாதார பகுதி அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (வ-17)

# உலக அமைதி, மழை வேண்டி யாழ்.நகரில் நேற்று பேரணி

யாழ்ப்பாணம்,ஏப்.14

புத்தாண்டில் உலக அமைதியும் சீரான மழையும் வேண்டி அகில இலங்கை திருமறை மன்றம் சைவ மகா சபை என்பன இணைந்து ஆன்மிகப் பேரணி ஒன்றை நேற்று யாழ்.நகரில் ஞாயிற்றுக் கிழமை நடத்தின. சத்திரச் சந்தி யாழ். ஞான வைரவர் ஆலயத்தில் விசேட வழிபாடுகள், நாயன்மார்களுக்கான சிறப்புப் பூசைகள் இடம்பெற்று திருமறை குறித்த உரைகளைத் தொடர்ந்து பேரணி அங்கிருந்து ஆரம்பமானது.

சமய குரவர்கள் திருநாவுக்கரசர் சுந்தரமூர்த்தி நாயனார், சம்பந்தர், மாணிக்கவாசகர் ஆகியோரது உருவச் சிலைகளைத் தாங்கிய பல்லக்கு திருமறை நூல்களைக் கொண்டதாக பேரணியின் முன்னே வர அதைத் தொடர்ந்து அறநெறிப் பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், இந்து மதத்தைச் சேர்ந்த பலருடன் தமிழகத்தில் இருந்து வருகை தந்த சக்திவேல் முருகனார் அவரது குழுவினர்களும் பேரணியில் கலந்து கொண்டனர்.



பேரணியில் கலந்துகொண்ட மக்கள்

பேரணி ஞான வைரவர் ஆலயத்திலிருந்து கே.கே.எஸ்.வீதி- ஆஸ்பத்திரி வீதி, கஸ்தூரியார் வீதி, ஸ்ரான்லி வீதி வழியாக மீண்டும் கே.கே.எஸ் வீதியினூடாக சிவத்தொண்டன் நிலையத்தைச் சென்றடைந்து அங்கிருந்து இந்துக் கல்லூரி வீதி, அரசடி வீதி, குமாரசாமி வீதி வழியாக சிவகுருநாத இல்லத்தைச் சென்றடைந்தது. அங்கும் விசேட பூசைகள் இடம்பெற்றன.

(வ-7-86-17)

## கடையில் வைக்கப்பட்டிருந்த தங்க மோதிரம் அபகரிப்பு

### பொலிஸ் விசாரணையின் பின் மீள ஒப்படைத்த நபர்

தென்மராட்சி, ஏப்.14

நகை உற்பத்தி நிலையங்களுக்கு கற்கள் விற்பனை செய்யும் நபர் கடையில் வைக்கப்பட்டிருந்த சுமார் பத்தாயிரம் ரூபா பெறுமதியான மோதிரத்தை அபகரித்து பின்னர் பொலிஸ் விசாரணையில் உண்மையை ஏற்றுக்கொண்டு மீள வழங்கியுள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் சாவகச்சேரி நகர்ப் பகுதியில் இடம்பெற்றது.

முதல் நாள் கடையில் விட்டுச் சென்ற கைப்பையை வாங்குவதற்கு வந்த இந்த நபர் நகை உற்பத்தியாளர் கைப்பையை எடுக்க அறையினுள் சென்ற போது உற்பத்தி செய்து பட்டறையில் வைக்கப்பட்டிருந்த தங்க மோதிரத்தை எடுத்து மறைத்து வைத்துள்ளார்.

கைப்பையைக் கொடுத்து விட்டுப் பார்த்த போது மோதிரத்தைக் காணாததால் அவ்விடத்தில் கடமையிலிருந்த பொலிஸாரிடம் முறையிட்டார். பொலிஸார் விசாரித்தபோது மறைத்து வைத்திருந்த மோதிரத்தை எடுத்துக் கொடுத்துள்ளார்.

உற்பத்தியாளர் பெருமனதுடன் அவரை மன்னித்து அனுப்பியுள்ளார். (வ-9)

# மத்தியஸ்த சபைக்குப் புதிய அலுவலரை நியமிக்க ஏற்பாடு

### பதவிக்காலம் நிறைவடைவதால்

அச்சுவேலி, ஏப்.14

பிரதேச செயலர் பிரிவு வாரியாகச் செயற்பட்டு வரும் மத்தியஸ்த சபைகளில் பதவிக் காலம் நிறைவடையும் தவிசாளர், உப தவிசாளர் மற்றும் உறுப்பினர்கள் பதவிகளுக்கு புதியவர்களை நியமிப்பதற்கான ஏற்பாடுகளை மத்தியஸ்த சபைகள் ஆணைக் குழு பரிந்துரை செய்துள்ளது.

யாழ்.மாவட்டத்தில் கோப்பாய் பிரதேச செயலர் பிரிவு, சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவு, பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவு மூன்றுக்கும் நேர்முகப் பரீட்சை அடுத்த வாரம் நடைபெறவுள்ளது.

நிதி அமைச்சின் கீழ் செயற்படும் மத்தியஸ்த சபைகளின் ஆளணி நியமனம் மற்றும் செயற்பாடுகளை மத்தியஸ்த சபைகள் ஆணைக்குழு மேற்கொண்டு வருகின்றது. அந்த வகையில் நேர்முகத் தேர்வுக்கு தோற்றவிருப்பவர்களுக்கு அழைப்புக் கடிதங்கள் ஆணைக்குழுவின் செயலர் அனுப்பி வைத்துள்ளார். கோப்பாய் பிரதேச செயலர் பிரிவுக்கான நேர்முகத் தேர்வு 21 ஆம் திகதி பிரதேச செயலகத்தில் நடைபெறவுள்ளது.

மத்தியஸ்த சபை பதவிகளுக்கு விண்ணப்பதாரர்கள் நேரடியாக விண்ணப்பிக்க முடியாது. பதவி வழி அலுவலர்கள் மற்றும் பொது நிறுவனங்கள் பரிந்துரை ரீதியில் விண்ணப்பங்களை சமர்ப்பிக்க வேண்டும்.

அந்த வகையான பரிந்துரை அடிப்படையில் பொருத்தமானவர்கள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

நேர்முகப் பரீட்சை மூலம் தெரிவு செய்யப்படுவோர் குறுகிய கால பயிற்சியின் பின்னர் மதிப்பீட்டு பரீட்சை மூலம் இறுதித் தெரிவு நடைபெறவுள்ளது. யாழ்.மாவட்டத்தில் மத்தியஸ்த சபைகளில் பெண்களின் பங்களிப்பு முற்று முழுதாக இல்லாமல் இருப்பதால் இந்த முறை குறிப்பிட்ட வீதம் பெண்களும் மத்தியஸ்த சபை உறுப்பினர்களாக இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர். (வ-11)

## இன்று தேர்த் திருவிழா

சண்டிலிப்பாய், ஏப். 14

சண்டிலிப்பாய் அருள்மிகு சீரணி நாகபூஷணி அம்பாள் தேவஸ்தான வருடாந்த மஹோற்சவ தேர்த்திருவிழா இன்று திங்கட்கிழமை காலை 9 மணிக்கு வசந்தமண்டபத் தீபாராதனையும் தொடர்ந்து முற்பகல் 10.30 மணிக்கு இரதோற்சவமும் பிற்பகல் 2 மணிக்கு இரத அவரோகணமும் நடைபெறும்.

நாளை செவ்வாய்க்கிழமை தீர்த்தோற்சவம் காலை 9 மணிக்கு வசந்தமண்டபத் தீபாராதனையும் இடம்பெற்று மாலை 5 மணிக்கு கொடியிறக்கம் நடைபெறும். *(சிறப்பிதழ் 10,11 ஆம் பக்கங்களில்)* (ஔ)

* * *

யாழ்ப்பாணம்,ஏப்.14

வேலணை, மண்கும்பான் வெள்ளைப்புற்றடி திருவருள் மிகு ஸ்ரீ வீரகத்தி விநாயகர் தேவஸ்தானத்தின் தேர்த்திருவிழா இன்று திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கும், பிற்பகல் ஒரு மணிக்கு இரத அவரோகணமும் இடம்பெறும்.

நாளை செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு தீர்த்தோற்சவமும் தொடர்ந்து மஹாயாக கும்பாபிஷேகமும் நடைபெறும். (ஔ)

*(சிறப்பிதழ் 6,15 ஆம் பக்கங்களில்)*

## தமிழர் வாழ்வு வெற்றிபெற பிரார்த்திப்போம்...



தமிழர் பிரச்சினை சர்வதேச மட்டத்துக்கு கொண்டுசெல்லப்பட்டிருக்கும் தருணத்தில் வெற்றி வருடமாக ஜய வருடம் பிறக்கிறது. இந்த வருடத்தில் நாம் அனைவரும் ஒன்றுபட்டு அந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்திக் கொள்ள வேண்டும் இந்த நம்பிக்கையோடு பிறந்திருக்கும் புத்தாண்டை கொண்டாடுவோம். இவ்வாறு தனது புது வருட வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராசா.

புத்தாண்டு வாழ்த்துச் செய்தியில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

மலரும் புத்தாண்டு அனைவருக்கும் வெற்றிகரமாக அமைய வேண்டும். பேதங்கள் இன்றி அனைத்து மக்களும் சமமான உரிமைகளைப் பெற எல்லோரும் ஒன்றிணைந்து இந்த நன்நாளில் பிரார்த்திப்போம். கடந்தகால போர் நடவடிக்கைகளால் எல்லாவற்றையும் இழந்து நிற்கும் எமது மக்கள் எதிர்காலத்தை வெற்றிகொள்ள 'ஜய' வருடத்தில் உறுதிபூணவேண்டும். அரசியல் ரீதியாக தமிழ் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் இன்று சர்வதேச மட்டத்துக்கு பரவியுள்ளன. இந்த நிலையில் பிறந்திருக்கும் புதுவருடத்தில் தமிழ் மக்களின் விடிவிற்காய் நாம் அனைவரும் ஒன்றுபடுவோம். இந்த நன்நாளில் அனைவருக்கும் எனது புத்தாண்டு நல் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன் - என்றுள்ளது.

## வெற்றி தரும் ஆண்டாக இருக்கட்டும்...



மலரும் ஜயவருட சித்திரைப் புத்தாண்டு எம்மவர் எல்லோருக்கும் சகல சௌபாக்கியங்களையும் வழங்கும் ஒன்றாக அமைய வேண்டும் என பிரார்த்திக்கிறோம். வடக்கு மாகாணசபையை பொறுத்தவரை இது எமது முதலாவது சித்திரைப் புத்தாண்டு ஆகும். நீண்ட காலப் போர்ச் சூழ்நிலையில் இடப்பெயர்வுகள், பொருளாதாரத் தடைகள் என எண்ணில்லா இன்னல்களைச் சந்தித்த எமது மக்கள் மிகுந்த எதிர்பார்ப்புடன் மாகாண சபைத் தேர்தலில் வாக்களித்தனர் . வட மாகாணத்தில் இன்னும் இடம்பெயர்ந்து முகாம்களிலும் உறவினர்களது வீடுகளிலும், வாடகை வீடுகளிலும் வாழும் எம்மக்கள் தமது சொந்த இருப்பிடங்களுக்கு திரும்பி தமது வாழ்வாதாரத்தைத் தாமே தேடிக்கொள்ளக்கூடிய நிலைமை ஏற்பட வேண்டும்.

தமிழ் இனத்தின் தாயகம், தேசியம், தன்னாட்சி, சுய நிர்ணயம் என்ற கோட்பாடுகளின் அடிப்படையில் ஐக்கிய இலங்கைக்குள் எமது அரசியல் உரிமைகளையும் அதிகாரப் பகிர்வையும் பெற்றுக்கொள்ளக்கூடிய ஆண்டாக இந்த சித்திரைப் புத்தாண்டு அமையவேண்டும் எனப் பிரார்த்திப்பதுடன் எமது மண்ணிலும் பிறநாடுகளிலும் வாழும் புலம் பெயர் உறவுகளுக்கும் எமது சித்திரைப் புத்தாண்டு நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்வதுடன் இந்த ஜய வருடம் எல்லோருக்கும் வெற்றி தரும் வருடமாகவும் இருக்கப் பிரார்த்திக்கின்றோம்.

*சி. வீ. கே. சிவஞானம்*
*அவைத் தலைவர், வடக்கு மாகாண சபை.*

## வாழ்வில் அமைதியைத் தரும் ஆண்டாக அமையட்டும்...



இந்தப் புத்தாண்டு அனைவரது வாழ்விலும் சமத்துவத்தையும், சுதந்திரத்தையும், அமைதியையும், செல்வச் செழிப்பையும் தரும் ஓர் இனிய ஆண்டாக அமைய வாழ்த்துகின்றேன்.

இன்றைய புத்தாண்டு நாள் இத்திருநாட்டின் இரு சமூகங்களையும் ஒன்றிணைக்கும் கலாசார முக்கியத்துவம் வாய்ந்த பெருநாளாகும். உங்கள் எதிர்பார்ப்புகள் அனைத்தும் நிறைவேறும் ஓர் ஆண்டாக அமைய வேண்டும் என பிரார்த்தித்துக் கொள்கின்றேன். இலங்கை இன்று சவால்களுடனும் தாங்கொணாச் சுமைகளுடனுமே இந்தப் புத்தாண்டில் அடியெடுத்து வைக்கின்றது. வெறுமனே புத்தாண்டு வாழ்த்துக்களை சொல்வதால் இந்த ஆண்டு ஒரு சௌபாக்கியமான ஆண்டாக மாறிவிடாது. நாம் இன்றைய சூழ்நிலையில் எமக்கு மத்தியில் இருக்கும் சவால்களையும், முட்டுக்கட்டைகளையும் சரியாக அறிந்து ஒரு மாற்றத்தை நோக்கி பயணிக்கத் தயாராக வேண்டும். அப்போது மட்டுமே எமது அடுத்த தலைமுறையினருக்கு ஒரு நல்ல நாட்டை விட்டுச் செல்ல முடியும்.

கடந்த பல ஆண்டுகளாக நாம் அனுபவித்து வரும் இன்னல்கள் ஒழிய வேண்டும். இதற்காக நாம் வழமை போல ஆட்சியை மாற்றுவது, நிறங்களை அல்லது முகங்களை மாற்றுவது என்றால் நாம் எதிர்பார்க்கும் நீதியான, அமைதியான, மனிதர்களை முதன்மைப்படுத்தி, நல்லாட்சி சூழல் ஒரு போதும் ஏற்படாது. நாம் அனைவருமாய் ஒன்றிணைந்து ஒரு புதிய பாதையை அமைப்போம். மனிதம் முதன்மைப்படுத்தப்பட்ட, நீதியான, அமைதியான நல்லாட்சிமிக்க ஒரு தேசத்தை கட்டியெழுப்புவோம்.

*அ. அஸ்மின்,*
*வடக்கு மாகாண சபை உறுப்பினர்.*

## துயர்கள் விடை பெறட்டும்...



மலர்ந்த ஜய வருடம் நாம் அனுபவித்து வருகின்ற துயர்கள் அனைத்துக்கும் விடை தரும் ஆண்டாக அமையட்டும். காணாமற் போகச்செய்யப்பட்டோர் தொடர்பாக நல்ல செய்தியைக் கொண்டுவருவதாகவும், வெறுமனே சந்தேகத்தின் பெயரில் கைதுசெய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்வதாகவும், பலதசாப்தங்களாக நீடித்து வருகின்ற எமது உரிமைப்போருக்கான நல்லதொரு அரசியல் தீர்வைக் கொண்டுவருவதாகவும், இலங்கை மண்ணில் தமிழ்ச் சமூகமும் சமபங்காளிகள் என்பதை உலகம் ஏற்றுக்கொள்ளக்கூடியதாகவும், இந்த மண்ணில் ஒவ்வொரு மனிதனும் சுயமரியாதையுடன் வாழ்வதற்கு உரித்துடையவன் என்பதைப் பறைசாற்றுவதாகவும் அமையட்டும்.

எம்முடன் புத்தாண்டைப் பகிர்ந்துகொள்ளும் சிங்கள சகோதரர்களும் எமது உரிமைப் போராட்டத்தின் நியாயங்களைப் புரிந்துகொண்டு, எமக்காகக் குரல்கொடுப்பதற்கும் எம்முடன் இணைந்து எமது விடுதலைக்காக உழைப்பதற்கும் முன்வரவேண்டும் என்று புத்தாண்டு தினத்தில் வேண்டுகோள் விடுப்பதுடன் அவர்களுக்கும் எமது உளமார்ந்த புத்தாண்டு நல்வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

*சிவசக்தி ஆனந்தன்,*
*நாடாளுமன்ற உறுப்பினர்.*

## வைராக்கியத்தை வளர்த்துக் கொள்வோம்...



தமிழினத்தின் விடுதலைப்போராட்டத்தை நடத்திய தமிழ் மக்களின் மீட்பர்களை முள்ளிவாய்க்கால் களப்புக்குள் குறுக்கி, இலங்கை அரசின் வாக்குறுதிகளை நம்பி மூர்ச்சை இழக்கச்செய்த பின்னர் இலங்கை அரசின் நயவஞ்சக ஏமாற்றுச் செயல்கள் பற்றி நல்லதொரு படிப்பினையை கற்றுக்கொண்ட சர்வதேச நாடுகள், இன்று ஈழத்தமிழர் விடுதலைப் போராட்டத்தின் தோற்றப்பாடுகளையும், அதன் நியாயப்பாடுகளையும் விளங்கிக்கொள்ளுகின்ற கால மாற்றம் நிகழ்ந்துள்ளது.

ஈழத்தமிழர் நலன்கள் தொடர்பில் சர்வதேச அரசுகளின் மனங்களில் ஏற்பட்டுள்ள இத்தகைய மாற்றமானது இன்னும் இன்னும் விசாலம் பெறும் போது, எமது மகிழ்ச்சியும் கூடுதல் இரட்டிப்புப் பெறும்.

பேரரசுகளின் இந்த மனமாற்றம் நிச்சயம் வஞ்சிக்கப்பட்ட தமிழ் இனத்துக்கு நீடித்து நிலைத்து நிற்கக்கூடிய நிரந்தர அரசியல் தீர்வைப் பெற்றுத்தருவதாக அமையவும், இதுநாள் வரையான இழப்புகள், வலிகளுக்கு மருந்திடுவதாக அமையவும் பிறக்கின்ற தமிழ் புத்தாண்டு வளம் சேர்க்க வேண்டும் என்று வாழ்த்துகின்றோம்.

மிகப்பெரிய தியாகங்கள், அர்ப்பணிப்புகளுக்குப்பின்னர் இன்று நம் மனங்களில் எழுந்துள்ள நம்பிக்கை ஒளிக்கீற்று மேலும் பிரகாசம் பொருந்திய ஒளியாக உயிர்ப்பித்திருக்க, எல்லோருக்கும் தமிழ் தேசியக்கூட்டமைப்பின் சார்பில் உளம் கனிந்த நல்வாழ்த்துக்களை, பிறந்துள்ள இப்புதிய ஆண்டில் கூறும் அதேவேளை, விடுதலை இலக்கு நோக்கிய எமது பயணத்தில் மேலும் கடுமையாக பணி செய்வோம் என்று வைராக்கியத்தை வளர்த்துக்கொள்வோம்.

*மருத்துவர் சி. சிவமோகன்,*
*வடமாகாண சபை உறுப்பினர்.*

# இலங்கையில் நல்லிணக்கத்துக்கு சர்வதேச ஒத்துழைப்பு தேவை

### *ஐரோப்பிய ஒன்றியம் அறிவுரை*

கொழும்பு, ஏப் 14

இலங்கையில் தேசிய நல்லிணக்கம் ஏற்படுவதற்கு சர்வதேசத்துடன் இணைந்து செயற்பட வேண்டும் என இலங்கை அரசுக்கு ஐரோப்பிய ஒன்றியம் அறிவுரை வழங்கியுள்ளது.

இது குறித்து தகவல் அளித்துள்ள ஐரோப்பிய ஒன்றியத்தின் கொழும்பு அலுவலகம், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் பரிந்துரைகளுக்கு ஐரோப்பிய ஒன்றியம் தொழில் நுட்ப உதவிகளை வழங்கும் என்றும் தெரிவித்துள்ளது.

அத்துடன் இந்த உதவிகள் இலங்கையில் நல்லிணக்கத்துக்கு வழியை ஏற்படுத்தும் என்று இலங்கைக்கு ஆலோசனை தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள்சபையின் யோசனையை, இலங்கை நடைமுறைப்படுத்தாது என்று இலங்கை அரசு அடிக்கடி கூறிவருவதை அடுத்தே, ஐரோப்பிய ஒன்றியம் இந்த ஆலோசனையை வழங்கியுள்ளது.

இதேவேளை புலம் பெயர் அமைப்புக்களை தடைசெய்தமை நல்லிணக்கத்தை பாதிக்குமா என்ற கேள்விக்கு பதிலளித்துள்ள ஐரோப்பிய ஒன்றிய கொழும்பு அலுவலகம், தடை குறித்து இலங்கை அரசு இன்னும் சர்வதேச சமூகத்துக்கு விளக்கமளிக்கவில்லை என்று சுட்டிக்காட்டியது. (ஐ)


## மரண அறிவித்தல்

### மதுரா சிவகலாபன்



உடுப்பிட்டி இலக்கணாவத்தையைப் பிறப்பிடமாகவும், கொழும்பை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மதுரா சிவகலாபன் நேற்று (13.04.2014) ஞாயிற்றுக்கிழமை அகால மரணமானார்.

அன்னார் சிவகலாபனின் அன்பு மனைவியும் திரு .திருமதி வைகுந்தநேசன் - தயாநிதி (எமரால் காட்வெயர் உரிமையாளர்) தம்பதியரின் பாசமிகு மகளும் மதுவந்தி, மதுஷன் (ஆஸ்திரேலியா) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், திரு திருமதி திருஞானசம்பந்தமூர்த்தி - பரமேஸ்வரி தம்பதியரின் மருமகளும் ஆவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித் தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இலக்கணாவத்தை, உடுப்பிட்டி

தகவல்: செ. வைகுந்தநேசன் (தந்தை), (எமரால் ஹாட்வெயர்)

## மரண அறிவித்தல்

### கந்தையா சின்னத்தம்பி (சீனிக்குட்டி)



அளவெட்டியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா சின்னத்தம்பி நேற்று முன்தினம் (12.04.2014) சனிக்கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா - பார்வதி தம்பதியரின் அன்புமகனும் காலஞ்சென்ற சிவசம்பு - கமலாதேவி தம்பதியரின் அன்புமருமகனும் நாகேஸ்வரியின் அன்புக்கணவரும் சிவகௌரி (வைத்திய கலாநிதி), வாசுகி (ஆசிரியை யா/தும்பளை சிவப்பிரகாச மகாவித்தியாலயம்), சண்முகப்பிரியா (கணக்காய்வாளர்), தயாநிதி (வைத்திய கலாநிதி), கிருஷ்ணலீலா (பரீட்சைகள் நிறை வேற்று அலுவலர்), கஜேந்திரன் (மிருக வைத்திய கலாநிதி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சிவகுமார் (பொறியியலாளர்), அரவிந்தன் (அதிபர் கற்கோவளம் MMTS), லக்ஷ்மன் (பொறியியலாளர்), முகுந்தன் (பொறியியலாளர்), கோபிநாத் (பொறியியலாளர்), வித்தியாருணி (கணக்காளர்) ஆகியோரின் அன்புமாமனாரும் சுருதி, சங்கவி, கர்ஷன், அபிலாஷினி ஆகியோரின் பாசமிகு பேரனும் காலஞ்சென்ற பொன்னுத்துரை மற்றும் வீ. கே. நடராசா (ஓய்வு பெற்ற நுண்கலைப்பீட விரிவுரையாளர்) காலஞ்சென்ற அன்னம்மா மற்றும் நாகம்மா, மயில்வாகனம் ஆகியோரின் அன்புச்சகோதரனும் சிவபாக்கியம், சரஸ்வதி, அப்புத்துரை, சுந்தரலிங்கம், புஷ்பராணி, குலேந்திரன், தனலட்சுமி, விஜயலட்சுமி, யோகேஸ்வரி காலஞ்சென்ற ராஜேஸ்வரி மற்றும் மகேந்திரன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (15.04.2014) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணியளவில் ஆரம்பமாகி பூதவுடல் தகனக்கிரியைக்காக கேணிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்தச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்

மயிலோடை, அளவெட்டி வடக்கு
021 3737296

தகவல்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்

# ஜய வருடப் புத்தாண்டு வாழ்த்துக்கள்

## அனைவருக்கும் 'ஜயம்' கிட்டட்டும்



இன்று புது வருடப் பிறப்பு. இந்தப் புதிய வருடத்துக்கு 'ஜய' வருடம் என்று பெயர். 'ஜயம்' என்றால் வெற்றி. ஆகவே இன்று பிறந்திருக்கும் புதுவருடத்தில் எல்லாமே வெற்றிதான். இந்த நாட்டில் வாழ்கின்ற அனைத்துப் பிரஜைகளும் ஆனந்த மயமான இனிய நல் வாழ்வு வாழ வேண்டும். எல்லோரும் மகிழ்ச்சியுடன் நன்றாக இருக்க வேண்டும் இதுவே எமது விருப்பம்.
இன்றைய புத்தாண்டு முதலாவது இதுவரை நாம் பட்ட துன்ப துயரங்கள் நீங்கப் பெற்று இனி மங்கலமும் சுபீட்சமும் நிறைந்த நல்வாழ்வு கிடைக்க வேண்டும். 'ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு' என்பதை மனதிற்கொண்டு எல்லோரும் ஒற்றுமையாக இன்பம் நிறைந்த மகிழ்ச்சியான ஆண்டில் காலடி எடுத்து வைக்க வேண்டும்.
"இனி இன்பமே எந்நாளும் துன்பம் இல்லை" என்றபடி நாம் நன்கு வாழ்ந்து முன்னேற்றப் பாதையில் செல்ல எல்லாம் வல்ல நல்லைக் கந்தனை வணங்கி நல்லைக் குருமணியின் பாத பங்கஜம் பணிந்து அனைவருக்கும் அருளாசிகள் நல்கி வாழ்த்தி வணங்குகின்றோம்.
"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

*ஆதீன குருமுதல்வர்.*


## சித்திரைப் புத்தாண்டை வரவேற்போம்!



தமிழ் பேசும் மக்களினதும் சிங்களம் பேசும் மக்களினதும் பொதுவான பாரம்பரியத்தை நினைவுபடுத்தும் விதத்தில் இரு சாராரையும் ஒருங்கு சேர்த்து கொண்டாட வைப்பதுதான் சித்திரைப் புத்தாண்டு. எமது இரு தரப்பு அரசியல்வாதிகளும் இப்பேர்ப்பட்ட பொது விடயங்களைப் போற்றிப் பேசாது எமது வேற்றுமைகளையே முன்னிறுத்தி வந்துள்ளனர். அதன் காரணமாகத்தான் இன்று நாட்டில் பெரும் நெருக்கடி ஏற்பட்டுள்ளது என்று வட மாகாண முதலமைச்சர் விடுத்துள்ள புத்தாண்டுச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
முதலமைச்சரின் செய்தியில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது:
மனிதர்களாகப் பிறந்து நாம் அனைவரும் செழிப்பு. மகிழ்ச்சி. அமைதி. மன நிறைவு ஆகியவற்றையே எம் வாழ்க்கையில் எதிர்பார்க்கின்றோம். இவற்றைப் பெற வேண்டுமானால் எம் எல்லோர் இடையேயும் கொடுத்து வாங்கும் பக்குவம் மலர வேண்டும். சிறுபான்மையினர் சில விடயங்களைப் பெரும்பான்மையினரிலும் பார்க்க நல்ல விதமாக நடத்திக் கொண்டு போகின்றார்கள் என்ற காரணத்துக்காகப் பெரும்பான்மையினர் கோபம் கொண்டு சிறுபான்மையினருக்குத் தீங்கு விளைவிக்க எண்ணுவது தவறு.
பிரிட்டனில் ஸ்கொட்லாந்தைச் சேர்ந்தவர்கள் ஆங்கிலேயர்களிலும் பார்க்கச் சிறப்பாக ஆற்றினார்கள். அதற்காக ஸ்கொட்லாந்தைச் சேர்ந்தவர்களுக்குத் தீங்கிழைக்கவோ, தொல்லை கொடுக்கவோ, பக்கச் சார்பாக அவர்களுக்கு எதிராக நடந்து கொள்ளவோ ஆங்கிலேயர்கள் எத்தனிக்கவில்லை. அதனால் பிரிட்டன் உலகின் பலம் மிக்க நாடுகளில் ஒன்றாக இன்றும் இடம் வகிக்கக் கூடியதாக இருக்கின்றது. புத்தாண்டு காலமானது கொடுத்து வாங்கும் பழக்கத்துக்கு இடமளிக்கும் ஒரு காலம். எமது நாடு நன்நிலை அடைந்து முன்னேற்றம் காண வேண்டுமானால் எமது அரசியல்வாதிகள் தமது அரசியல் பரிமாற்றங்களில் இந்தக் கொடுத்து வாங்கும் பக்குவத்தைப் பிரதிபலிக்க முன்வரவேண்டும். சகலருக்கும் இனிவரும் புத்தாண்டு சென்ற ஆண்டுகளிலும் பார்க்க இனிமையானதாக அமைய வேண்டும்! புத்தாண்டு பிறக்கும் போது எம்மவரிடையே தெளிந்த மனமும் பொது நல சிந்தையும் உதயமாக வேண்டும் என்று வாழ்த்துகின்றேன் - என்றுள்ளது.

*க. வி. விக்னேஸ்வரன்,*
*வடக்கு மாகாண முதலமைச்சர்.*

## நல்லதையே எண்ணுவோம்



இறைவன் எம்மை மனிதனாகப் படைத்ததுக்கு நன்றி சொல்வோம். எண்ணற்ற பிறவிகள் உலகில் இருந்தாலும் மானிடம் மகிமை மிக்கது. இந்தப் புவியை நல்ல முறையில் பேணி நன்றாய் வாழ அனைவரும் முயற்சி செய்ய வேண் டும். புதிய வருடம் பிறக்கிறது. ஜய வருடம் என்ற நாமத்தோடு பிறக்கும் இந்தப் புத்தாண்டை அனைவரும் வரவேற்போம். புதிய ஆண்டில் புதிய சிந்தனைகளோடு புனிதமான மனிதர் களாக வாழ அனைவரும் முற்படுவோம். கடந்து செல்லும் வருடத்தில் நாம் சந்தித்த நல்ல சந்தர்ப்பங்களை நினைந்து இறைவனுக்கு நன்றி கூறுவோம். நாம் விட்ட தவறுகளை நினைத்து வெட்கப்படுவோம். புதிய ஆண்டில் ஏதாவது நல்ல காரியங்களைச் சாதிக்க திட்டமிடுவோம். எல்லா மனிதர்களும் பகையின்றி பயமின்றி பண்புடன் வாழ வழி கேளுங்கள்.
இயற்கை தெய்வங்களிடம் இனிய வாழ்வு கேளுங்கள். மழை வேண்டும். மண் செழிக்க வேண்டும். நெல் விளைய வேண்டும். எல்லோரும் உண்பதற்கு உணவு தா ! என உருக்கமாக வேண்டுதல் செய்யுங் கள். புத்தாண்டு பிறக்கும் இந்த நாளில் அனைவருக்கும் இதய பூர்வமான வாழ்த்துக்களையும். அன்பையும். ஆசியையும் தெரிவித்துக் கொள்வதில் ஆனந்தமடைகின்றேன். அன்பர்களே ! அனைவரும் ஒன்று சேர்ந்து உழைப்போம். எங்கள் மண்ணை வள மாக்குவோம். அல்லலுற்று அவலப்படும் ஆதரவற்றவர்களை அரவணைப்போம். ஏழைகளின் பங்காளர்களாக எல்லோருக்கும் உதவுவோம். நல்லதை எண்ணுவோம். நாளைய நாள் நல்ல நாளென ஒவ்வொரு நாளையும் வரவேற்போம். ஒவ்வொரு நிமிடத்தையும் உயிராக மதித்து காலத்தின் பெறுமதியை கனவிலும் காப்போம்.

*செஞ்சொற் செல்வர் ஆறு. திருமுருகன்*
*தலைவர், தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கா தேவஸ்தானம்.*

## எல்லா வளங்களும் கிடைக்கட்டும்



பிறக்க இருக்கும் தமிழ் சிங்கள ஜய வருடம் எல்லோருக்கும் எல்லா வளங்களையும் பெற்றுத் தர வேண்டும் என புத்தாண்டு தினத்தன்று மனதார வாழ்த்துகின்றேன்.
இலங்கையர் என்ற ரீதியில் அரசியல் பேதங்களை மறந்து நிரந்தர சமாதானம் மலர்ந்த இவ்வேளையில் சமாதான நிலைமையைக் குழப்பும் சக்திகளுக்கு எதிராக மலரும் புத்தாண்டு அமைய வேண்டும். பிறக்கும் புத்தாண்டு எல்லோர்க்கும் ஒளிமயமான எதிர்காலத்தை பெற்றுத்தரும் என்ற நம்பிக்கையுடன் மனதார வாழ்த்துகின்றேன்.

*யோகேஸ்வரி பற்குணராசா, யாழ். மாநகர சபை முதல்வர்.*

## இறை நம்பிக்கை வளரட்டும்



அனைவருக்கும் சித்திரைப் புத்தாண்டு வாழ்த்துக்களும் ஆசீர்வாதங் களும் உரித்தாகட்டும். மலரும் ஜய வருடத்தின் மூலம் அனைவருடைய கனவுகளும் நிறைவேற இறையருள் சித்திக்கட்டும். இனங்களுக்கிடை யில் விட்டுக் கொடுத்தல் இல்லாதபோது மகிழ்வும் உயர்வும் அமைதியும் சுபீட்சமும் கிடைக்கப்போவதில்லை. தமிழ். சிங்கள புத்தாண்டு இனங் களுக்கிடையில் ஒற்றுமையையும் சந்தோசத்தையும் உண்டாக்கும் வகையில் அமையட்டும்.
கடின உழைப்பின்றி சுகமாக வாழ இளைஞர் முற்பட வேண்டாம். அவமே காலத்தைப் போக் காமல் சாதனைகளை நிலைநாட்ட முற்படுங்கள். மாணவர்களே உங்கள் பார்வை கல்வியை நோக்கியதாக இருக்கட்டும். அன்புத்தாய்மார்களே உங்கள் கைகளில்தான் வாழ்வின் வசந்தம் இருக்கின்றது. நல்வழிப்படுத்துங்கள் குடும்பங்கள் வளர சமூகம் வளரும். சைவத் தமிழினம் வளரும். அரசியல் தலைவர்களே அரச உத்தியோகத்தர்களே மக்களுக்கு பணிசெய்யும் வாய்ப்பு உங்களிடம்தான் இருக்கின்றது. அதனை நன்கு பயன்படுத்தி மக்கள் வாழ்வை உயர்வடையச் செய்யுங்கள். மக்கள் மனம் உங்களை உயர்த்திவைக்கும். குருமார்களாகிய எமது பணி மக்களை ஆன்மிகத்தோடு ஆற்றுப்படுத்துவது. அதன் மூலம் மக்களுக்கு அமைதியையும் சுபீட்சத்தையும் இறையருளையும் ஏற்படுத்துவோம். இன்று மக்கள் ஆடம்பர வாழ்வை நாடியவர் களாக உள்ளனர். அதில் இருந்து மக்கள் மனம் மாற்றம் அடைய வேண்டும். அதன்மூலமாக கோபம், பொறாமை விரக்தி, ஏமாற்றம் முதலியவற்றினை தவிர்க்கலாம். இவற்றுக்கெல்லாம் புது வருடம் நல்வழிகாட்டட்டும். நல்லவைகளை நாடி எமது பாதங்கள் நடைபோடட்டும். மலரும் புத்தாண்டு அனைவருக்கும் மகிழ்வையும். வாழ்வில் பற்றுதலையும் இறை நம்பிக்கை களையும் ஊட்டுவதாக அமைய வாழ்த்தி ஆசீர்வதிக்கின்றேன்.

*சிவஸ்ரீ. சபா. வாசுதேவக்குருக்கள்.*
*தலைவர், சர்வதேச இந்து மதகுருமார் ஒன்றியம்.*

## அமைதி வாழ்வை அடைவோமாக!



'ஜய' வருட புத்தாண்டு பிறக்கின்றது. புத்தாண்டில் காலடி எடுத்து வைக்கும் அனைவருக்கும் நமது புத்தாண்டு வாழ்த்துக்கள். இரு இனத்தவர்களும் சேர்ந்து கொண்டாடும் இந்த விழாவில் ஒன்று சேர்ந்த மகிழ்வு ஏற்படுகின்றது. இந்து மக்கள் யாவரும் ஆலய வழிபாடாற்றி கலை, கலாசார, பண்பாட்டின் வழி நின்று மரபு வழுவாது தாய், தந்தை, குரு ஆகியோரை வணங்கி ஆசி பெறுவர்.
அதேபோன்று மக்கள் மத்தியில் ஆத்மிக சிந்தனை வெளிப்படுத்தல் அவசியம். ஒவ்வொருவரது ஆன்மாவினின்றும் வெளிப்படும் சிந்தனைகள் மக்களை ஒன்று சேர்க்கும் தன்மையது. இன்றைய கால கட்டத்தில் மிகவும் அவசியமாக வெளிப்பட வேண்டுவது சகல இன மக்களும் சமத்துவமாக வாழ வேண்டும் என்ற சிந்தனை.
அனைத்து இனத்தினரும் சுதந்திரமாக சுதந்திர உணர்வுடன் மன அமைதியுடன் குடும்பத் தவர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து கொண்டாடும் நிலை இன்று ஏற்படாதிருப்பது வருந்தத் தக்கதாகவேயுள்ளது. ஊரிழந்து, பேரிழந்து, உற்றார், பெற்றாரை இழந்து வாழ்ந்திடும் நிலை இன்னும் மாறவில்லை. தமிழ் மக்கள் பலர் இன்னும் அகதிகளாகவே வாழ்கிறார்கள்.
ஆலயங்களில், உற்சவங்களில் யாவற்றிலும் ஏதிலிகளாக இருக்கும் நம்மக்கள் குறித்துச் சிந்தியுங் கள். இறைவன் நம் உள்ளத்தினுள்ளேயே இருக்கிறான். அவன் எங்கிருந்தோ வருபவன் அல்ல.
ஆகவே நமது மக்களது ஒற்றுமைச் சிந்தனை, நம்மை நாமே ஆளுகின்ற தன்மையை இறைவழிபாடு மூலம் அடைய முடியும். இப் புத்தாண்டிலாவது சுதந்திரமான அமைதி வாழ்வை அடைவோமாக. "மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்"

சிவஸ்ரீ சே. இ. பிரணதார்த்திஹரக் குருக்கள், கோப்பாய்.

## ஆனந்தமயமான வாழ்வு அமையட்டும்



பெருமைமிகு மங்கலங்கள் நிறைந்த இன்றைய புத்தாண்டில் மக்கள் அனை வரும் சுபீட்சம் நிறைந்த ஒழுக்கமுள்ள நல்வாழ்வு கிட்டவும், கலக்கமற்ற நிம் மதியான அமைதியான நிலை நாட்டில் நிலவவும், குறிப்பாக தமிழ் மக்களது எதிர்பார்ப்புக்கள் ஈடேறவும், மகிழ்ச்சியான, ஆனந்த மயமான, செல்வங்கள் அனைத்தும் நிறைந்த புத்தாண்டாக மலர்ந்து தொடர்ந்தும், நீடித்து நிலைத்து மக்களனைவரும் சுகமாக வாழவும் எல்லாம் வல்ல ஸ்ரீ வல்லிபுர மாயவனைப் பிரார்த்தித்து நல்லாசிகளையும், நல் வாழ்த்துக் களையும் மக்கள் அனைவருக்கும் கூறிக் கொள்கின்றோம். "சர்வேஜனாகா சுகினோபவந்து".

*பிரம்மஸ்ரீ ச. க. சுதர்சனக்குரு (ஜே/பி)*
*பிரதம குரு ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் சுவாமி கோயில், துன்னாலை, புலோலி.*

## குரு பீடாதிபதி ஆசிகள்



அனைத்து இன மக்களும் வேற்றுமைகளை நீக்கி சிறப்புடன் கொண் டாடும் திருநாள் புதுவருடமாகும். சகல இன மக்களுக்கும் கிடைக்க வேண்டிய உரிமைகள் அனைத்தும் ஜய எனும் நாமத்துடன் பிறக்கும் புத்தாண்டில் கிடைப்பதாகட்டும். சமயங்களின் விழுமியங் களைப் போற்றி, இறைவனை வழிபடுவதன் மூலம் நாட்டு மக்கள் அனை வரும் ஒற்றுமை யுடனும் மகிழ்ச்சிகரமாகவும் சிறப்புடனும் வாழலாம். அச்சமின்றி நாட்டு மக்கள் அனைவரும் ஜய வருடத்தில் சிறப்புடன் வாழ புதுவருட வாழ்த்துக்களையும் ஆசிகளையும் தெரிவிப்பதில் மகிழ்வடைகின்றேன்.
"லோகா சமஸ்தா சுகினோ பவந்து"

*சிவஸ்ரீ ப. மனோகரக் குருக்கள்*
*வல்வெட்டித்துறை.*

## அமைதிச் சூழல் நிலவட்டும்



நாட்டின் அனைத்து மக்களினதும் சுபீட்சமான நல்வாழ்வுக்காக நிரந்தர அமைதிச் சூழலை எம்மவர் மத்தியில் உறுதிப்படுத்துவதாக பிறக்கின்ற புது வருடம் அமைய வேண்டும். வருடத்தின் சித்திரை மாதத்தில் வருடந்தோறும் எம்மவர்கள் கொண்டாடி வரும் இந்தப் புதுவருட தினம் நாட்டின் பெரும்பான்மை இனத்தவராகிய சிங்கள மக்களுக்கும் உரிய புதுவருடமாக அமைந்திருப்பதும் ஏககாலத்தில் இரு இனமக்களும் இந்தப் புத்தாண்டுக் கொண்டாட்டங்களில் இணைந்து கொண்டிருப்பதும் இரு இன மக்களும் இணைந்த வாழ்வின் அவசியத்தை சுட்டுவதாக இருக்கிறது.
உண்மையில் நாட்டின் அனைத்து மக்களதும் வளமான வாழ்வுக்கு இந்த இரு இன மக்களும் இணைந்த வாழ்வு பிறக்கின்ற இந்தப் புதுவருடத்தில் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

*கே. வி. குகேந்திரன், (முன்னாள் நா. உ.)*

# மண்கும்பான் வெள்ளைப்புற்றடி

காலை 8.00 மணிக்கு வசந்தமண்டப பூசையைத் தொடர்ந்து
சுவாமி தேரில் காலை 10.00 மணிக்கு ஆரோகணிப்பார்



# தேர்த்திருவிழா சிறப்பித...

## அருளாசிச் செய்தி

தீராத வினைகளெல்லாம் தீர்த்து வைக்கின்ற தனக்கு மேல் வேறு தலைவன் இல்லாத தனித்துவம் வாய்ந்த அருள்மிகு ஸ்ரீ வீரகத்தி விநாயகருக்கு புதிய முகவுத்தர எண்கோண வடிவத்தில் அழகுற அமைக் கப்பெற்ற தேரிலே அடியார்களின் வினைபோக்குவதற்காக யாழ்.தீவகம் மண்கும்பான் வெள்ளைப் புற்றடியில் எழுந்தருளி வீற்றிருந்து அருள்பாலிக் கின்றார்.

மண்கும்பான் என்னும் மாபதியில் விக்கினங்கள் தீர்க்கும் விநாயகர் ஓங்காரரூபமாக மலர்ந்துள்ள விஜய வருடப் பிறப்பில் அவ்வூர் மக்களுக்கு வரும் இடர் தீர்க்க புதிய தேரினிலே மாபவனி வருகின்றார்.

எல்லாம் வல்ல வீரகத்தி விநாயகப் பெருமான் மண் கும்பான் மக்கள் அனைவரும் சீரோடும் சிறப்போடும் வாழப் பிரார்த்திப்பதோடு நல்லைக் குருமணியின் பாதம் பணிந்து இறையருள் சுரந்து உலகம் செழிப்புற்றோங்க ஆசி வழங்கி வாழ்த்துகின்றேன்.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர
ஞான சம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள்.

## மகோற்சவ குருவின் அருளாசியுரை

சிவபூமி என விளங்கும் இலங்கை மணித் திருநாட்டின் வடபால் அமைந்த மண்கும் பான் வெள்ளைப் புற்றடி என்னும் பதியில் எழுந்தருளி அடியவர்களின் இடர்களைக் களைந்து அருள் பாலித்துக் கொண்டு இருக் கும் ஸ்ரீ வீரகத்தி விநாயகப் பெருமானின் திவ்விய மான மகோற்சவ விழா வில் சர்வமங் கலம் பொருந்திய ஜய வருடப்பிறப்பான இன்று விக்கினங் களைத் தீர்க்கும் விநாயகப் பெரு மான் அழகிய தேரில் ஆரோக ணித்து மஹா ராஜவீதி யில் வலம் வந்து அருள் பாலிக்கின்ற சுப வேளையில் ஆகமங்கள் கூறுகின்ற வகையில் அடியவர்களின் அனைத் துவித விருப் பங்களும் நிறைவேறவும் நீண்ட ஆயுள் பெறவும் லக்ஷ்மி கடாட்ஷம் கிடைக் கவும் பக்திநெறி வளரவும் விநாயகப் பெரு மானின் பாதம் பணிந்து அருளாசி கூறு கின்றேன்.

"கணேச உபாசகர்", "சிவானுபூதி"
சிவஸ்ரீ ச. ஸ்ரீமதுசூதனக்குருக்கள்
மஹா கணபதிப்பிள்ளையார் கோயில் சித்தன் கேணி

## "வேழமுகத்து விநாயகனைத் தொழ வாழ்வு மிகுந்து வரும்"

ஜய வருஷத்திலே தேரேறி அருள் பாலிக்கும் மண்கும்பான் வெள்ளைப் புற்றடி ஸ்ரீ வீரகத்தி விநாயகப் பெருமானின் திருத்தாள்களைப் பணிந்து மலரும் ஜயவருஷம் அனைவருக்கும் வாழ்வில் நலம் பெருக்க வேண்டுமென பிரார்த்திக் கின்றோம். "கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்பது சான்றோர் வாக்கு. அதேபோல் "ஆறு இல்லா ஊருக்கு அழகுபாழ்" என்பார்கள். அதேபோல் சப்த தீவுகளுக்குப் பயணம மேற்கொள்வோர் அனைவருக்கும் வெள்ளைப் புற்றடி விநாயகனை வழிபாடியற்றிச் செல்லும் மரபு நீள வளர்கின்றது. மேலும் பெருமானின் தேரோட்டம் வருடப்பிறப்பன்றே நடைபெறு கின்றது. இத் தினத்தில் நாமும் விநாயகரை எண்ணி வழிபாடியற்றி வாழ்வோமாக..

வர்ணனைக் கலாநிதி,
மதுரகவி காரை எஸ்.ரி.அருளானந்தன்.

## அ...

மண் கும்பான்வெள்ளைப் புற்றடியில் வீற்றிருந்து அ... எண்கோண முக பத்திரத் தேரேறி வருகிறார். அந்தத் தே... அடைகிறேன். பண்டைக் காலத் துறைமுகமாக விளங்கி... கோயில் அமைக்க எடுத்து வந்தார். வரும் வழியில் களை... செல்வதற்கு விக்கிரகங்களை எடுத்த போது எம் பிள்ளை... உள்ளவர்களைப் பராமரிக்குமாறு கூறிச் சென்று விட்ட... இவ்வாலயத்தின் தொன்மையை கோயில் பதிவேடு எடு... பதியப்பட்டுள்ளமை ஆலயத்தின் பழைமை...றை... சான்றாகும். இவ்வாலயம் அமைந்துள்ள சூழல் அன்று... புற்றுக்கள் எடுக்கப்பட்டிருக்கலாம். அப் புற்றுக்கள் வெ... வீரகத்திப் பிள்ளையார்" என அடியார்கள் பெயரிட்டு அ...

ஓலைக் குடிலாக இருந்த ஆலயம் கற்களால் அமைத்து... கட்டப்பட்ட மதில்களும் அமைந்திருந்தன. ஆலயத்தின்... அதனை அடுத்த அர்த்த மண்டபத்தினையும் வெள்ளை... நிகழ்வு அனைவராலும் சிறப்பாகக் பேசப்பட்டு வந்தது... 1982 ஆம் ஆண்டு பொறுப்பேற்கப்பட்ட பின்னராகும்... ஆண்டு காலப்பகுதியை ஆலய வளர்ச்சியின் பொற்கால... இக் காலப் பகுதியாகும். அழகான சுற்று மதில்கள் கட்ட... 2000 ஆம் ஆண்டுக்குப் பின்னராகும். இக் காலப்பகுதியில்... கம் சிறப்பாக நடைபெற்றது. நிலத்துக்கு ...
புதுப்பிக்கப்பட்டு, கலியாண மண்டபமும் அமைக்கப்பட்டு... தேர்த் திருவிழாவை முன்னிட்டு உதயன் பத்திரிகையி... அடைகிறேன். சோ.வர்ணகுலசிங்கம், தலைவர்...


★★★★★★★★★★★★★★★★★★ விளம்பர அனுசரணை...

தரம் நாடுவோர் நவநாகன் நாடுமிடம்
உதயா ஜுவல்லர்ஸ்
81, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
கிளை:
நியூ உதயா ஜுவல்லர்ஸ்
91, மின்சாரநிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

நியூ நகுலா
ஜுவல்லர்ஸ்
தங்கப்பவுண் நகை
வியாபாரம்
45, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே. 021 222 4101

அருள்நிலா
நகை மாடம்
தங்கப்பவுண் நகை வியாபாரம்
22 கரட் தங்க நகைகள் ஓடருக்கு
உத்தரவாதத்துடன் செய்து
கொடுக்கப்படும்.
74, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே. 077 710 6042

நியூ பிரியங்கா
நகை மாளிகை
Genuine 22 kt Jewellery
Manufacturing jewellery
2 G, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
Tel. 021 222 5644,
No. 69 யாழ். வீதி, (A 9), கிளிநொச்சி
(Front kachcheri)
Tel. 021 320 8611, 077 7175059

Yarl Maithely Jewellers
79Z Sea street
Colombo- 11
T.P. 011 2396239
Nagai Madam
மைதிலி நகைமாடம்
தங்கநகை வியாபாரி
89 V, Kasthuriyar Road,
Jaffna. T.P. 021 222 7902

நி...
தங்...
பெற்...
38, ...

நவீன அழகிய சிங்கப்பூர்
டிசைன்களுக்கு
சிங்கப்பூர் ஜுவல்லர்ஸ்
93, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே. 021 4590260

புதிய நவீனா
நகையகம்
Navena Nakaiyakam Genuine 22 Kt Jewellery
Manufacturing jewellery
191, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே. 077 7115 625

நியூ லலிதா
ஜுவல்லர்ஸ்
133, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே. 021 5670 289,
077 6562681

நதியா நகை மாடம்
இல.02, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே. 021 222 3479
உங்கள் ஆதரவுக்கு நன்றி!
கிளை. கௌசன் நகைமாடம்
இல. 129, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

புதிய நதியா நகை...
உங்கள் ஓடர் நகைகளை...
தவணையில் நாகரிமான டி...
உத்தரவாதத்துடன் செய்து...
புதிய நதியா நகை...
103,73 கஸ்தூரிய...
யாழ்ப்பாணம்.
T.P : 021 2223...
021 222839...

சண் ரான்ஸ்போட்
லொறி மற்றும்
வட்டா (TATA)
வாடகைக்குண்டு.
151, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
T.P. 077 959 5142
077 345 5124

கந்தன்
களஞ்சியம்
கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்

கந்தவேலன்
றேடர்ஸ்
110, Stanley Road,
Jaffna
T.P : 021 2222822,
Fax : 021 222 4496

பாலவிநாயகர்
மோட்டோர்ஸ்
NO. 8, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்

ஹரன்
ரேடர்ஸ்
71, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்

லலி...
தங்கப்ப...
Lali...
75, கஸ்...
T.P...


விசேட மேளக்கச்சேரி அனுசரணையாளர் தேர்த்திருவிழா உபயகாரரும் கை.கணேசையா குடு...

## நாதஸ்வரம்

- ★ நாதஸ்வர கலா சாகரம் J. சிவதாஸ் (கோண்டாவில்)
- ★ கோண்டாவில் நாதஸ்வர வித்துவான் K.வசந்தன் குழுவினர்
- ★ கோண்டாவில் நாதஸ்வர வித்துவான் V.K.பஞ்சமூர்த்தி புதல்வர் குழுவினர்

## நிலநடுக்கத்தால் மம்மிகள் பாதிப்பு

லண்டன், ஏப்.14

சிலியில் இரு வாரங்களுக்கு முன்பு ஏற்பட்ட நிலநடுக்கத்தால் மம்மிக்கள் எனப்படும் பழங்கால கல்லறைகள் கடுமையாகச் சேதமடைந்துள்ளன.

கி.பி. 1,500ஆம் ஆண்டளவில் வாழ்ந்த சிங்காரோ கால மக்களால் அமைக்கப்பட்ட இந்த மம்மிக்கள் தொல்லியல் துறையினரால் பராமரிக்கப்பட்டு வருகின்றன. கடந்த 2ஆம் திகதி சிலியில் 8 புள்ளி 2 ரிச்டர் அலகிலான நிலநடுக்கம் ஏற்பட்டது. அதனால் சில இடங்களில் நிலச்சரிவு ஏற்பட்டது. இதில் அரிக்கா பகுதியில் பராமரிக்கப்பட்டு வந்த கல்லறைகள் சேதமடைந்து அதிலிருந்த எலும்புக் கூடுகள் வெளிவந்துள்ளன என்று கூறப்படுகின்றது. (ற)

## சொலமன் தீவுகளில் நிலநடுக்கம்


லண்டன், ஏப்.14


சொலமன் தீவுகளில் 7.6 ரிச்டர் அளவில் நில நடுக்கம் ஏற்பட்டதை அடுத்து அங்கு சுனாமி எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. சொலமன் தீவுகளில் நேற்று அதிகாலை 7.6 ரிச்டர் அளவில் நிலஅதிர்வு உணரப்பட்டுள்ளது.

அதனையடுத்து சொலமன் தீவுகள், பப்புவா, நியூகினியா மற்றும் நியூ கெலடோனியா ஆகிய பகுதிகளுக்கு சுனாமி எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. சுனாமி எச்சரிக்கை விடுக்கப்பட்டதை அடுத்து அப்பகுதியிலுள்ள மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு அனுப்பட்டுள்ளனர்.

எவ்வாறாயினும் நில அதிர்வினால் ஏற்பட்ட சேத விவரங்கள் தொடர்பில் தகவல்கள் எதுவும் இதுவரை வெளியிடப்படவில்லை.

கடந்த வாரம் சொலமன் தீவுகளில் ஏற்பட்டுள்ள வெள்ளத்தினால் 16 பேர் உயிரிழந்தனர். (ற)





ஆஸ்திரேலியாவில் உருவாகியுள்ள 'இடா' புயல் தற்போது குக்டவுனுக்கும் போர்ட் டக்ளஸ்'க்கும் இடையே மையம் கொண்டு மெதுவாக கரையை கடந்து வருகிறது. அதனால் குவின்ஸ்லேண்ட், கேப்பிளாட்டர் கார்வெல், கெர்னஸ், குக்டவுன், போர்ட் டக்ளஸ் உள்ளிட்ட பகுதிகளில் கடுமையான சூறாவளிக் காற்று வீசுகிறது. அப்பகுதியில் வாழும் 1 லட்சம் மக்கள் வெளியேற்றப்பட்டு பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

# பொருளாதார தடை விதிக்கப்படும்

### ரஷ்யாவை எச்சரிக்கின்றது அமெரிக்கா

வொஷிங்டன், ஏப்.14

உக்ரைன் விவகாரத்தில் பதற்றத்தை அதிகரித்தால் ரஷ்யா மீது புதிய பொருளாதாரத் தடை விதிப்போம் என்று எச்சரிக்கை விடுத்துள்ளார் அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா.

உக்ரைனின் தன்னாட்சி பகுதியாக இருந்த கிரிமியாவில் பொது வாக்கெடுப்பு நடத்தப்பட்டு கடந்த மாதம் ரஷ்யாவுடன் அந்தப் பகுதி இணைக்கப்பட்டது. அதை அமெரிக்கா மற்றும் மேற்கத்திய நாடுகள் அங்கீகரிக்கவில்லை. கிரிமியாவைத் தன்னுடன் இணைத்த ரஷ்யா மீது பொருளாதாரத் தடையும் விதிக்கப்பட்டது. இந்த நிலையில் கிரிமியா போன்று ரஷ்ய மொழி பேசுகிற மக்களை அதிகமாகக் கொண்டுள்ள கிழக்கு உக்ரைனிலும் இத்தகைய நிலை உருவாகி உள்ளது.

அங்கு கார்கிவ், லுஹான்ஸ்க், டனட்ஸ்க் நகரங்களில் உள்ள முக்கிய அரச கட்டிடங்களை ரஷ்ய ஆதரவாளர்கள் ஆக்கிரமித்து, தம்மைத் தாமே தனிக் குடியரசு என அறிவித்தனர். ரஷ்யாவுடன் இணைவது தொடர்பாகப் பொதுவாக்கெடுப்பு நடத்த வேண்டும் எனவும் அவர்கள் கோரிக்கை விடுத் துள்ளனர்.

உக்ரைன் பிரச்சினையின் ஒரு அங்கமாக, எரிவாயு விநியோகித்தமைக்குத் தமக்குத் தரவேண்டியபெருந்தொகையை (2.2 பில்லியன் டாலர்கள்)



பராக் ஒபாமா

உக்ரைன் தராமல் கடன் வைத்துள்ள நிலையில், அந்த நாட்டுக்கான விநியோகத்தைக் குறைத்தால், அது ஐரோப்பிய நாடுகளுக்கான விநியோகத்திலும் தாக்கத்தை ஏற்படுத்தும் என ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புதின் எச்சரிக்கை விடுத்திருக்கும் நிலையில், எரிசக்தியை ரஷ்யா ஆயுதமாகப் பயன்படுத்தி மிரட்டுகின்றது என்று அமெரிக்கா குற்றஞ்சாட்டுகிறது.

இந்த நிலையில் செக் குடியரசின் தலைநகர் பிரேக்கில், நேட்டோ பொதுச்செயலாளர் அன்டர்ஸ் போக் ராஸ்முஸ்ஸென் ஊடகவியலாளர்களைச் சந்தித்துக் கருத்துத் தெரிவித்தார். அதன்போது,

"உக்ரைன் பிரச்சினை தொடர்பாப் பேச்சு நடத்த வேண்டுமென்றால் ரஷ்யா முதல் நடவடிக்கையாக தனது படைகளை உக்ரைன் எல்லையில் இருந்து மீளப் பெற வேண்டும். ரஷ்யா மேலும் ராணுவ நடவடிக்கை எதையாவது எடுத்தால் அது மிக மோசமான விளைவுகளை ஏற்படுத்தும். பொருளாதாரத் தடைகளை எதிர்கொள்ள நேரிடும்"- என்று அவர் தெரிவித்தார். (ற)

## கினியாவில் எபோலா வைரஸ் தடுப்பு நடவடிக்கைகள் தீவிரம்

கினியாவில் பரவி வரும் எபோலா வைரஸ் காய்ச்சலைத் தடுக்க தீவிரமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. சர்வதேச விமான நிலையங்களில், சோதனைக்குப் பிறகே மக்கள் அனுமதிக்கப்படுகின்றனர். இதற்காகப் பிரத்தியேகமாக பொருத்தப்பட்டுள்ள கமராக்களில் மனிதர்களின் உடல் வெப்பநிலை பதிவு செய்யப்படும். வெப்பநிலை அதிகமாக இருக்கும் பட்சத்தில் விமான நிலைய அதிகாரிகளுக்கு எச்சரிக்கை விடுக்கப்படும்.

கினியாவில் எபோலா வைரஸ் காய்ச்சலினால் 101 பேர் உயிரிழந்துள்ளனர். 157 பேருக்கு தற்போது வைரஸின் தாக்கம் இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. (ற)

## மிக அரிதான வைரம் அடுத்த மாதம் ஏலத்தில்

நியூயோர்க், ஏப்.14

உலகின் மிக அரிதான வைரமாகக் கருதப்படும் 'தி புளு' வைரத்தை கிறிஸ்டி ஏல நிறுவனம் காட்சிக்கு வைத்துள்ளது. நியூயோர்க் நகரில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள இந்த வைரம் முதன்முறையாக ஏலத்திற்கு வரும் மிகப்பெரிய நீல நிற வைரமாகும்.

தென்னாபிரிக்காவில் நூறு ஆண்டுகளுக்கு முன்னர் இந்த வைரம் வெட்டி எடுக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. எதிர்வரும் மே மாதம் ஜெனிவாவில் நடைபெற இருக்கும் நகை விற்பனையில் இந்த நீல நிறம் வைரம் ஏலத்திற்கு விடப்படும் என கிறிஸ்டி நிறுவனம் தெரிவித்துள்ளது. (ற)

## ஹிலாரியின் மீது காலணி வீச்சு



ஹிலாரி கிளிண்டன்

நியூயோர்க், ஏப்.14

அமெரிக்காவின் நெவேடா மாகாணத்தில் உரையாற்றிக் கொண்டிருந்த அந்நாட்டின் முன்னாள் வெளியுறவுச் செயலர் ஹிலாரி கிளிண்டன் மீது பெண் ஒருவர் திடீரெனக் காலணியை வீசியுள்ளார். எனினும் அந்தக் காலணி ஹிலாரி மீது படவில்லை.

காலணி வீசிய பெண்ணைப் பொலிஸார் கூட்ட அரங்கிலிருந்து குண்டுக்கட்டாக தூக்கிச் சென்று அப்புறப்படுத்தினர். அதன் பின்னர் ஹிலாரி தனது உரையைத் தொடர்ந்து நிகழ்த்தினார்.

பொலிஸாரின் விசாரணைகளில் குறித்த பெண் நுழைவுச் சீட்டுப் பெறாது ஹிலாரியின் கூட்டத்தில் பங்கேற்றது தெரியவந்துள்ளது. (ற)

# சிரியாவில் கார் குண்டுத் தாக்குதல்

டமாஸ்கஸ், ஏப்.14

சிரியாவின் ஹோம்ஸ் நகரில் நடத்தப்பட்ட இரட்டைக் கார் வெடிகுண்டுத் தாக்குதலில் 21 பேர் உயிரிழந்துள்ளனர்.

கரம் பகுதியில் நடத்தப்பட்ட இந்தத் தாக்குதலில் 100க்கும் அதிகமானோர் காயமடைந்துள்ளனர் என்று அங்கு செயல்பட்டு வரும் மனித உரிமைகள் அமைப்புத் தெரிவித்துள்ளது. உயிரிழந்தவர்களில் பெரும்பாலானோர் குழந்தைகள் மற்றும் பெண்கள் என்று கூறப்படுகின்றது.

சிரிய ஜனாதிபதி அசாத்தை பதவி விலகக் கோரி கிளர்ச்சியாளர்கள் மூன்று ஆண்டுகளாகப் போராடி வருகின்றனர். (ற)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## வெற்றி வருடமாக அமையட்டும்

தமிழர்களின் ஆண்டு தையில் ஆரம்பிக்கிறதா சித்திரையில் ஆரம்பிக்கிறதா என்ற விவாதம் ஒருபுறம் இருக்க, சித்திரையில் வருடப் பிறப்பைக் கொண்டாடும் மரபு இன்னும் தொடர்கிறது. இம்முறை விஜய வருடம் கழிந்துபோக ஜய வருடம் முகிழ்ந்து வருகிறது.

சோதிடர்கள் பாணியில் சொல்வதானால் விஜய வருடம் தமிழர்களுக்குச் சில நல்லதையும், அரசியல் முன்னேற்றங்களையும் தந்ததுபோலவே சில பல பின்னடைவுகளையும் தந்துள்ளது.

கடந்துபோன விஜய வருடம், அரசியல் ரீதியில் தமிழர்களுக்கு பெரும் முன்னேற்றத்தைக் கொடுக்கவில்லை என்றாலும் ஜெனீவாவிலே தமிழர்களின் கோரிக்கைகளை ஓரளவுக்குத் தானும் ஏற்றுக்கொண்ட ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அதேபோன்று விடுதலைப் புலிகள் இயக்கம் மீண்டும் ஒருங்கிணைக்கப்படுகிறது. வன்முறைக்கு மீண்டும் அடித்தளம் இடப்படுகின்றது என்று எழுப்பப்பட்ட பூச்சாண்டியும் விஜய வருடத்திற்குள்ளேயே ஒருவாறு முடிவுக்கு வந்துவிட்டது.

எப்படி இருப்பினும் தமிழர்கள் எதிர்பார்க்கும் அரசியல் தீர்வு, அதிகாரப் பகிர்வு, நிரந்தர அமைதி என்பவற்றைக் கண்ணில்கூடக் காட்டாமலேயே விஜய வருடம் முடிவுக்கு வந்துவிட்டது. அந்த வகையில் மற்றொரு ஏமாற்று வருடமா கவே அது கழிந்து போயிருக்கிறது.

இந்த நிலையில்தான் ஜய புதுவருடம் பிறக்கின்றது. ஜய என்பதை ஜயம் என்பதன் குறுகிய வடிவமாகக் கொண்டால் இந்த வருடம் வெற்றி வருடமாக இருக்க வேண்டும். குறிப்பாகத் தமிழ் மக்களுக்கும் இலங்கை நாட்டின் ஏனைய மக்களுக்கும் அமைதி, சமாதானம், நிரந்தர அரசியல் தீர்வு ஆகிய வெற்றிகளை அள்ளித் தரும் வருடமாக இது அமைய வேண்டும்.

வருடங்கள் வெற்றிகரமானவையாகத் தாமே அமைந்து விடா என்பதும் முயற்சி அற்ற மனிதர்களுக்கு கடவுளர்கள்கூட உதவுவது இல்லை என்பதும் அனைவரும் அறிந்ததே. அதற்குச் சிறந்த உதாரணமாக ஒரு கதையும் உண்டு.

ஒரு ஊரில் தீவிர கடவுள் பக்தன் இருந்தார். ஒரு நாள் அவர் ஆற்றைக் கடந்தபோது ஆற்றில் வெள்ளம் அதிகரித்து அவரை அடித்துச் செல்ல ஆரம்பித்தது. பக்தன் பதற்றப்படவில்லை கடவுள் தன்னை எப்படியும் காப்பாற்றுவார் என்று நம்பினார். கடவுளே! காப்பாற்று என்று வேண்டினார். உடனே கரையில் நின்றிருந்த சிலர் அவரை நோக்கிக் கயிற்றை வீசி எறிந்தனர். ஆனால் அவர் அதனைப் பிடிக்க மறுத்துவிட்டார். கடவுள் என்னைக் காப்பாற்றுவார், உங்கள் உதவி தேவையில்லை என்று கூறிவிட்டார். தண்ணீர் அவரை வேகமாக இழுத்துச் செல்ல ஆரம்பித்தது. கடவுளே இன்னுமா உன் பக்தனை நீ காப்பாற்றவில்லை என்று வேண்டினார். அப்போது அவரை அண்டி ஒரு பெரிய மரக்கட்டை மிதந்து வந்தது. ஆனால் அதைப் பற்றிப்பிடித்து ஏறிக் கரைசேர அவர் முயற்சிக்கவில்லை. கடவுள் தன்னைக் காப்பாற்றுவார் என்று நம்பினார். சிறிது நேரத்தில் சிலர் படகில் வந்து அவரைக் காப்பாற்றுவதற்கு முயற்சித்தார்கள். ஆனால் அவர் அதனையும் நிராகரித்துவிட்டார். கடவுள் என்னைக் காப்பாற்றுவார் என்று கூறிவிட்டார். கடைசியில் அவர் கடவுளுக்கு முன்பாக ஆன்மாவாக அழைத்துச் செல்லப் பட்டபோது கடவுளைப் பார்த்துச் சீறினார், நான் உன்னை எவ்வளவோ நம்பியிருக்க இப்படிக் கைவிட்டுவிட்டாயே என்று கொந்தளித்தார். கடவுள் அமைதியாகச் சொன்னார், நான் உன்னைக் காப்பாற்ற மூன்று வாய்ப்புக்கள் தந்தேன். ஆனால் நீதான் அவற்றை மறுத்துவிட்டாய். நீ முயற்சி செய்யாமல் நான் உனக்கு எப்படி உதவ முடியும் என்றார்.

அதுபோன்று இலங்கை நாட்டின் அரசியல் தலைமைகளும் நாட்டில நிரந்தர அமைதியை ஏற்படுத்துவதற்கான முயற்சிகள் எதையும் செய்யாது ஜய் வருடம் வெற்றியைத் தரும் என்று எதிர்பார்ப்பதில் பயனில்லை. இந்தக் கடமை வெறுமனே அரசியல்வாதிகளுக்கு மட்டும் உரியதுமன்று. மக்கள் ஒவ்வொருவருக்கும்கூட அந்தக் கடமை இருக்கிறது. அதிகாரத்தைப் பகிர்ந்து கொண்டு நிரந்தர அமைதியை ஏற் படுத்துவதை நோக்கி அரசியல்வாதிகள் முன்னேறு வதற்காக அவர்களை உந்தித் தள்ளுவதற்கு முயற்சிப்பதே அந்தக் கடமை.

இந்த ஜய வருடத்திலாவது அரசியல்வாதிகளும் மக்களும் அவரவர் கடமைகளைச் சரிவரச் செய்வோம் என்று இன்றைய நாளில் சபதம் எடுத்துக்கொள்வோமாக!

# நாட்டின் ஒற்றுமைக்கு மேலும் ஒரு சந்தர்ப்பம்

சண்டே ரைம்ஸ் தலையங்கத்திலிருந்து
– கோகுலன்

கடந்த ஆண்டு அனேகமாக இதே காலப்பகுதியில் முஸ்லிம் சமூகத்தினரின் மீது பெரும்பான்மை சமூகத்தைச் சேர்ந்த ஒரு சிறு பிரிவினர் தாக்குதலில் ஈடுபட்டமையை நாடு காண நேர்ந்தது. இது நீண்டகாலம் நீடித்த உள்நாட்டு மோதல் ஒன்று முடிவுக்கு கொண்டு வரப்பட்டிருந்த காலத்தையடுத்து இந்த இன நெருக்கடி அதன் உச்சக் கட்டத்தையடைந்து நின்றது. ஒரு பகுதியினரின் தமது சமய அடையாளத்தை வெளிப்படுத்தவும், மற்றவர்களைச் சகித்துக்கொள்ள முடியாமையைக் காட்டிக் கொள்ளவுமான ஒருவித உணர்ச்சியற்ற நிலைமையாகும் இது.

அதிர்ஷ்டவசமாக அதிகாரிகள் விரைவாக செயற்பட்டு நிலைமையைக் கட்டுப்படுத்தினார்கள். இன்னுமொரு இன மற்றும் சமய ரீதியிலான மோதலாக அது வெடிக்காமல் தவிர்க்கப்பட்டது. அப்படியான ஒன்றை நாடு இனிமேலும் தாங்கிக் கொள்ளும் நிலையில்லை. இருந்தாலும் ஒரு வித அசெளகரிய நிலைமை தொடர்கின்ற போதிலும் அமைதியும் சகிப்புத்தன்மையும் நிலை பெற்றுள்ளது. இருந்தாலும் அதன் எதிர்விளைவுகள் இல்லாமல் போய் விடவில்லை. ஆனால் இங்கு நடந்த அந்தச் சம்பவங்களைச் சில நாடுகள் சாதாரணமாக எடுத்துக் கொள்ளவில்லை என்பதை இப்பொழுது அரசு உணர்ந்து கொண்டிருக்க வேண்டும்.

கடந்தமுறை ஜெனீவாவில் இலங்கையின் சார்பில் மிக உறுதியுடன் செயற்பட்ட சில நாடுகள் உ.தா.இந்தோனேஷியா, குவைத் மற்றும் கத்தோலிக்க பிலிப்பைன்ஸ் ஆகியவை இந்தமுறை மனித உரிமைகள் சபையில் வாக்களிக்காமலிருக்க முடிவு செய்து அலட்சியப்படுத்த முடியாத வகையிலான ஒரு சமிக்ஞையை வழங்கியிருந்தன.

உள்நாட்டிலும் சிறுபான்மையினர் அரசுக்கு ஒரு செய்தியை வழங்கியிருக்கிறார்கள். அண்மையில் முடிவடைந்த மேற்கு மற்றும் தென் மாகாண தேர்தல்களில் அவர்கள் அரசுக்கு எதிராக வாக்களித்திருந்தார்கள். அரசு இன வேறுபாட்டை கட்டியெழுப்புவதன் மூலம் பெரும்பான்மை வாக்குகளில் தங்கியிருக்கப் போகிறதா என்பதைப் பற்றி மீள் ஆய்வு செய்ய வேண்டியிருக்கும். துரதிர்ஷ்டவசமாக வடக்கிலுள்ள அரசியல்வாதிகள் சமீபகால நிகழ்வுகளில் இருந்து எதுவித பாடமும் படித்துக் கொள்ளாமல் அதே நிலைப்பாட்டில் இருந்து வருகிறார்கள்.

அண்மையில் கொழும்பில் ஒரு நிகழ்வில் பேசிய வடமாகாண முதலமைச்சர் தமிழ்த் தேசியத்தை அழித்தொழிக்க எடுக்கப்பட்ட முயற்சியின் எதிர் விளைவுதான் பிரிவினைக்கான சிந்தனை எழக்காரணம் என்று கூறியிருந்தார்.

உண்மைதானா? இவ்வளவு காலமாகத் தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் ஒரு தனி நாட்டுக்காகவே இவ்வளவு இரத்தக் களரியான யுத்தத்தை நடத்தினார்கள் என்று நாம் கருதி வந்துள்ளோம்.

தமிழ் அரசியல்வாதிகள் கொழும்பில் ஒன்றும் யாழ்ப்பாணத்தில் வேறொன்றும் கூறுவதில் பேர் பெற்றவர்கள். ஆனால் இந்த முதலமைச்சர் "தமிழ் மக்கள் சந்தேகத்துக்கு இடமில்லாத வகையில் இலங்கை நாட்டின் மீது உறுதி கொண்டவர்களாக இருந்துள்ளார்கள் என்று கூறுகின்றார். அவருடைய சொற்கள் மீளவும் உறுதியளிப்பவையாக உள்ளன.

இன்றைய தேவை தேசிய நல்லிணக்கமாகும். ஆனால் அரசியல்வாதிகள் தமது ஆதரவாளர்களை இனக் குரோதங்களை தூண்டுவதன் மூலமே கொண்டு செல்வதில் இறங்கியிருப்பதால் சமீபத்தில் வடக்கில் முடிவடைந்த பிரிவினைவாத முரண்பாடுகளின் கசப்புணர்வுகள் இலகுவில் முடிவுறும் என்றோ இன மற்றும் சமய நல்லுணர்வுடனான அமைதி சூழ்நிலையொன்று உருவாகும் என்றோ கூற முடியாமல் இருக்கின்றது.

உலகில் அமைதியான பல் இன , பல் தேசிய, பல சமய நாடுகளில் இலங்கையும் ஒன்று. இருந்தும் காலத்துக்குக் காலம் இங்கு ஏற்படும் சம்பவங்கள் மேற்குலகில் இந்த நாட்டின் மீது குறிப்பாக இந்த பெளத்த நாட்டின் மீது சீண்டிப் பார்ப்பதற்கு விருப்பம் காணப்படுகின்றது.

ஆக அரசானது தனது பிரித்து ஆளும் கொள்கை மூலமாக அவர்களுக்கு இடம் கொடுத்துவிடாமல் இருக்க பார்க்க வேண்டும். பிரிட்டிஷ் காலனித்துவ ஆட்சியாளர்கள் பெரும்பான்மை சமூகத்தவர்களைக் கூட மலைநாட்டுச் சிங்களவர், கரையோரச் சிங்களவர் என்று பிரித்து ஆண்டார்கள் என்பதை மறந்துவிட முடியாது.

மேற்கு நாடுகளில் சமய அமைதி நிலவுகிறது என்பது புரட்டுக் கதை. அங்கு இனப்பாகுபாடு இருப்பது உண் மைதான். ஆனால் மாறாக இந்த நாடுகளில் கோயில்கள், தேவாலயங்கள், மசூதிகள் என்பன அருகருகே பல நூற்றாண்டு காலமாக இருந்து வருகின்றன. புள்ளி விவரங்கள் ஒரு பல் இன சமூகத்தை வெளிப்படுத்தும் அறிகுறியாக மாட்டாது. இருந்தும் இலங்கையை சமய நல்லிணக்கமற்ற நாடாகச் சித்தரிக்க மேற்கு நாடுகள் முயற்சி எடுக்கின்றன.

இந்தியாவில் வரப்போகும் தேர்தலில் இந்து தத்துவக் கொள்கையாளர்கள் வெற்றிபெறக் கூடுமோ என்ற வகையில் கவலைகள் தோன்றியுள்ளன.

இங்குள்ள இரண்டு பிரதான சமூகங்கள் தங்கள் மரபு ரீதியிலான புது வருடத்தைப் பெரும்பாலும் ஒரே விதமான முறைகள், மரபுகள் கொண்டாடுகின்ற இந்த நன் நாளில் சிறுபான்மையோர் தாம் பிறந்த நாட்டிலேயே பாதுகாப்பில்லாமல் வாழ்கிறார்கள் என்று அச்சத்துக்குள்ளாகாமல் இருக்கும்படி பார்த்துக் கொள்வோமாக. சிங்கள மற்றும் தமிழ் புதுவருடம்தான் இரண்டு சமூகங்களினாலும் கொண்டாடப்படுகின்ற ஒரே ஒரு திருநாளாகும். தவிர்க்க முடியாத வகையில் கொண்டாட்டங்கள் வர்த்தக மயமாக்கப் பட்டுவிட்ட போதிலும் நாட்டின் கடந்த கால விவசாய அடித்தளத்திலிருந்து வருகின்ற சம்பிரதாயங்கள் ஆரூட சுப வேளைகள் என்று இந்த நாட்டின் உண்மையான தேசிய திருவிழாவாகும் இது.

கடந்த காலத்தில் புதுவருட தினத்தை சமூகங்கள் எவ்வளவு ஆர்வத்தோடும் , மகிழ்ச்சியோடும் எதிர்பார்த்திருந்தார்கள் என்பதை முதுமையடைந்த இலங்கையர்கள் இன்றும் நினைவில் கொண்டிருக்கிறார்கள்.

பிரிவினை அரசியலும் குறுகிய மனப்பாங்குடைய அரசியல்வாதிகளும் தமது சொந்த நலன்களைப் பேணுவதில் கருத்தாய் இருந்துள்ளார்களே தவிர தேசிய சொத்தையும், விழுமியங்களையும் பேணுவதற்குத் தவறி விட்டார்கள். அதனால் ஆழமான வடுக்கள் ஏற்பட்டுவிட்டன. இருந்தாலும் இந்த மாதிரி விழாக்கள் சமூகத்தின் கலாசாரத்தில் பின்னிப் பிணைந்து உறுதியாக நிலைத்துள்ளன.

நாட்டில் மீண்டும் ஒற்றுமை நிலவும் என்பதன் அறிகுறியாக கடந்த சனியன்று T20 கிரிக்கெட் உலகக் கிண்ணத்தை பங்களாதேஷில் வென்று திரும்பிய இலங்கை அணிக்கு இலங்கை மக்கள் அனைவரும் ஒன்று திரண்டு அளித்த வரவேற்பு அமைந்திருந்தது.

இன மற்றும் சமய வேறுபாடுகள் தடைகளாக இருக்கவில்லை. சிங்கக் கொடி வானில் பறக்க காலி முகத்திடலில் மக்கள் ஒன்றாகச் சேர்ந்து ஆடி மகிழ்ந்தார்கள். புலம்பெயர்ந்த இலங்கையர்களும், சமூக இணையங்கள் மூலம் தாயக மக்களுடன் இணைந்து கொண்டமை எம் மக்களுக்கு இடையிலான இணைப்பை மீண்டும் வெளிப்படுத்துவதாக இருந்தது.

நம்பிக்கை கொள்வதென்பதும், புதிய தொடக்கங்களை ஆரம்பிப்பதென்பதும் மனித சுபாவம். அலுத் அவுருது அல்லது புத்தாண்டு பிறக்கும் போது வெடிகள் கொளுத்துவதோடு முடிந்துவிடாது முக்கியமாக நாட்டின் எல்லா மூலை முடக்குகளில் இருந்தும் கோயில்களின் மணிகள் ஒலிப்பது நாட்டின் ஒற்றுமைக்கு மேலும் ஒரு சந்தர்ப்பத்தை ஏற்படுத்தும் சுப சகுனமாக இருக்கட்டும். எமக்கிடையிலுள்ள வித்தியாசங்களை மதித்துக் கொண்டு நாட்டுக்குக் கிடைத்துள்ள வேறுபாடான விழுமியங்களைக் கொண்டாடிக் கொண்டு ஒற்றுமைக்கான சந்தர்ப்பத்தை இறுக்கமாக பற்றிக் கொள்வோமாக.

"
உள்நாட்டிலும் சிறுபான்மையினர் அரசுக்கு ஒரு செய்தியை வழங்கியிருக்கிறார்கள். அண்மையில் முடிவடைந்த மேற்கு மற்றும் தென் மாகாண தேர்தல்களில் அவர்கள் அரசுக்கு எதிராக வாக்களித்திருந்தார்கள். அரசு இன வேறுபாட்டை கட்டியெழுப்புவதன் மூலம் பெரும்பான்மை வாக்குகளில் தங்கியிருக்கப் போகிறதா என்பதைப் பற்றி மீள் ஆய்வு செய்ய வேண்டியிருக்கும். துரதிர்ஷ்டவசமாக வடக்கிலுள்ள அரசியல்வாதிகள் சமீபகால நிகழ்வுகளில் இருந்து எதுவித பாடமும் படித்துக் கொள்ளாமல் அதே நிலைப்பாட்டில் இருந்து வருகிறார்கள்.

# மனித வள அபிவிருத்தியை ஏற்படுத்த வேண்டியது அவசியம்

*முல்லைத்தீவு அரச அதிபர் கருத்து*

கிளிநொச்சி, ஏப்.14
கல்விக்காக செய்கின்ற அபிவிருத்தியே மிக முக்கியமானது. நிலைத்து நிற்க கூடியது. எனவே மாணவர்களது கல்விக்காக ஊக்குவிப்பு வழங்க வேண்டியது எமது கடமையாகும். இவ்வாறு தெரிவித்தார் முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன்.

முல்லைத்தீவு விசுவமடு விவசாயிகள் பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் முன்னாள் தலைவர் அமரர் வல்லிபுரம் பத்மநாதன் கல்வி நிதியத்தின் ஏற்பாட்டில் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்களுக்கு மதிப்பளிக்கும் நிகழ்வும் கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையில் ஒன்பது "ஏ" சித்தி பெற்ற மாணவியைக் கௌரவிக்கும் நிகழ்வும் கடந்த வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் விசுவமடு மகா வித்தியாலய கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

எமது மாவட்டத்தை பொறுத்தவரையில் அபிவிருத்திகள் நடைபெற்றாலும் மனித வள அபிவிருத்தி மந்தமாகவே உள்ளது. மனித வள அபிவிருத்தி ஏற்பட்டால் ஏனைய அபிவிருத்திகள் தானாகவே உருவாகும். வெறுமனே பௌதிக வள அபிவிருத்தியை மேற்கொள்வதால் எமக்கு எந்தப் பயனும் கிடைக்கப் போவதில்லை.

எமது மாவட்டத்தில் இருக்கும் பதவி வெற்றிடங்களை மாவட்டத்தில் இருப்பவர்களைக் கொண்டு நிரப்ப முடியாத நிலை காணப்படுகிறது. இது ஒரு பெரும் குறைபாடாகும்.



அரச அதிபர் நா. வேதநாயகன் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற மாணவிக்கு பரிசில் வழங்குகிறார்.

தற்போது புதியதாக கிராம உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டனர் ஆனாலும் முல்லைத்தீவு மாவட்டத்தில் இன்னமும் 16 வெற்றிடங்கள் உள்ளன. இதற்கு முல்லைத்தீவு மாவட்டத்தில் தகுதியானவர்கள் இல்லையென்ற குற்றச்சாட்டு முன்வைக்கப்படுகின்றது. இதனை விட அண்மையில் முகாமைத்துவ உதவியாளர்கள் சேவையில் நியமனங்கள் வழங்கப்பட்டன.

இதிலும் மாவட்டச் செயலகம், பிரதேச செயலகங்கள் அடங்கலாக இன்னமும் ஐம்பதுக்கும் மேற்பட்ட வெற்றிடங்கள் காணப்படுகின்றன.

இவற்றை நிரப்புவதற்கு தகுதியானவர்கள் இல்லையென்ற குற்றசாட்டு முன்வைக்கப்படுகிறது. எனவே மனித வள அபிவிருத்தியை முன்னெடுப்பது எமது தேவையாகவுள்ளது. புத்தக கல்வியன்றி தொழில் மற்றும் வினைத்திறன் கல்வியை வளர்த்துக் கொள்வதன் மூலமே நாம் எதிர்காலத்தை வெல்ல முடியும்.

**இந்த வகையில் விசுவமடு** விவசாயிகள் பல நோக்கு கூட்டுறவுச் சங்கம் ஆரம்பித்து வைத்துள்ள இந்த முன் மாதிரியான செயற்பாடு மாணவர்களின் கல்வி. வளர்ச்சிக்கு பெரிதும் உறுதுணையாக இருக்கும். இதேபோன்று ஏனைய பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களும் முன் வர வேண்டும். - என்றார். (ஜ-55)

## நீண்ட தூரம் நடந்து மாணவர் பாடசாலைக்கு

*அக்கராயன் பாடசாலையில் இந்த அவலம்*

அக்கராயன், ஏப்.14
கிளிநொச்சி அக்கராயன் மகா வித்தியாலயத்துக்கு 5 கிலோ மீற்றர் தூரத்துக்கு அப்பால் இருந்து 400 க்கு மேற்பட்ட மாணவர்கள் நாள்தோறும் நடந்து பாடசாலைக்கு வருகை தருவதாக பாடசாலை முதல்வர் க.மதுரநாயகம் தெரிவித்தார்.

ஆனைவிழுந்தான் குளம், ஆரோக்கியபுரம், மணியங்குளம், விநாயகர் குடியிருப்பு, ஸ்கந்தபுரம், யூனியன்குளம், கோணாவில், சுமதிபுரம், அம்பலப்பெருமாள் குளம், கோட்டை கட்டிய குளம் ஆகிய கிராமங்களிலிருந்து 400 க்கு மேற்பட்ட மாணவர்கள் கால்நடையாக பாடசாலைக்கு வருகின்றனர். இவர்கள் நடந்து வருவதற்கு குறைந்தது ஒரு மணித்தியாலமாவது தேவைப்படுகின்றது. இதனால் பலர் நேரம் பிந்தியே பாடசாலைக்கு வருகின்றனர். அது மட்டுமன்றி நீண்ட தூரம் நடந்து பாடசாலை செல்ல வேண்டும் என்பதற்காக சில மாணவர்கள் வீடுகளிலேயே நின்று விடுகின்றனர். இவர்களது வரவு ஒழுங்கும் பாதிக்கப்படுகிறது. அது மட்டுமன்றி இவ்வாறான மாணவர்கள் பாடசாலையில் இருந்து இடைவிலகியும் விடுகின்றனர். எனவே உதவும் அமைப்புக்கள் குறித்த மாணவர்களது நலன் கருதி செயற்பட வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ஜ-18)

# தனியார் பஸ் நிலையம் விரைவில் அமைக்கப்படும்

*கிளிநொச்சி அரச அதிபர் தகவல்*

கிளிநொச்சி, ஏப்.14
கிளிநொச்சியில் தனியார் பஸ் நிலையம் அமைப்பதற்குரிய நிதி கிடைத்துள்ளதாகவும் வெகு விரைவில் பஸ் நிலையம் அமைக்கப்படவுள்ளதாகவும் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் றூபவதி கேதீஸ்வரன் தெரிவித்தார்.

கிளிநொச்சியில் மக்கள் மீள் குடியேறி நான்கு வருடங்கள் பூர்த்தியாகியுள்ள போதும், இன்று வரை பஸ் நிலையம் நிரந்தரமாக அமைக்கப்படவில்லை. இதனால் பயணிகள் பல்வேறு சிரமங்களை எதிர் கொண்டு வருகின்றனர்.



றூபவதி கேதீஸ்வரன்

இதனை விட தனியார் பஸ் நிலையமும் இ.போ.ச. பஸ் நிலையமும் ஒரே இடத்தில் இயங்குவதால் தனித்தனி முரண்பாடுகளும் ஏற்பட்டு வருகின்றது. இந்த நிலையில் குறித்த பிரச்சினைக்கு தீர்வு எட்டப்பட்டுள்ளதாக கிளிநொச்சி அரச அதிபரிடம் கேட்டபோதே அவர் மேற்படி தகவலை தெரிவித்தார்.

கிளிநொச்சியில் தனியார் பஸ் நிலையம் இலங்கை போக்குவரத்துச் சபை டிப்போவுக்கு சொந்தமான காணியின் ஒரு பகுதியில் அமையவுள்ளது - என்றார். (ஜ-55)

## புடைவைக் கடை உடைத்து திருட்டு

கிளிநொச்சி பரந்தன் பகுதியில் கடை ஒன்று கடந்த வெள்ளிக்கிழமை அதிகாலை உடைக்கப்பட்டு சுமார் நான்கு லட்சம் ரூபா பெறுமதியான புடைவைகள் அபகரிக்கப்பட்டுள்ளன என்று கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கிளிநொச்சி பரந்தன் பஸ் நிலைய சுற்றுப்பகுதியில் அமைந்துள்ள புடைவைக் கடையொன்றே இவ்வாறு உடைக்கப்பட்டு புடைவைகள் களவாடப்பட்டுள்ளன.

புது வருட வியாபாரத்துக்கென கொள்வனவு செய்யப்பட்ட பெறுமதியான புடைவை வகைகளே திருடர்கள் அபகரித்துச் சென்றுள்ளதாக முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலதிக விசாரணைகளை கிளிநொச்சி பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர். (ஜ-55)

## இரணைமடு தண்ணீர் பயனாளிகள் பதிவு செய்யுங்கள்

கிளிநொச்சி, ஏப்.14
கிளிநொச்சி இரணைமடு நீர்ப்பாசனத் திட்டத்தின்கீழ் நிலவுரிமை பெற்ற நீர்ப்பயனாளிகளின் இடாப்பை மீளத் திருத்திக் கொள்ளும் நோக்கில் குறியீட்டுப் பதிவேடு தயார்படுத்துவதற்கென பதிவுகள் இடம்பெறவுள்ளன என கிளிநொச்சி அரச அதிபர் திருமதி றூபவதி கேதீஸ்வரன் அறிவித்துள்ளார்.

மாதிரி விண்ணப்பப் படிவங்களை பெரும்பாக அலுவலகத்திலோ அல்லது கிளிநொச்சி கமநல அபிவிருத்தி அலுவலகத்திலோ பெற்று பூர்த்தி செய்து, அடுத்த மாதம் 15ஆம் திகதியோ அதற்கு முன்னரோ சம்பந்தப்பட்டவர்கள் பெரும்பாக அலுவலர்களிடம் கையளிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. நீர் வரி இடாப்பின் திருத்தத்துக்கு அமையவே இனி வரும் காலங்களில் நீர் வழங்கல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனவும் காப்புறுதி வசதிகள் வழங்கப்படும் எனவும் அரச அதிபர் அறிவித்துள்ளார். (ஜ-18)

## யானைத் தொல்லையால் மக்கள் பெரும் சிரமம்

முல்லைத்தீவு, ஏப்.14
முல்லைத்தீவு புத்துவெட்டுவான் கிராமத்தில் காட்டுயானைகள் தொல்லை அதிகரித்துள்ளதாகவும், இதனால் வெளியிடங்களுக்கு செல்லும் போது பெரும் அச்சத்துடனேயே செல்லவேண்டியுள்ளதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் கொக்காவில் சந்தியிலிருந்து துணுக்காய் வரைக்கும் செல்லும் சுமார் 19 கிலோ மீற்றர் நீளமான சி - 23 வீதி மையமாகக் கொண்டு புத்துவெட்டுவான் கிராமம் அமைந்துள்ளது. மேற்படி கிராமத்தில் 200 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசித்து வருகின்றனர்.

குறித்த வீதி அடர் காடுகளுக்கு காணப்படுவதால் மாலை வேளைகளில் காட்டு யானைகள் வீதியில் நடமாடுகிறது. அத்துடன் அதனூடாகச் சென்று வருவோரை அச்சுறுத்தி வருகிறது. இதனால் மக்கள் குறித்த வீதியூடாக போக்குவரத்து செய்ய அஞ்சுகின்றனர்.

அத்துடன் யானைக் கூட்டம் புத்துவெட்டுவான் கிராமத்துக்குள் புகுந்து பயிர்ச்செய்கைகளையும் பயன்தரும் மரங்களையும் அழித்து வருகின்றன. இதனால் தாம் நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

(ஜ-55)

## ஆசிரியரை நியமிக்க கோரிக்கை

ஒட்டுசுட்டான், ஏப்.14
ஒட்டுசுட்டான் மகா வித்தியாலயத்தில் உயர் தரம் வர்த்தகப் பிரிவு மற்றும் 10 ஆம்,11 ஆம் தரங்களுக்கான புவியியல் பாட ஆசிரியர்கள் இன்மையால் மாணவர்கள் நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன் இங்கு விசேட கல்வி ஆசிரியர்களும் இல்லாததால் மாணவர்கள் நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளனர்.

எனவேமாணவர்களதுநன்மை கருதி ஆசிரியர்களை நியமிக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ஜ-500)

## தண்ணீரைச் சிக்கனமாகப் பயன்படுத்த விவசாயிகள் ஆர்வம் காட்ட வேண்டும்

*கிளிநொச்சி பிரதி விவசாயப் பணிப்பாளர் கோரிக்கை*

கிளிநொச்சி, ஏப்.14
தற்போது நிலவும் வறட்சியை சமாளித்து தண்ணீரை சிக்கனமாக பயன்படுத்த அனைவரும் பழகிக் கொள்ள வேண்டும். அத்துடன் வறட்சி காலத்துக்கு உகந்த பயிர்களை பயிரிடுவதற்கும் விவசாயிகள் முன் வர வேண்டுமென கிளிநொச்சி மாவட்ட பிரதி விவசாயப் பணிப்பாளர் அ.செல்வராஜா கேட்டுள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

கிளிநொச்சி மாவட்டத்தில் தற்போது நிலவுகின்ற கடும் வறட்சியினால் குளங்களின் நீர் மட்டம் குறைவடைந்துள்ளது. இதனால் தண்ணீரைச் சிக்கனமாக பயன்படுத்தி பயிர்ச்செய்கை மேற்கொள்ள வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. இதனை விட நிலக்கீழ் தண்ணீரினையும் பாதுகாக்க வேண்டிய தேவையுள்ளது.

இதனால் வறட்சியை எதிர் கொள்ளக் கூடிய பயிர்களை தவிர்த்து சிக்கனமாக பயிர்களை பயிரிடுவதற்கு விவசாயிகள் முன் வர வேண்டும்.

கிளிநொச்சி மாவட்ட விவசாய திணைக்களம் போருக்கு பின்னர் பல்வேறு அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

திணைக்களத்தின் மூலம் 2010 ஆம் ஆண்டு 40 ஆயிரம் ஏக்கருக்குரிய விதை நெல் விநியோகிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் 78 ஆயிரம் ஏக்கர் மேட்டு நிலப் பயிர்ச் செய்கைகளுக்குரிய உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

2011 ஆம் ஆண்டு 2000 வரையான தண்ணீர் இறைக்கும் இயந்திரங்கள் மானிய முறையில் விவசாயி களுக்கு வழங்கப்பட்டுள்ளன. அத்துடன் குறைந்தளவு நீர்ப்பாசனத் தொகுதி, தூவல் நீர்ப்பாசனத் தொகுதி என்பனவும் வழங்கப்பட்டுள்ளன. வறட்சி காலங்களில் இவ்வாறான தண்ணீர் விநியோக நடவடிக்கையை மேற்கொள்வதன் மூலம் வினைத்திறனான பயிர்ச்செய்கை மேற்கொள்ள முடியும் - என்றார். (ஜ-55)

## பாடசாலைக்கு நிரந்தரக் கட்டடம் அமைக்குக!

அக்கராயன், ஏப்.14
கிளிநொச்சி அக்கராயன் ஆரம்ப வித்தியாலயத்துக்கு நிரந்தர கட்டடம் ஒன்றை அமைத்து தருமாறு பெற்றோர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

குறித்த பாடசாலையில் ஆரம்ப பிரிவைச் சேர்ந்த 160 மாணவர்கள் கல்வி பயின்று வருகின்றனர். எனினும் இங்கு நிரந்தரக் கட்டடங்கள் இல்லாததால் மாணவர்கள் பல்வேறு சிரமங்களை எதிர் கொண்டு வருகின்றனர்.

யுனிசெப் நிறுவனம் அமைத்து வழங்கிய ஓலைக் கொட்டகைகளில் தற்போது பாடசாலை இயங்கி வருகிறது.

இதனால் வகுப்பறைகளுக்கு நெருக்கடி நிலவுவதோடு ஒன்றுகூடல் மண்டபம், பூங்கா, குடிதண்ணீர் வசதி, மைதான வசதி உள்ளிட்டவற்றுக்கு பற்றாக்குறை நிலவுவதாகவும் பெற்றோர் தெரிவிக்கின்றனர்.

பாடசாலைக்கு விடுதிகள் அமைக்கவென கரைச்சி பிரதேச செயலகம் காணி ஒதுக்கியுள்ள நிலையில் விடுதிகள் அமைப்பதற்கு எந்த ஒதுக்கீடுகளும் கிடைக்காததால் அவற்றை அமைக்க முடியாது எனவும் பாடசாலை தரப்பினர் தெரிவிக்கின்றனர். (ஜ-18)



# சீரணி நாகபூஷணி அம்ப

## சீரணி, சண்டி

# ஆலய இரதோற்சவ சி

### பிரதேச செயலரின் வாழ்த்துச் செய்தி



ஈழவளத் திருநாட்டின் வடபாலமைந்த சைவமும் தமிழும் தழைத்தோங்கும் யாழ்நகரின் வலிகாமம் தென்மேற்கு பிரதேச செயலர் பிரிவில் உள்ள பிரசித்தி பெற்ற ஆலயங்களுள் சண்டிலிப்பாய் சீரணிப்பதியுறை ஸ்ரீ நாகபூசணி அம்பாள் ஆலயமும் ஒன்றாகும். நான்கு எழில்மிகு கோபுரங்களைக் கொண்டமைந்த இவ் ஆலயத்தில் வருடாந்த மகோற்சவம் நடைபெறுவது வழமையாகும். அவ்வகையில் இவ்வருடம் முதல் வருடாந்த மகோற்சவம் 18தினங்கள் நடைபெறுகின்றமை விசேட அம்சமாகும். மேலும் இவ்வருட மகோற்சவத்தின் 17ம் நாளாகிய இன்று அதாவது மலர்ந்துள்ள ஜய வருஷம் சித்திரை மாதம் 01ம் நாள் (14-04-2014) இரதோற்சவம் நடைபெறுகின்றமை சிறப்பம்சமாகும். அவ்வகையில் மலர்ந்துள்ள புதுவருட தினத்தில் நடைபெறும் தேர்த்திருவிழாவை முன்னிட்டு வெளியிடப்படும் சிறப்பு மலரிற்கு எனது வாழ்த்துச் செய்தியினை வழங்குவதோடு அம்பாளின் அருளாசி அனைவருக்கும் கிடைப்பதற்கும் நாட்டில் அமைதி, சமாதானம் என்பன நிலவுவதற்கும் எல்லாம்வல்ல ஸ்ரீ நாகபூசணி அம்பாளை பிரார்த்திப்போமாக.


**திரு.எஸ்.முரளிதரன்**
*பிரதேச செயலர், சண்டிலிப்பாய்.*

### செஞ்சொற் செல்வரின் ஆசிச்செய்தி



அருள் நிறைந்த சீரணி அம்பாள் தேர்ஏறிவரும் திருநாள் மகத்தானது. பல்லாயிரம் பக்தர்கள் சக்திபுரமாக விளங்கும் சண்டிலிப்பாய் நோக்கி வரும் நன்நாள். இத்திருநாள் குறித்து வாழ்த்துவதில் மிகவும் ஆனந்தமடைகிறேன். அபாரசக்தி நிறைந்த சீரணி நாகபூஷணிக்கு நேர்த்தி வைத்து பயன்பெற்ற பக்தர்கள் பல்வேறு திருப்பணிகளை காலத்துக்குக் காலம் நிறைவேற்றி வருகிறார்கள். திருக்கோவில் மிகவும் அழகாகக் காட்சியளிக்கிறது. பயபக்தி மிக்க இளைய தலைமுறை ஒன்றுபட்டுத் தொண்டாற்றி வருகிறார்கள். பழைய பாரம்பரியங்கள் பேணப்படும் இத்தலத்தில் ஆண்டுதோறும் புதிய திருப்பணிகள் நிறைவேற்றப்பட்டு வருவது வழக்கமாகி விட்டது. சீரணி அம்பாளின் புதுமையால் திருவிழாக் காலம் மக்கள் விரதம் இருந்து உள்ளம் உருகிக் கும்பிடுவதைக் காணலாம். அம்பாளின் பேரருளால் எம்மண்ணில் நீதியான தீர்வு கிடைக்கப் பிரார்த்தித்து அமைகிறேன்.

**கலாநிதி ஆறு.திருமுருகன்**
*தலைவர்,*
*ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை.*



### அன்னையவள் உணவுண்டால்
### ஆயிரம் பிணி தீரும்......
### அன்னதான சபையினரின் ஆசிச்செய்தி

ஈழமணித்திருநாட்டின் வடபகுதியில் நயினை நாகபூசணி அம்பாளுக்கும், சண்டிலிப்பாய் சீரணி நாகபூசணி தாய்க்கும் தொடர்புண்டு என்ற அடியவர்களின் நம்பிக்கையில் தீராத நோய்களைத் தீர்த்தருளும் தாயவளின் பாதம் பணிகின்றோம்.

தினம் தினம் உணவுப்பஞ்சம் நீக்கி நீண்ட ஆயுளோடும் குறைவற்ற செல்வங்களோடும் அனைவரும் மகிழ்வாக வாழ்வதற்காக சித்திரைக்கஞ்சியாக திருவமுது அளிக்கும் அன்னதான சபையினர் என்றும் அடியவர்களின் மனக்குறைபோக்கி தானங்களில் சிறந்த தானமாக அன்னதான சேவையை ஆற்றிவரும் நாளின் இன்று அம்பிகை சித்திரத்தேரேறி வருதல் கண்டு மகிழ்வுடன் வாழ்த்தி வணங்குவோமாக.

**அன்னதான சபை**
**சீரணி நாகபூஷணி அம்பாள் தேவஸ்தானம்**
**சீரணி, சண்டிலிப்பாய்.**

### அன்னை நாகபூஷணியின் திருவருள் உலகெங்கும் பரவட்டும்



ஈழமண்டலத்தின் வடபாலமைந்த யாழ்ப்பாணத்தின் சண்டிலிப்பாய் சீரணி எனும் திவ்விய திருப்பதியில் நாகபூஷணியாக வீற்றிருந்து தன்னிடம் தஞ்சமென்று வரும் அடியவர்களுக் கெல்லாம் வற்றாது அருள்வாரி வழங்கும் அன்னையின் ஜயவருட பெருந்திருவிழாவில் இரதோற்ஸவ பெருவிழா இன்று புதுவருடப்பிறப்பில் நடைபெறுவதை இட்டு நாம் மகிழ்ச்சி கொள்ளக்கூடிய ஒன்றாகவுள்ளது. சக்தியை முழுமுதலாக கொண்டு வழிபாடு இயற்றலும் சீரணி எனும் பதியில் அம்பாள் இன்று நாகபூசணியாக திருத்தேரில் ஏறி தன்கடைக்கண் பார்வையால் தன் அடியவர்களுக்கெல்லாம் காட்சி கொடுத்து அருள் வழங்குவது நாம் மானிடப்பிறவியில் பெற்ற பெரும்பயன் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை. அன்னை நாகபூசணியின் இரதோற்சவ சிறப்பு மலருக்கு வாழ்த்துரை வழங்குவது மிகவும் பெருமைக்குரிய விடயமாகும். மலர்ந்துள்ள இப்புதிய ஜயவருடம் தமிழ்மக்களது வாழ்வில் சாந்தியும் சமாதானத்தையும் வழங்க வேண்டும் என நாகபூசணி அம்பாளை பிரார்த்திப்பதோடு புத்தாண்டு வாழ்த்துக்களையும் அனைவருக்கும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

"அம்பிகையைச் சரண்புகுந்தால் அதிகவரம் பெறலாம்"

**செல்வி.கேதீஸ்வரி காசிநாதர்**
**(செயலாளர்)**
வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை
*மானிப்பாய்.*

### ஆலய வ

இலங்கையில் புகழ்பெற்ற யாழ்ப்பாண நகரத்தில் அ
சேர்ந்த மணியகாரன் உடையார் பரம்பரையினராகிய இ
வந்தார். அவர் மகன் இராமர் அவர் மகன் முருகேசு. முத்
பிள்ளை, அன்னப்பிள்ளை, நன்னிப்பிள்ளை, மயில்
ஆகியோருடன் இசைந்து வாழ்ந்து வந்தார். நாகபூஷணி அ
ஒன்றிலே நாகபூஷணி அம்பாள் கனவில் தோன்றி ன்
தனக்கொரு கோயில் அமைக்கும்படி கேட்டதற்கு அமைய
செய்துவர வைத்திலிங்கம் அவர்களிடம் ஒப்படைத்தார்.
வழிபட்டு வந்தார்கள். காலம் காலமாக முருகேசு பரம்பரைய

## இரதோற்சவம் சிறப்


ஐங்கரன் மோட்டோர்ஸ்



சியாட் ரயர், Fevicol தயாரிப்புக்களின் ஏக விநியோகஸ்தர்கள். ஆட்டோ, மோட்டார் சைக்கிள், துவிச்சக்கரவண்டி, வாட்டர்பம் உதிரிப்பாகங்கள் விற்பனையாளர்.
சந்தை முன்பாக, மானிப்பாய்.



லீலா வெதுப்பகம் சுவையகம்
சீரணி, சண்டிலிப்பாய்

லம்போதரன் மோட்டோஸ்
பலாலி வீதி, டிப்போ அருகாமை, கோண்டாவில்

சக்தி எலக்ரிக்கல்ஸ்
மின்சார உபகரணங்கள், இலத்திரனியல் பொருட்கள், வீட்டு மின் இணைப்பு பொருட்கள், PVC குழாய்கள், என்பவற்றை மலிவான விலையில் பெற்றுக்கொள்ளலாம்.
ஓடைக்கரை வீதி, சங்கானை.



சுந்தர்சன்
பிரதான வீதி, மானிப்பாய். தொ.பே : 0212255136


நியூ சண்முகானந்தா ரேக்ஸ்
23, (58) பெரிய கடை, யாழ்ப்பாணம்
தொ.பே : 0212223356

கணபதி ஹாட்வெயர்ஸ்
தொட்டிலடி, சங்கானை.

COMPUTER WORLD PRINTERS & TRAVELS
All Kinds of Computer Works
7ம் கட்டை, சண்டிலிப்பாய்.

ஆசைப்பிள்ளை அன் சன் நகை மாடம்
கே.ரீ பிளாசா, பிரதான வீதி, சங்கானை.
தொ.பே : 0213212399

# ாள் தேவஸ்தானம்
# லிப்பாய்
# றப்பிதழ் - 2014






## மகோற்சவ குருவின் ஆசிச்செய்தி




யாழ் நகரின் கண்ணே சண்டிலிப்பாய் சீரணிபதியுறை ஸ்ரீ நாகபூசணி அம்பாளின் வருடாந்த மகோற்சவம் விஜய வருடம் பங்குனி மாதம் 15ம் நாள் (29-03-2014) சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி இன்றைய தினம் சித்திரா பௌர்ணமி நன்நாளில் தேரேறி வருகின்றாள். வானுயர்ந்த கோபுரங்களும் மணிமண்டபங்களும் சிறந்து விளங்கி ஆலய சூழல் எங்கும் சோலைகளாக நெடி உயர்ந்த மரங்களோடு தெய்வீக காட்சி தருகின்றாள். தனது பிள்ளைகளான விநாயகப் பெருமானும் முருகப்பெருமானும் அருகே வர அன்னை தன் தங்க ரதமேறி அடியவர்களுக்கு அருள்புரியும் பெருநோக்கோடு இன்று தேர்வலம் வருகின்றாள். இக்காட்சியை காண ஆயிரம் கண் வேண்டுமன்றோ. ஆயிரம் அடியவர்ககள் கூடிவடம் பிடித்து தேர் இழுத்து அன்னையின் உள்ளத்தில் இடம்பிடிக்க எத்தனை நாட்கள் தவம் இருந்தனரோ தேர்த்திருவிழா சிறக்கவும் அடியவர்கள் நனமை பெறவும் எனது நல்லாசிகள்.

**பிரம்மஸ்ரீ.கு.சோமாஸ்கந்தக்குருக்கள்**
(தேவஸ்தான.குரு)

## அம்பிகையின் அருள் பெருகட்டும்

ஆரணி பூரணி அபிராமித் தாயே கடைக்கண் பாராயோ. ஆயிரம் கண் உடையாள் சீரணி மக்களின் துயரம் தீர்க்காயோ அபிராமித் தாயே. உன் பாதம் மலர் போட்டுத் தொழுவோம் அம்மா. வீதியில் உலாவும் பசுக்கள் எல்லாம் பால் அபிஷேகம் செய்ய நான் காணும் காட்சி எல்லாம் உள்ளம் சிலுசிலுக்க வைக்குதம்மா தாயே. மக்கள் குறை எல்லாம் தீர்ப்பாய் அம்மா. மக்கள் தூய்மையான செயலாற்ற மக்கள் மழை பொழிய அருள் மக்கள் காட்சியளிக்க அருள் மழை பொழிய காற்றோடு காற்றாக வந்தாய் அம்மா. உன் பாதம் சரண் அடைந்தேன் அம்மா.

**தம்பையா பரஞ்சோதி**
**(ஆதீன கர்த்தா)**
*சீரணி நாகபூசணி அம்பாள் தேவஸ்தானம்*



## அன்பர்க்கு அருளும் சீரணித்தாய்



சிங்காரத் தேரேறி வீதி உலா வருகின்ற
சீரணிப் பதிவாழ் நாகபூசணித்தாயே!
அன்பர்கள் நெஞ்சினிலே
அன்னையாய் திகழ்பவளே!
அவலங்கள் போக்கி நிதம்
அடியவர்க்கு அருள்பவளே!
கோடி முறை உனைப் பணிய
நாடி வரும் பக்தருக்கு
பாவ வினை போக்கிடுவாய்
பல வரங்கள் நல்கிடுவாய்

**இ.சிறீதரன் (தலைவர்)**
*இந்து இளைஞர் மன்றம்*



## வரலாறு

மைந்துள்ள பதியில் வாழ் இன்புற்ற வேளாளகுலத்தைச் ராமன் சீரணி என்னும் மண்ணில் சிறப்புற்று வாழ்ந்து தா் இனசன வழியில் பெரிய சாஸ்திரியார் தெய்வானைப் வாகனம். பெரியபிள்ளை, சின்னப்பிள்ளை, வேலர் அம்பாள் வாலாயம் பெற்ற முருகேசுவிடம் சோமவாரநாள் இவ்[illegible]த்தில் சீரணியில் எழுந்தருள வேண்டும் என்றும் சைவ முறைப்படி ஒரு கொட்டகை அமைத்து அதில் பூசை இம்முறைப்படி இன சன மக்கள் எல்லோரும் சேர்ந்து னர் பரிபாலித்து வருகின்றனர்.

## புற வாழ்த்துவோர்

**MANIYAM IMPEX**
இல.75 (121A),
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

**துர்க்கா மரத்தொழிற்சாலை**
மில் ஒழுங்கை, சண்டிலிப்பாய். தொ.பே : 0213217963

**கம்ஷா களஞ்சியம்**
சண்டிலிப்பாய் மேற்கு, சண்டிலிப்பாய்.

**YASO TEX**
பிரதான வீதி, நெல்லியடி

**பாக்கியரட்ணம் ஹாட்வெயார்ஸ்**
பிரதான வீதி, சங்கானை. தொ.பே : 0212250105

**தரன் ரேடர்ஸ்**
130, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். தொ.பே : 0212222664

**ITALY TRAVELS**
யாழ் - கொழும்பு வான் சேவை
Tel : 00393510036666, 0777863091



**V.K.T**
**அரிசி ஆலை**
நீர்வேலி சந்தி நீர்வேலி Tel : 077 525 5882



**நாகபூசணி அரிசி ஆலை**
சீரணிச் சந்தி சண்டிலிப்பாய்

**ஐடியல் அக்கடமி**
தரம் 6 முதல் A/L வரை திறமையும் அனுபவமும்
வாய்ந்த ஆசிரியர் குழுவுடன்
தலைமையகம் : சீரணிச் சந்தி சண்டிலிப்பாய்.
கிளை 1 : இடைப்பிட்டி, காரைநகர்
கிளை 2 : கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்,

**கந்தசாமி அன் சன்ஸ்**
பல்சரக்குப் பொருட்களை மொத்தமாகவும்,
சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.
பிரதான வீதி, சங்கானை.

**மொடோண் மற்ஸ் அக்கடமி**
பிரதேச செயலகம், அருகாமை, சண்டிலிப்பாய்.
தரம் 4-11 வரை A/L கலைப்பிரிவு
O/L Day வகுப்புக்கள் நடைபெறுகின்றன.
நிர்வாகி : B.குகா (கணித ஆசிரியர்)



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா



**மேடம்**: அரச சலுகைகள் நினைத்தபடி கிடைக்கும். உங்கள் முயற்சிகள் எதுவானாலும் வெற்றி பெறும். தொட்டது துலங்கும். நினைத்தது நடக்கும். எதிர்பார்க்கும் இடங்களிலிருந்து நல்ல செய்தி வரும். ஆரோக்கியம் சம்பந்தமான தொல்லைகள் நீங்கும்.



**இடபம்**: நீண்டநாள் எதிர்பார்ப்புகள் நிறைவேறும். வேலையில்லாத வர்களுக்கு வேலை கிடைக்கும். ஏற்கெனவே வேலையில் உள்ளவர்களுக்கு பதவி உயர்வு கிடைக்கும். ஊர் ஊராகச் சென்று செய்யக்கூடிய வேலை அமையும்.



**மிதுனம்**: குடும்பத்தாரின் தேவைகளைக் காலம் அறிந்து நிறைவேற்ற முடியாமல் போகும். அதனால், குடும்பத்தில் குழப்பங்களும் ஒற்றுமைக் குறையும் ஏற்படும். அதன் பயனாக உங்கள் மீது மனக் கசப்பும் வெறுப்பும் ஏற்படும்.



**கடகம்**: சொந்தத் தொழில் செய்பவர்கள் எச்சரிக்கையோடு முக்கிய முடிவுகளை எடுக்காவிட்டால் திண்டாட நேரும். அலுவலகத்தில் வேலை பார்ப்பவர்களுக்கு வேலைப்பளு அதிகமாகும்.



**சிங்கம்**: புதிதாகத் தொழில் செய்ய நினைப்பவர்கள் கவனத்துடன் செயலாற்ற வேண்டும். கூட்டுத்தொழில் செய்பவர்கள் கணக்கு வழக்குகளை சரியாக வைத்துக்கொள்ளாவிட்டால் கூட்டாளிகள் விலக நேரும். சகோதரர்களிடையேயும் பிளவு ஏற்படலாம்.



**கன்னி**: தொழில், வியாபாரம் மேன்மையடையும். தொழில் சம்பந்தமான வெளிநாட்டு பிரயாணங்களை மேற்கொள்ள வேண்டியிருக்கும். வெளிநாட்டு வேலை வாய்ப்புக்காகக் காத்திருக்கும் சிலருக்கு வெளிநாடு செல்லும் யோகம் கிடைக்கும்.



**துலாம்**: கௌரவப் பட்டங்களும் பதவி, பொறுப்புகளும் கிடைக்கும். ஞானிகள், சாதுக்களின் தரிசனமும் ஆசியும் கிடைக்கும். பூர்வீகச் சொத்தினால் ஆதாயமும் மேன்மையும் கிடைக்கும். சிலர் இந்த சமயத்தில் தர்ம நியாயங்களுக்கு உட்பட்டு பணம் தேடுவார்கள்.



**விருச்சிகம்**: அலுவலகத்தில் சுமுகமான நிலை ஏற்படும். உடன் வேலை செய்பவர்களால் உங்களுக்கு அனுகூலம் கிடைக்கும். நல்ல கூட்டாளி கிடைப்பார். சிலர் புதிய வீடுகட்டி கிரகப்பிரவேசம் செய்வார்கள். புதிய ஆடை, ஆபரணம் வாங்குவார்கள்.



**தனுசு**: மாற்றுமத நண்பர்களால் ஆதாயம் கிடைக்கும். உங்கள் முகத்தில் உள்ள பொலிவு அனைவரையும் கவர்ந்திழுக்கும். தொழிலில் மேன்மை ஏற்படும். நல்ல வேலை வாய்ப்பு கிடைக்கும். மனதில் தைரியமும் செயலில் சுறுசுறுப்பும் ஏற்படும்.



**மகரம்**: பல பொறுப்பான பதவிகளும் உங்களுக்கு கிடைக்கும். உங்களுக்கு அதிகாரமான பதவி அந்தஸ்து முதலியவை உண்டாகும். உங்களுடைய முயற்சி இல்லாமலே வருமானம் உங்களைத் தேடி வரும்.



**கும்பம்**: இதுவரை அனுபவித்து வந்த துன்பம், தொல்லை, வறுமை அனைத்தும் நீங்கி வளம் பெறுவீர்கள். இதுவரை குடத்துக்குள் இட்ட விளக்காக உங்கள் திறமைகள் வெளி உலகுக்குத் தெரியாமல் இருந்த நிலை மாறி திறமைகள் வெளி உலகுக்குத் தெரியவரும்.



**மீனம்**: சொன்னது சொன்னவாறு நடந்துகொண்டு உங்கள் வாழ்க்கையை மாற்றிக்கொள்வீர்கள். தற்போது உங்களுக்கு எதிராக உங்கள் எதிரிகளால் செய்யப்படும் காரியங்கள் கூட சாதகமாக உங்களுக்கு மாறி உங்களை மேம்படுத்தும்.

## நாளை

**சித்திரை-02 செவ்வாய்க்கிழமை | 15.04.2014**

திதி: பூரணை பி.ப.01.49 வரை
நட்சத்திரம்: சித்திரை
மு.இ.11.40 வரை

சுபநேரம்: 10.34-12.04 வரை
இராகுகாலம்:.03.04-04.34 வரை

## விவேகானந்தர் சிந்தனையில் இருந்து---



### அமெரிக்கரைக் கேலி செய்தல்


"இந்த நாட்டு ஆண்கள் எனக்கு விநோதமாகத் தோன்றுகிறார்கள்." என்று விவேகானந்தர் சொல்லும் போது அவர் கண்களில் கேலி தென்படுகிறது. "பெண்களை வழிபடுவதாகக் கூறினாலும் அவர்களின் பருவத்தையும் அழகையுமே வணங்குகிறார்கள். சுளிப்பையும் நரையையும் அவர்கள் ஒருபோதும் காதலிப்பதில்லை. கிழவிகளை எரித்துவிடும் பரம்பரைப் பழக்கம் அமெரிக்கர்களுக்கு இருந்தது" என அவர் உறுதியாக நம்புகிறார்.

இந்தக் கால வரலாற்றில் அதற்குப் பெயர் சூனியக்காரிகளை எரிப்பது என்பதே. சூனியக்காரியென்று குற்றஞ்சாட்டுபவர்கள் ஆண்களே.

கிழவியின் வயதே வழக்கமாக அவளை எரிக்குமிடத்துக்கு அழைத்துச் சென்றது. ஆகவே, பெண்களை உயிருடன் தீக்கிரையாக்குவது இந்துக்களுக்கு மட்டுமுள்ள பழக்கமல்ல என்பது தெளிவாகிறது.

கிறிஸ்தவக் குருமார் கிழவிகளை எரித்து வந்தனர் என்பதை நினைவு கூர்ந்தால், இந்து விதவைகளை எரிப்பது அவ்வளவு பயங்கரமாக வருணிக்கப்படத் தேவையில்லை என அவர் நம்புகிறார்.

# உலகின் மிகப்பெரிய தங்கப்படிகம்



தென் அமெரிக்க நாடான வெனிசூலாவில் உலகின் மிகப்பெரிய தங்கப்படிகம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. கோல்ப் பந்து அளவுக்கு இருந்த படிகத்தின் எடை 217.78 கிராம் ஆகும், அதன் மதிப்பு சுமார் ரூ.9 கோடி.

அமெரிக்க நிபுணர்கள் நியூட்ரான் ஸ்கானரைப் பயன்படுத்தி குறித்த படிகத்தை பரிசோதித்து அதன் உண்மைத்தன்மையை உறுதிப்படுத்தி உள்ளனர்.

எக்ஸ்ரே, எலெக்ட்ரான் போன்றவற்றை போல இல்லாமல் நியூட்ரான்கள், பெரும்பாலான கனிமங்களில் மிக ஆழமாக ஊடுருவிப் பார்க்கவல்லவை.

## சுடோக்கு

### எண் விளையாட்டு

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 2 | 3 | 7 | | | | | 9 |
| | 1 | | | | 2 | 4 | 3 | |
| | | | | | | 5 | 7 | |
| 6 | 3 | | 1 | 5 | 8 | | 2 | |
| | | | 4 | | 6 | | | |
| | 7 | | 3 | 2 | 9 | | 8 | 1 |
| | 9 | 4 | | | | | | |
| | 6 | 1 | 2 | | | | 4 | |
| 2 | | | | | 3 | 1 | 9 | |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 9 | 2 | 5 | 1 | 3 | 8 | 7 | 6 | 4 |
| 4 | 1 | 3 | 6 | 5 | 7 | 2 | 8 | 9 |
| 8 | 7 | 6 | 9 | 2 | 4 | 5 | 1 | 3 |
| 1 | 5 | 8 | 3 | 4 | 2 | 6 | 9 | 7 |
| 7 | 6 | 9 | 5 | 8 | 1 | 4 | 3 | 2 |
| 3 | 4 | 2 | 7 | 9 | 6 | 8 | 5 | 1 |
| 6 | 3 | 1 | 2 | 7 | 5 | 9 | 4 | 8 |
| 5 | 8 | 7 | 4 | 1 | 9 | 3 | 2 | 6 |
| 2 | 9 | 4 | 8 | 6 | 3 | 1 | 7 | 5 |

## போலி நாணயத்தாளுடன் பெண் கைது

குளியாப்பிட்டிய பிரதேசத்தில் ஆயிரம் ரூபா போலி நாணயத்தாளுடன் 36 வயதுடைய பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

குளியாப்பிட்டிய பொலிஸ் பிரிவில் உள்ள தனியார் வங்கி ஒன்றில் வைப்பில் இடுவதற்காகச் சென்றபோது பொலிஸாருக்கு வழங்கப்பட்ட தகவலின் அடிப்படையில் குறித்த பெண் கைது செய்யப்பட்டுள்ளார்.

அவரிடமிருந்து 5 போலி நாணயத்தாள்களை பொலிஸார் மீட்டுள்ளனர். சந்தேகநபரை குளியாப்பிட்டிய நீதிவான் முன்னிலையில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக குளியாப்பிட்டிய பொலிஸார் தெரிவிக்கின்றனர். (வ)

## இளையோர் மாநாடு செலவு 70 கோடி

கொழும்பு. ஏப்.14

எதிர்வரும் மே மாதத்தில் கொழும்பில் இடம்பெறவுள்ள உலக இளையோர் மாநாடு தொடர்பாக 50 கோடிக்கும் 70 கோடிக்கும் இடைப்பட்ட தொகை செலவாகக் கூடும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

இந்த மாநாட்டுக்கான செலவுத் தொகையில் 10 கோடி ரூபா இலங்கை அரசினால் வழங்கப்படவுள்ளது. பல்வேறு வித மேம்படுத்தல் செயற்பாடுகள் மூலமாக எஞ்சிய செலவுத் தொகைகள் பெறப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ஒ-22)



விபத்துக்குள்ளான பஸ்

# கல்முனையில் பஸ் விபத்து மூவர் சாவு: 16 பேர் காயம்

அம்பாறை, ஏப்.14

கல்முனைக்குடி முகைதீன் ஜும் ஆப் பள்ளிவாசலுக்கு முன்பாகவுள்ள வளைவில் இடம்பெற்ற பஸ் விபத்தில் மூவர் உயிரிழந்ததுடன் 16 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

கொழும்பில் இருந்து அக்கரைப்பற்று நோக்கி பயணித்த அதி சொகுசு பஸ் ஒன்றும் வவுனியா செல்வதற்காக கல்முனை நகரை நோக்கிப் பயணித்த அசோக் லேலண்ட் பஸ் ஒன்றும் நேருக்குநேர் மோதி விபத்துக்குள்ளாகின.

காயமடைந்தவர்கள் அருகிலுள்ள கல்முனை அஸ்றப் ஞாபகார்த்த மருத்துவமனையின் அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளதுடன் உயிரிழந்தவர்களின் உடல்களும் அங்கேயே வைக்கப்பட்டுள்ளன.

> காயமடைந்தவர்கள் அருகிலுள்ள கல்முனை அஸ்றப் ஞாபகார்த்த மருத்துவ மனையின் அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

உயிரிழந்தவர்களில் ஆண் ஒருவரும் பெண்கள் இருவரும் அடங்குகின்றனர். உயிரிழந்தவர்கள் கொழும்பு ஆமர் வீதியைச் சேர்ந்த 43 வயதுடைய சல்மான் பாரிஸ், சாய்ந்தமருது அல் ஹிலால் வீதியைச் சேர்ந்த 48 வயதுடைய சலீமா தமீம் (மின்னா), அக்கரைப்பற்று மத்திய வீதியைச் சேர்ந்த 55 வயதுடைய பீபி பாத்திமா என அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

வவுனியா நோக்கிச் சென்ற பஸ்ஸில் மதுபானத்துடன் போத்தலொன்று காணப்பட்டமையால் அந்த பஸ் சாரதி மதுபோதையில் இருந்திருக்கலாம் என்று கல்முனை பொலிஸார் சந்தேகம் தெரிவித்தனர்.

இந்த விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை கல்முனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (வ)

## மூதூரில் அகத்தியர் கோயில் அமைப்பதை தடுத்தார் பிக்கு

திருமலை, ஏப்.14

திருகோணமலை, மூதூர் கங்குவேலி தமிழ் கிராமத்தில் அகத்தியர் கோயில் அமைப்பு பணிகள் பௌத்த பிக்குவால் நிறுத்தப்பட்டுள்ளன.

ஏற்கனவே இந்த கிராமத்தில் அகத்திய முனிவரின் கோயிலை அமைப்பதற்கு திருகோணமலை மாவட்ட அரச அதிபர் அனுமதி வழங்கியுள்ளார்.

அதனையடுத்து அமைப்பு பணிகளை கிராமமக்கள் முன்னெடுத்தனர். எனினும் அந்த இடம் இலங்கை தொல்பொருள் ஆராய்ச்சி திணைக்களத்துக்குச் சொந்தமானது என்று கூறி அங்கு அகத்தியர் கோயில் அமைக்கப்படக் கூடாது என்று சிலர் அச்சுறுத்தல் விடுத்து வந்தனர்.

இந்தநிலையில் அது தொல்பொருள் திணைக்களத்துக்குச் சொந்தமான காணி அல்ல என்று அரச தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

> இந்த கிராமத்தில் அகத்திய முனிவரின் கோயிலை அமைப்பதற்கு திருகோணமலை மாவட்ட அரச அதிபர் அனுமதி வழங்கியுள்ளார்.

அதனையடுத்து நேற்று முன்தினம் அகத்தியருக்கான கோயிலை அமைக்கும் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது அங்கு ஒரு பௌத்த பிக்குவும் சிலரும் கம்பு தடிகளுடன் சென்று கோயில் அமைப்பு பணிகளை நிறுத்தியுள்ளனர்.

எனினும் பயம் காரணமாக இந்த தகவலை எவரும் வெளியிட முன்வரவில்லை. பொதுபலசேனா அமைப்பினரே இந்த அச்சுறுத்தலை விடுத்ததாக திருகோணமலை தகவல்கள் தெரிவிக்கின்றன. (வ)

## புத்தாண்டு முடிந்த கையோடு மஹிந்த- சந்திரிகா சந்திப்பு

கொழும்பு, ஏப்.14

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவும் சித்திரைப் புத்தாண்டுக் கொண்டாட்டத்தின் பின்னர் சந்தித்துக் கருத்துக்களைப் பரிமாறிக் கொள்ள விருப்பதாக அரச வட்டாரங்கள் தெரிவிக்கின்றன என்று சிங்களப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதியான சந்திரிகா அம்மையாரினால் மூன்று சந்தர்ப்பங்களில் விடுக்கப்பட்டிருந்த கோரிக்கைக்கு அமைய அந்தச் சந்திப்புக்கு ஜனாதிபதி இணக்கம் தெரிவித்திருப்பதாக அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மதங்கள் ரீதியிலான சகவாழ்வு சம்பந்தமான பேச்சுக்கு சந்தர்ப்பம் வழங்குமாறு முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவினால் ஜனாதிபதிக்குக் கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தபோதும், இவர்கள் இருவருக்குமிடையில் அண்மையில் உருவாகியிருந்த பிரச்சினைக்குரிய விடயங்கள் சம்பந்தமாகவும் அந்தச் சந்திப்பின் போது கருத்துக்கள் பரிமாறிக் கொள்ளப்படக் கூடும் எனவும் தெரிய வருகிறது. (ஒ-22)

## கற்பிட்டி பவளப் பாறைகளைப் பாதுகாக்க நடவடிக்கை

கொழும்பு, ஏப்.14

நாட்டின் விசாலமான பவளப்பாறைகளாக கருதப்படும் கற்பிட்டி பவளப்பாறையைப் பாதுகாக்க வன ஜீவராசிகள் பாதுகாப்பு திணைக்களம் உள்ளிட்ட சில நிறுவனங்கள் நடவடிக்கை எடுத்துள்ளன.

கிலோமீற்றர் 306 வரையான பிரதேசத்தில் அமைந்துள்ள இந்தப் பகுதிகளில் 122 வகையான பவளப் பாறைகள் காணப்படுகின்றன.



கோப்புப்படம்

மேலும் இதனைச் சூழ 400 வகையான மீனினங்கள் வாழ்வதாகவும் தெரியவந்துள்ளது.

1992 ஆம் ஆண்டில் குறித்த பவளப்பாறை அமைந்துள்ள கடற்பிரதேசம் பாதுகாக்கப்பட்ட பகுதியாக பெயரிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (வ)

ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில்
04.10.1991



விண்ணில்
14.04.2009

ராஜ்குமார் மதிசாயினி



எமது அன்புச் செல்வம் மதிசாயினியே!
நீ எம்முடன் வாழ்ந்த காலங்கள் மறக்க முடியாதவை!
கூடிப் பிறந்த மதுசாயினி உன்னை நினைத்து
ஏங்கித் தவிக்கின்றாள்!
மற்றும் சகோதரர்கள் சகோதரிகள், அப்பா அம்மா
மற்றும் உறவுகள் எல்லாம் உனது நினைவிலே
நிதமும் தவிக்கின்றோம்
அன்பும், பண்பும், மகிழ்வும் நிறைந்த
அந்த நாள்கள் மீண்டும் வராதா என்று ஏங்குகின்றோம்.
பார்த்த இடமெல்லாம் உமது நினைவைத் தூண்டுகின்றதே!
ஆண்டுகள் பல சென்றாலும் உனது நினைவுகள் அழியாதவை.

2 ஆம் யுனிற், பாலிநகர்,
வவுனிக்குளம்.
வன்னியசிங்கம் ராஜ்குமார்
குடும்பத்தினர்

17ஆம் ஆண்டு நினைவஞ்சலி



செல்லையா
இரத்தினசிங்கம் (S.R)
(பிரபல முன்னாள்
சுன்னாகம்-கொழும்பு வாழைக்குலை வர்த்தகர்)
திதி : 14.04.2014 திங்கட்கிழமை
எங்கள் அன்பு ஐயாவே
இன்று ஆயிரம் செல்வங்கள்
வந்தாலும் நாம் இழந்த ஈடு
இணையற்ற செல்வம்
எங்கள் ஐயாவே, உங்களது
ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கின்றோம்.
அன்பு மனைவி (பூம்பதம்), மகன்மார், மகள்மார், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள், மச்சான்மார், மச்சாள்மார்.
தகவல் : இரத்தினசிங்கம் யோகன் (நோர்வே)
தேவானந்தன் - வாசுகி
இல : 118. 2/2. W.A. சில்வா மாவத்தை,
வெள்ளவத்தை, கொழும்பு - 06. தொலைபேசி : 0112 507 686.
பங்களா லேன், மல்லாகம், தொலைபேசி : 0752 659 669

12 ஆம் ஆண்டு நினைவில்

அமரர்
வைரவி சுபாஸ்
திதி: சித்திராபௌர்ணமி
அன்னை மடியில்
24.10.1950
அரக்கர் அழிப்பில்
26.05.2002



ஐயனே... சுபாஸ் ஆண்டவனடி நீங்கள் சேர்ந்து
ஆண்டுகள் பன்னிரண்டு ஆனதுவோ நம்ப முடியவில்லை நாதா உங்கள்
புன் சிரிப்பும் பூமலர்ந்த வதனமும்- இன்றும் எங்கள் கண்முன் நின்று
கதைகள் பல சொல்கிறதே... அன்று ஆலய வாசலில் உங்களை
அழித்த பாவத்திற்காய் இன்று இருட்டறைக் கம்பிகளை எண்ணும்
இதயமற்ற அரக்கர்களுக்கு அழிவென்பது உனக்கில்லை-என்பது
தெரிந்தா செய்தார்கள் இல்லையே... ஐயா சுபாஸ்
அன்பின் திருவுருவே ஆண்டவனின் தொண்டனே
ஆண்டுகள் பன்னிரண்டென்ன ஜென்மங்கள் ஏழேழிலும்
எங்களுடன் நீங்கள் இருப்பீர்கள் உங்கள் நினைவுடன் நாமிருப்போம்.
அச்சுவேலி வடக்கு,
அச்சுவேலி.
என்றும் உங்கள் நினைவுடன்
குடும்பத்தினர்.

**பேக்கறி உரிமையாளர்கள் கேக் தயாரிப்பாளர்கள் பிஸ்கற் தயாரிப்பாளர்களின் கவனத்திற்கு!!!**

காலம், காலமாக தரத்தில் உங்கள் நம்பிக்கையை வென்ற
றோயல் பேக்கிங் பவுடர் தற்பொழுது
1kg பைக்கற்றில்!!
மிருதுவான கேக் தயாரிப்பதற்கும்,
அனைத்து வகையான பேக்கறி மற்றும்
பிஸ்கற் தயாரிப்புகளிற்கும் இன்றே பாவியுங்கள்.
தரத்திற் சிறந்த, விலையில் குறைந்த
**“றோயல் பேக்கிங் பவுடர்”**




Manufactured By:
Royal Industries
No.22,1/1, Adamally Buiding
Wolfendhal Street,
Colombo-13.

ஏக விநியோகஸ்தர் :
**சிவா நறுமணப் பூங்கா**
இல. 288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே. : 021 222 2567

**ஆசாரியார் அபிஷேகம் பெற்ற குருக்களுக்கு பாராட்டு**



அல்வாய் குமிழடி அதிசய
விநாயகர் ஆலயக்குருக்கள்
**சிவப்பிரம்ம ஸ்ரீ சிவாச்சாரியார்**
**சிவகுகேந்திர**
குருக்களுக்கு
23.03.2014
ஆசாரியார் அபிஷேகமும்,
குருப்பட்டமளிப்பும்
இடம்பெற்றது.
குருப்பட்டம் பெற்ற ஆலயக் குருக்களை
ஜயவருஷ புத்தாண்டு தினத்தன்று
ஆலயத்தில் ஆலய நிர்வாகியும்
ஊர் மக்களும் ஒன்றிணைந்து
கௌரவித்து
அவர் இதே போன்று மேலும் பல
பட்டங்கள் பெற்று எங்கள் இந்து
சமயத்தில் வரலாறு காணவேண்டும்
என்றும் அவர் தன்
குடும்பத்தினரோடு பல
சௌபாக்கியங்களும் பெற்று
மண்ணில் நல்ல வண்ணம்
வாழ வேண்டும் என்றும்
வாழ்த்துகின்றோம்.

**வாழ்த்துபவர்கள்:**
ஆலய நிர்வாகி க.புவனேந்திரன்,
ஊர்மக்கள்.

(33447)(12.3.6)

## வருடப்பிறப்பு தினத்தில் சிறப்பு வழிபாடுகள்

வலி.வடக்கு, ஏப்.14

மாவிட்டபுரம் ஸ்ரீ கந்தசுவாமி ஆலயத்தில் ஜய வருடப்பிறப்புத் தினத்தை முன்னிட்டு சிறப்பு வழிபாடுகள் இடம்பெறவுள்ளன.

புதுவருடப் பிறப்புத் தினமான் இன்றைய தினம் திங்கட்கிழமை காலை7 மணிக்கு உற்சவ காலப் பூசை இடம்பெறும். இறுதியாக மாலை 7 மணிக்கு அர்த்த சாமப் பூசை இடம்பெறும்.

அன்றைய தினம் காலை 9 மணி முதல் கந்தபுராண படிப்பும் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க)

## ஏழை மக்களுக்கு கைவிஷேடம்

கல்வியங்காட்டுச் சந்தியில் கடந்த 2 ஆம் திகதி திறந்து வைக்கப்பட்ட தமிழகத்தின் முன்னாள் முதலமைச்சரும், புரட்சி நடிகருமான எம்.ஜி. ஆரின் உருவச் சிலைக்கு முன்பாக வைத்து. அந்தச் சிலையை தனது சொந்த நிதியில் உருவாக்கிய யாழ்.எம்.ஜி.ஆர் என அழைக்கப்படும் கோப்பாய் தெற்கைச் சேர்ந்த இ.சுந்தரலிங்கம் புதுவருடத்தை முன்னிட்டு ஏழை மக்கள் மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கு கை விஷேடம் வழங்கவுள்ளார்.

அத்துடன் எம்.ஜி.ஆரின் உருவச் சிலைக்குப் புத்தாடையும் அணிவிக்கப்படவுள்ளது. (க)

**வீடு வாடகைக்குண்டு**

பலாலி வீதியில், திருநெல்வேலிச்சந்திக்கு அண்மையில் வீடு வாடகைக்குண்டு.
தொடர்பு: 077 943 5088, 077 937 2354
(46767)(4.3.6)

**காணி விற்பனைக்கு**

தெல்லிப்பழை அரசினர் வைத்திய சாலைக்கு முன்பாக 3½ பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 944 4892
(46731)(12.3.6)

யாழ் மண்ணின் இனைய வானொலி சுடர்fm குடும்பத்தில் இணைந்து கொள்ளப் போகின்றீர்களா?
www.sudarfm.com

இதோ அரிய சந்தர்ப்பத்தை நாம் தருகின்றோம். . .



1. அறிவிப்பாளர்கள்
(கணினி மற்றும் அறிவிப்புத்திறமை)
2. விளம்பர சேகரிப்பாளர்கள்
(முன் அனுபவம் விரும்பத்தக்கது)

குறிப்பு :- யாழ் மண்ணில் இருப்பவர்களுக்கு முன்னுரிமை
இன்றே எம்மை தொடர்பு கொள்ளுங்கள்
தொடர்புகளுக்கு - 077 055 72 61
- 021 221 9969
(46739)(12.3.6)

**இரணைமடு நீர்ப்பாசனத் திட்டத்தின் கீழ் நிலவுரிமை பெற்ற நீர்ப் பயனாளிகளின் இடாப்பைத் திருத்துதல்**

இரணைமடு நீர்ப்பாசனத் திட்டத்தின் கீழ் நீர் உரிமை பெற்றுக்கொண்ட நீர்ப்பாசன நிலங்களின் இடாப்பை மீளத் திருத்திக் கொள்வதற்கான குளக்குறியீட்டுப் பதிவேடு தயார்ப்படுத்துவதற்கென விண்ணப்பங்கள் மேற்குறிப்பிடப்படும் திட்டத்தின் கீழ் உள்ளடங்கும் அனைத்து நில உரிமையாளர்களிடமிருந்தும் கோரப்படுகின்றன.

இதற்கான மாதிரி விண்ணப்பப்படிவத்தினைத் தங்கள் பிரிவுக்கான பெரும்பாக அலுவலரின் காரியாலயத்திலோ, கிளிநொச்சி கமநல அபிவிருத்தி அலுவலகத்திலோ பெற்றுக்கொள்ள முடியும். உரிய மாதிரிப்படிவத்தில் முழுமையாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை அவ்வவ் விவசாயப் பெரும்பாகப்பிரிவு அலுவலர்களிடம் 15.05.2014இற்கு முன்னராகச் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். உரிய திகதிக்குப் பின்னராகச் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

நீர்வரி இடாப்பின் திருத்தத்திற்கமையவே இனிவரும் காலங்களில் நீர் வழங்கல், உர விநியோகம் காப்புறுதி வசதிகள் என்பன அமுலாக்கப்படும் என்பதனையும் இத்தால் அறியத்தருகின்றேன்.

அரசாங்க அதிபர்,
கிளிநொச்சி மாவட்டம்.

(சி13604)
(12.3.6)

உ
சிவமயம்
“மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்”





வட்டுக்கோட்டை ஸ்ரீ மஹா கால பைரவர் ஸ்ரீ மஹா ப்ரத்யங்கிராதேவிக்குப் பிரதி அமாவாசை தினங்களில் மாலை 5 மணி முதல் 7 மணிவரை மிளகாய் வற்றல் யாகம் நடைபெற்று வருகின்றது. சகல கஷ்ட நிவாரணமாக வேண்டி இவ் யாக பூஜை நடைபெற்று வருகின்றது. எனவே அனைத்து அடியார்களும் இப் பூஜையில் கலந்து கொண்டு அம்பாளின் அருளைப் பெற்றுய்யுமாறு வேண்டி நிற்கின்றோம்.

தெல்லிப்பழை வீதி, வட்டுக்கோட்டை.(சங்கரத்தை சந்திக்கு அருகில்) (C/13433)(2.3) - நிர்வாகம்.

# ஸ்ரீ வீரகத்தி விநாயகர்




## ழ் – 14.04.2014



### ஆலயத்தின் வரலாற்றுச் சிறப்பு

டியார்க்கு அருள் பாலிக்கும் விக்கின விநாயகர் விஜய வருடப் பிறப்புச் சித்திரை முதலாம் திகதி இன்று (14.04.2014)
தர்த் திருவிழாவை முன்னிட்டு வெளிவரும் இம் மலரில் இவ் வாலயத்தின் தல வரலாற்றைக் குறிப்பிடுவதில் மகிழ்ச்சி
யது ஊர்காவற்றுறை. அத்துறை வழியாக வைத்திலிங்கச் செட்டியார் என்பவர் பல விக்கிரகங்களை யாழ்ப்பாணத்தில்
ப்பு மிகுதியால் ஓய்வு எடுப்எடுப்பதற்காகக் குறித்த இவ் வெள்ளைப் புற்றடியில் வைத்துள்ளார். களைப்பாறி
ளயாரை தூக்க முடியவில்ஷயவில்லை. அதனால் அவ் இடத்திலேயே விட்டு காவோலையால் நிழல் அமைத்து
ார். அதன் பின்னர் ஊரவர்ர் ஊரவர்களாகிய எமது மூதாதையர் குடில் அமைத்து ஆலயமாக்கி வழிபட்டு
த்துக் காட்டுகிறது. யாழ்ப்பறது. யாழ்ப்பாணம் கச்சேரியில் உள்ள 1769, 1832 ஆம் ஆண்டுப் பதிவேடுகளில்
சாற்ற... றன. ஆலயம் அஎ. ஆலயம் அமைந்துள்ள காணி உறுதி விநாயகர் பெயரிலேயே தோம்பு இருப்பது
வெள்ளை மணல் கும்பிகளமணல் கும்பிகளாகக் காணப்பட்டன. அம் மணல் கும்பிகளில் எலிகளாலோ
ளை மணல் புற்றுகளாக இணல் புற்றுகளாக இருந்ததனால் அச் சூழலில் அமைந்த இந்த ஆலயத்துக்கு
ழைத்திருக்கலாம் எனக் கொழத்திருக்கலாம் எனக் கொள்ள இடமுண்டு.
கிணறுகளும் கட்டி உள் வீதியைச் சுற்றி ஏறக்குறைய இரண்டு அடி அகலம் கொண்ட சுண்ணாம்பால்
வளர்ச்சியில் சுப்பிரமணியம் வினாசித்தம்பி அவர்கள் சிறப்பு இடம் பெறுவார். மூலஸ்தானத்தையும்
வைரக்கல்லால் அமைத்து ஆலய வளர்ச்சிக்கு வித்திட்டார். 1951 ஆம் ஆண்டு கும்பாபிஷேக
அதன் பின்னர் குறிப்பிடத்தக்க வளர்ச்சி வந்தனை வழிபடுவோர் சபையால் ஆலய நிர்வாகம்
தொடர்ந்து பல கும்பாபிஷேகங்கள் சிறப்பாக நடைபெற்றன. 1982 இல் இருந்து 1990 ஆம்
மாகக் குறிப்பிடலாம். உள்வீதி, மண்டபம் அமைக்கப்பட்டு தேர்த்திருவிழா ஆரம்பிக்கப்பட்டது
பட்டன. ஆலய வளர்ச்சியின் அடுத்தகால கட்டம் இடப் பெயர்வின் பின் மீள் குடியேறிய
ஆலயத்தில் பாலஸ்தாபனம் செய்யப்பட்டு 2005 ஆம் ஆண்டு ஆவணி 21 இல் கும்பாபிஷே
ாடப்பட்டது. வசந்த மண்டபமும் தேர் முட்டியும் அமைக்கப்பட்டு உள்வீதி மண்டபம்
ஆலயம் புதுப்பொலிவுடன் சிறப்புற்று விளங்குகிறது. விஜய வருடப் பிறப்பில் நடைபெறும்
ல் வெளிவரும் இம் மலரில் எனக்குத் தெரிந்த சில தகவல்களை தருவதில் மகிழ்ச்சி
மண்... பான் வெள்ளைப் புற்றடி, ஸ்ரீ வீரகத்தி விநாயகர் தேவஸ்தானம்.

#### யாளர்கள் ★★★★★★★★★★★★★★★★


**ூ மைதிலி**
ரம் வாய்ந்த
க ...ககளை
டர் செய்து
ுக்கொள்ளலாம்
40, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

**சிறி மதுனா**
நகை மாளிகை
தங்கப்பவுண் நகை
வியாபாரம்
ஓடர் நகைகள் 22 கரட்டில் குறித்த
தவணையில் செய்து கொடுக்கப்படும்.
இல. 155/M கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே. 021 222 7772

**நியூ லலிதாஸ்**
**ஜுவல்லர்ஸ்**
தங்கப்பவுண் நகை வியாபாரம்
111, மின்சார நிலைய வீதி, 30,32,
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே. 021 222 4134

மாடம்
குறித்த
ணங்களில்
கப்படும்
மாடம்
வீதி,
261,
7

**அம்பிகை ஜுவலர்ஸ்**
தங்கப்பவுண் நகை வியாபாரம்
22 கரட் தங்க நகைகள் ஓடருக்கு
உத்தரவாதத்துடன் செய்து
கொடுக்கப்படும்
T.P. 021 222 2538
34 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

**அருள் விநாயகர் மோட்டோர்ஸ்**
இல. 108, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்
கிளை : இல. 262, கண்டி வீதி, சாவகச்சேரி.
**அருள் விநாயகர் ரேடேர்ஸ்**
இல. 106, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
222 5558

**தா ஜுவல்லர்ஸ்**
வுண் நகை வியாபாரம்
**tha Jewellers**
ரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 2222863

**சாரங்கா**
நாணயமாற்று சேவை
**சாரங்கா நகைமாடம்**
157/1, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P.: 021 222 6972,
Fax : 021 222 8869

**ஐங்கரன்**
மோட்டோர்ஸ்
137, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.


#### பத்தினரும்

**தவில்**

யஞான இளவல் **N. நந்தகுமார்** ( (யாழ்ப்பாணம்)
யஞான இளவரசன் **S.தெட்சணாமூர்த்தி** (தொண்டமானாறு)
யஞான தென்றல் **S.துளசிபரன்** (தொண்டமானாறு)
வில் வித்துவான் **S. சதீஸ்குமார்** (குட்டி)

இவர்களுடன்.....
மங்கல வாத்தியம்
**P.S.பிச்சையப்பா**
**R.நாகசுதன்** குழுவினரும்
இணைந்துகொள்வர்.

## மூதாட்டியின் துணிச்சலில் திருடர்கள் கைதாகினர்

வலி. வடக்கு, ஏப்.14

மூதாட்டியின் துணிச்சலான நடவடிக்கையாலும் பொது மக்களின் விழிப்புணர்வு நடவடிக்கையாலும் திருடர்களை பன்னிரண்டு மணி நேரத்தில் கைது செய்த சம்பவம் இளவாலை பொலிஸ் பிரிவில் இடம்பெற்றுள்ளது.

நேற்றுமுன்தினம் சனிக்கிழமை மதியம் தனது உறவினரின் பிள்ளை ஒருவரின் பூப்புனித நீராட்டு நிகழ்வுக்கு வடலியடைப்புப் பகுதியைச் சேர்ந்த விசாலாட்சி (வயது-79) என்பவர் சென்றுள்ளார்.

இந்த நேரத்தில் மோட்டார் சைக்கிளில் வந்த இளைஞர்கள் மூவர் மூதாட்டியின் கழுத்தை நெரித்து சங்கிலியை அறுத்துச் செல்ல முற்பட்டுள்ளார்கள். எனினும் மூதாட்டி காட்டிய எதிர்ப்பின் காரணமாக சங்கிலியை முழுமையாக அறுத்துச் செல்ல முடியாத நிலையில் வழிப்போக்கர்கள் வருவதைக் கண்டு தப்பி ஓடியுள்ளார்கள்.

எனினும் எதிரே வந்தவர்கள் மோட்டார் சைக்கிளில் மூவர் அவசரமாகச் செல்வதை அவதானித்து மோட்டார் சைக்கிளின் இலக்கத்தை பதிவு செய்துள்ளார்கள்.

நடந்த சம்பவத்துடன் குறிப்பிட்ட மோட்டார் சைக்கிளுக்கு தொடர்பு இருப்பதை முதியவர் உறுதிப்படுத்திய நிலையில் இளவாலைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாட்டை பதிவு செய்துள்ளார்கள்.

உடனடியாக பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சிந்திக்க பண்டார தலைமையில் களமிறங்கிய பொலிஸ் குழுவினர் மேற்கொண்டு துரித விசாரணைகளைத் தொடர்ந்து கோப்பாய் பகுதியில் வைத்து ஐந்து பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்கள்.

குறிப்பிட்ட சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் மற்றும் இத்தகைய சம்பவங்களுடன் உடந்தையாக இருப்பவர்கள் எனக் கருதப்படுபவர்களே கைது செய்யப்பட்டுள்ளதுடன் மேலதிக விசாரணைக்கும் உள்ளாக்கப்பட்டுள்ளார்கள். (வ-86)



பிரசித்தி பெற்ற நல்லூர் கந்தசுவாமி கோயிலின் வடக்கு திசையில் அமைக்கப்பட்டு வரும் ஒன்பது தளங்களைக் கொண்ட இராஜகோபுரத்துக்கான கட்டுமானப் பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன. (ஓ-17)

## சமய சந்நிதி

நீர்வேலி, ஏப்.14

நீர்வேலி கந்தசுவாமி கோயிலின் வருடாந்த தேர்த் திருவிழா இன்று திங்கட்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறும்.

நாளை காலை தீர்த்த திருவிழாவும், மறுநாள் பூங்காவனத்திருவிழாவும் இடம்பெறும். (ஓ-17)

♦♦♦

காரைநகர், ஏப்.14

காரைநகர் வாரிவளவு கற்பக விநாயகர் ஆலய தேர்த் திருவிழா புத்தாண்டு தினமான இன்று திங்கட்கிழமை நடைபெற உள்ளது.

வருடாந்த மஹோற்சவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. சித்திரைப் புத்தாண்டு தினமான இன்று திங்கட்கிழமை தீர்த்தத் திருவிழாவும், நாளை செவ்வாய்க்கிழமை காலை வியாவில் ஐயனார் ஆலயத் தீர்த்தக் கரையிலும் நடைபெற உள்ளது. (ஓ-250)

♦♦♦

கோப்பாய், ஏப். 14

கோப்பாய் வெள்ளெருவைப் பிள்ளையார் ஆலயத்தின் மணவாளக்கோல விழா எதிர்வரும் 18 ஆம் திகதி வெள்ளிக்கிழமை இடம்பெறவுள்ளது.

இன்றைய தினம் காலை 8.30 மணிக்கு விநாயகப் பொருமானுக்கு சகஸ்ர சங்காபிஷேகமும், பரிகார மூர்த்திக்கு விசேட அபிஷேகமும் இடம்பெறவுள்ளன.

ஆதீனகர்த்தாவாகிய சிவஸ்ரீ க.சண்முகராஜேஸ்வரக் குருக்கள் தலைமையில் கிரியைகள் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க)

## மானிய உரத்துக்கான பதிவுகள் மேற்கொள்ளலாம்

தென்மராட்சி, ஏப்.14

தென்மராட்சி பிரதேசத்தில் விவசாயம் மேற்கொள்ளும் காணிகளுக்கு மானிய உரவகைகள் பெறுவதற்கான பதிவுகள் அந்தந்த கமநல சேவைகள் நிலையத்தில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

விவசாயிகள், காலபோக நெற்செய்கையாளர்கள் தமது காணிக்குரிய வரியை பரப்புக்கு ஒரு ரூபா 50 சதம் (1.50)வீதம் செலுத்தி பதிவை மேற்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

சாவகச்சேரி கல்வயல் கமக்கார அமைப்பினர் அமைப்பின் அங்கத்தவர்களை எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்னர் மீசாலை கமநல சேவைகள் நிலையத்தில் தமது காணிக்குரிய ஏக்கர்வரியினைச் செலுத்தி மானிய உரத்துக்கு விண்ணப்பிக்குமாறு அறிவித்துள்ளனர். (வ-9)

## நடனம் பயில விரும்புவோர் விண்ணப்பிக்கலாம்

தென்மராட்சி, ஏப்.14

தென்மராட்சி கலை மன்றத்தினர் பிரதேசத்தில் நடனம் பயில விரும்புவோரிடமிருந்து விண்ணப்பங்களை கோரியுள்ளனர்.

நுணாவிலைச் சேர்ந்த விநாயகமூர்த்தியின் நினைவாக அவரது குடும்பத்தினரால் இலவசமாக நடனப் பயிற்சி வகுப்புகள் நடத்தப்படவுள்ளன.

நடன வகுப்புகளில் கலந்து கொள்ள விரும்புவோர் எதிர்வரும் 24 ஆம் திகதிக்கு முன்னர் பதிவு் செய்யுமாறு முன்னர் மன்றத் தலைவர் க.மோகனராஜலிங்கம் அறிவித்துள்ளார்.

இதேவேளை கலை மன்றத்தால் ஓர்கன் மற்றும் மிருதங்க வகுப்புகள் மறை மண்டபத்தில் நடத்தப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. (வ-9)

## சிவில் பாதுகாப்பு படைக்கு ஆள்சேர்க்க பதிவுகள்

தென்மராட்சி, ஏப். 14

பிரதேச அபிவிருத்திப் பணிகளில் ஈடுபடுத்துவதற்கு பொலிஸாரால் சிவில் பாதுகாப்புப் படையினரை நியமிப்பதற்கான பதிவுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

குறித்த படையில் இணைந்து கொள்ளவிரும்பும் தென்மராட்சி பிரதேசத்தைச் சேர்ந்த 18 வயதுக்கும் 45 வயதுக்கும் இடைப்பட்ட ஆண், பெண் இருபாலாரும் பதிவு செய்யமுடியும்.

படையில் இணைந்து கொள்ள விரும்புவோர் கொடிகாமம் எருவிலில் அமைக்கப்பட்டுள்ள அலுவலகத்தில் தமது விவரங்களை பதிவு செய்யுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

சிவில் பாதுகாப்புப் படையில் இணைபவர்களுக்கு மாத வேதனமாக 35 ஆயிரம் ரூபா வரை வழங்கப்படவுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (வ-9)

## தெய்வீக கானங்கள் இறுவட்டு வெளியீடு

நல்லூர், ஏப். 14

நல்லூர் வடக்கு சிறி சந்திரசேகரப் பிள்ளையார் ஆலய அறங்காவலர் குழுவினரின் வெளியீடான தெய்வீக கானங்கள் (பாகம் - 2) இசைப்பாடல் இறுவட்டு இன்று காலை 9 மணிக்கு வெளியிடப்படவுள்ளது.

இசையமைப்பாளர் ஸ்ரீகுகனின் இசையில் இந்த இறுவட்டுக்கான பாடல்களை வேலணையூர் சுரேஷ் இயற்றியுள்ளார்.

தென்னிந்தியாவின் பாடகர் ரி.எஸ்.மகாராஜன் மற்றும் உள்ளூர் முன்னணிப் பாடகர் எஸ்.ஜி.சாந்தன், ரி.றொபேட், ஜி.ஜெயபாரதி ஆகியோர் பாடல்களைப் பாடியுள்ளனர். (ஓ)

## பாம்புகளால் மூவர் கடியுண்டனர்

தென்மராட்சி, ஏப்.14

நான்கு வயதுக் குழந்தை உட்பட மூவர் விஷப் பாம்புகளால் கடியுண்டனர்.

தென்மராட்சிப் பிரதேசத்தின் மிருசுவில், மந்துவில்,கெருடாவில் ஆகிய இடங்களில் நேற்று பாம்புகளால் கடியுண்ட மூவர் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

மிருசுவில் வடக்கைச் சேர்ந்த ஜெயக்குமார் தமன்னா (வயது-4), கெருடாவில் வடக்கைச் சேர்ந்த ஸ்ரீகாந்தன் தர்சினி (வயது-21), மந்துவில் மேற்கைச் சேர்ந்த வடிவேலு அற்புத நவதீபன் (வயது-60) ஆகியோரே பாம்பால் கடியுண்டவர்களாவர்.

அவர்களில் ஸ்ரீகாந்தன் தர்சினி மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப் பட்டார். (வ-9)

**வாகனம் விற்பனைக்கு**

சைனா யூஜீன் PQ-xxxx
இலக்க வாகனம் விற்பனைக்கு
தொடர்பு: 077 326 4479 (46776) (7.6.3)

**பெயர் மாற்றம்**

தாவடி தெற்கில் வசிக்கும் துரைசிங்கம் ஹஜேந்திரதுலசிங்கம் ஆகிய நான் 14.04.2014 இன்றிலிருந்து எனது பெயரினை துரைசிங்கம் கஜன் என சகல ஆவணங்களிலும் பயன்படுத்த உள்ளேன் எனத் தெரியப்படுத்துகிறேன்.
(46771) (7.6.3) து. கஜன்

**காணி விற்பனை**

மருதடி வீதி, யாழ்ப்பாணம்(பொஸ்கோ பாடசாலை, இந்தியத்தூதரகம் என்பவற்றுக்கு அருகில்) 1¼ பரப்பு வீதம் இரண்டு காணித் துண்டுகள் நல்லூர் சுற்றாடலில் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: 077 053 8405 (46776) (7.6.3)

**வகுப்புகள்**

ஆங்கில, சிங்கள மற்றும்
IELTS வகுப்புகள்
வடமராட்சியில் ஆரம்பம்.
தொடர்பு: 077 711 5876 (சி/13815) (7.6.3)

**வீடு வாடகைக்குத் தேவை**

சிறிய வீடு அல்லது Annex பிரத்தியேக வாசலுடன் தேவை. நல்லூர் பிரதேச சபை எல்லைக்குள், பலாலி வீதி/ K.K.S. வீதி விரும்பத்தக்கது.
தொடர்பு: 077 335 5173 (46770) (7.6.3)

## மரண அறிவித்தல்

### மிக்கேல்பிள்ளை கிறிஸ்தோபர் (இராசையா)



சில்லாலையைப் பிறப்பிடமாகவும் முருங்கனை வசிப்பிடமாகவும் கொண்ட மிக்கேல்பிள்ளை கிறிஸ்தோபர் (இராசையா) 11.04.2014 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் மேரி இமெல்டாவின் அன்புக்கணவரும், காலஞ்சென்றவர்களான மிக்கேல்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான ஞானப்பிரகாசம் தம்பதியினரின் அன்பு மருமகனும், காலஞ்சென்றவர்களான றாகேஸ், புவனேஸ் மற்றும் யோகா, ஞானேஸ்(கால்நடை உத்தியோகத்தர் முருங்கன்), றட்னா, ஜெயசீலன், பபா(தாதி உத்தியோகத்தர் போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்), தனா ஆகியோரின் பாசமிகு தகப்பனாரும், காலஞ்சென்றவர்களான ஜேசுதாசன், பீதாம்பரம் மற்றும் அலெக்ஸ்சாண்டர், அமலன், ரூபி, றமேஷ் (தொழில்நுட்ப உத்தியோகத்தர், மருத்துவபீடம், யாழ்ப்பாணம்), பெலின்டா ஆகியோரின் அன்பு மாமனாரும், சுஜீவன், றஜீவன், றொமேஜன், றினோஜன், செலின், வின்ஸ்ரன், ஜூலியா, கரோலின், சாறுக்கா, அல்றிக்கா, அல்றிஷன், அன்றொயின் ஆகியோரின் பாசமிகு பேரனும், காலஞ்சென்றவர்களான ஞானப்பிரகாசம், மரியம்மா, திரேசம்மா, அருட்சகோதரி அக்னேசியா, அந்தோனிப்பிள்ளை மற்றும் பொன்னுத்துரை ஆகியோரின் அன்புச்சகோதரரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (15.04.2014) செவ்வாய்க்கிழமை மு.ப. 9.30 மணிக்கு அன்னாரின் இல்லத்திலிருந்து எடுத்துச்செல்லப்பட்டு, முருங்கன் கிறிஸ்து அரசர் ஆலயத்தில் நடைபெறும் திருப்பலியின் பின்னர் செம்மண்தீவு சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

'இமெல்வாசா' முருங்கன். (46773)(3,6,4) தகவல்: மனைவி, பிள்ளைகள்.

## பழைய மாணவர் சங்கக் கூட்டம்

வரணி, ஏப்.14

வரணி மத்திய கல்லூரியின்பழையமாணவர் சங்கப் பொதுக் கூட்டமும், புதிய நிர்வாக சபைத் தெரிவும் கல்லூரிஅதிபர்க.மங்களேஸ்வரன் தலைமையில் எதிர்வரும் 20 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மு.ப.10 மணிக்கு பாடசாலை மாநாட்டு மண்டபத்தில் இடம்பெறும்.

கல்லூரியின் பழைய மாணவர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு பழைய மாணவர் சங்கச் செயலாளர் கேட்டுள்ளார். (க-122)

## அகவை 38 இன் நினைவலைகள்



அமரர்
சரவணையூர்
**சபாரத்தினம் சசிகுமார்**
(B.Com)

14.04.1976
(திதி: 03.10.2008)

என்றும் பதினாறின் இளமையுடன் மார்க்கண்டேயர் வாழ்வு போல
குன்றாத இளமையுடன் குடியிருந்த குலக் கொழுந்தே குன்றின் மணியே
நன்றாய் இருந்த உன் வாழ்வில் நாசம் செய்ய வந்தனரோ கயவர்
மன்றம் சென்று மநுநீதி கேட்க மறுக்கப்பட்டது நம் உரிமை
இன்றுன் பிறந்த நாளதனில் இறைவனைப் பிரார்த்திக்கும்

அம்மன் வீதி,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில். (46762)(3.6.4)

உன் உயிருடன் கலந்த
அன்பு உறவுகள்.

# றேஞ்சர்ஸ், அல்வாய் நண்பர்கள் காலிறுதி ஆட்டத்துக்குத் தகுதி

யாழ்ப்பாணம்,ஏப்.14
பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் உதயன் பத்திரிகையும், பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழகமும் இணைந்து நடத்தும் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டித் தொடரின் காலிறுதி ஆட்டத்துக்கு கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் அணியும், அல்வாய் நண்பர்கள் அணியும் தகுதி பெற்றுள்ளன.



நேற்று முன்தினம் நடைபெற்ற ஆட்டத்தில் மாலுசந்தி மைக்கல் அணியை எதிர்த்து கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் அணி மோதியது. முதற்பாதி ஆட்டம் கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் அணிக்குச் சாதகமாக அமைந்த போதும் சந்தர்ப்பங்கள் பல தவறவிடப்பட்டன.
இதனையும் மீறி அவர்களால் அடிக்கப்பட்ட பந்துகள் அனைத்தையும் மைக்கல் அணியின் கோல் காப்பாளர் பிரசாத் மிகச் சிறப்பாக தடுத்துக் கொண்டிருந்தார்.
முதற்பாதி ஆட்டத்தில் சுமார் 10 இற்கு மேலான மூலை உதைகள் கிடைத்த போதும் அதில் ஒன்றைக் கூட கோலாக்கத் தவறி விட்டனர் றேஞ்சர்ஸ் அணியினர். இதனால் முதற்பாதி ஆட்டம் சமநிலையில் இருந்தது.
பிற்பாதி ஆட்டத்திலும் இரு அணிகளும் தமது ஆட்ட வியூகங்களை மாற்றி அமைக்கவில்லை. இருந்தபோதும் 10 ஆவது நிமிடத்தில் றேஞ்சர்ஸ் அணியின் பயிற்றுவிப்பாளர் ஒரு வீரருக்குப் பதிலாக கௌதமன் எனும் வீரரைக் களம் இறக்கினர். இவரின் வருகை மைக்கல் அணியின் கோல் காப்பாளருக்கு அச்சுறுத்தலாகவே அமைந்தது.
அவர் இறங்கி 2 ஆவது நிமிடத்தில் (ஆட்டத்தில் 12 ஆவது நிமிடத்தில்) றேஞ்சர்ஸ் அணி வீரர் தாரகன் தட்டிக் கொடுத்த பந்தை கௌதமன் கோலாக்க வீறு கொண்டது றேஞ்சர்ஸ் அணி.
அதன் பின்னரும் நின்று விடாது 15 ஆவது நிமிடத்தில் கௌதமன் தனக்குக் கிடைத்த பந்தை மைக்கல் அணியின் பின்கள வீரரையும் தாண்டி அற்புதமான கோலைப் போட்டார்.
கௌதமனின் ஆட்டத்தைக் கட்டுப்படுத்த முயன்றபோது றேஞ்சர்ஸ் அணி வீரர் கைலாஸ் 18 ஆவது நிமிடத்தில் ஒரு கோலைப் போட நிலை குலைந்தது மைக் கல் அணி.
இறுதியில் கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் அணி 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று காலிறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது.
அடுத்த ஆட்டத்தில் அல்வாய் நண்பர்கள் அணியை எதிர்த்து உடுத்துறை பாரதி அணி மோதியது.
இதில் ஆட்டம் தொடங்கி 5 ஆவது நிமிடத்தில் அல்வாய் நண்பர்கள் அணியைச் சேர்ந்த விஜிதரன் ஒரு கோலைப் போட்டார். அதன் பின்னர் தமக்குக் கிடைத்த வாய்ப்புக்களை பாரதி அணியினர் வீணடிக்க முற்பாதியாட்டம் 1:0 என்ற முன்னிலையில் இருந்தது.
இடைவேளையின் பின்னர் ஆட்டம் தொடங்கிய போது ஆட்ட வியூகத்தை மாற்றியமைத்த பாரதி அணியினர் முன்னேறிச் சென்றனர்.
இதன் விளைவாக 12 ஆவது நிமிடத்தில் கபில் தனக்குக் கிடைத்த பந்தை கோலாக்க ஆட்டம் சமநிலைக்கு வந்தது.
இறுதியில் சமநிலை தவிர்ப்பு உதை மூலம் வெற்றி தோல்வி தீர்மானிக்கப்பட்டது.
இதில் அல்வாய் நண்பர்கள் அணி 4:3 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று காலிறுதிக்குள் நுழைந்தது. (ந-422)

## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், ஏப்.14
யாழ். உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் மயிலங் காடு ஞானமுருகன் விளையாட்டுக்கழகம் நடத்தும் 'வடக்கின் சுப்பர் கிங்' உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம் பெற்று வருகின்றன.
இதில் இன்று திங்கட்கிழமை பி.ப 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் குறிஞ்சிக்குமரன் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து திருக்குமரன் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (ந-23)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஏப்.14
சித்திரை புத்தாண்டை முன்னிட்டு மயிலங்காடு ஞான முருகன் விளையாட்டுக் கழகம் நடத்தும் நட்பு ரீதியான உதைபந்தாட்டப் போட்டி இன்று திங்கட்கிழமை பி.ப 3.30மணிக்கு உரும்பிராய் இந்துக்கல்லூரி மைதானத்தில் இடம் பெறவுள்ளது.
இதில் மயிலங்காடு ஞான முருகன் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து நாவாந்துறை சென்.மேரிஸ் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (ந-23)

## இறுதியாட்டம்

பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழகம் நடத்தும் கரப்பந்து, வலைப்பந்தாட்டம் ஆகியவற்றின் இறுதியாட்டங்கள் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு கழக மைதானத்தில் இடம்பெறவுள்ளன.
பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகத் தலைவர் கு.இ.இராசநாதன் தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தின ராக மருதங்கேணி கோட்டக் கல்விப் பணிப்பாளர் ச.திரவியராசாவும், சிறப்பு விருந்தினராக வேலாயுதம் மகாவித்தியாலயப் பகுதித் தலைவர் வ.கருணாமூர்த்தியும் கலந்து கொள்வர்.
வலைப்பந்தாட்ட இறுதியாட்டத்தில் பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம் அல்வாய் நக்கீரன் விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளது.
**கரப்பந்தாட்டத்தில் இலஷி சிவகுமரன் விளையாட்டுக் கழகத்துக்கும், உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழக 'பி' அணிக்கும் இடையே இடம் பெறும் அரையிறுதி ஆட்டத்தில் வெற்றி பெறும் அணி இறுதியாட்டத்தில நவஜீவன்ஸ் 'ஏ' அணியுடன் மோதும். (400)**

## தாச்சிப்போட்டி

யாழ். மாவட்டத் தாச்சி விளையாட்டுச் சங்கத்தின் அனுமதியுடன் கைதடி மேற்கு சரஸ்வதி விளையாட்டுக்கழகம் யாழ். மாவட்ட ரீதியில் மின்னொளியில் நடத்தி வரும் 'லீக்' முறையிலான தாச்சிச் சுற்றுப் போட்டியில் இன்று நடைபெறும் ஆட்டங்களில் இரவு 7 மணிக்கு புதுமடம் வைகரை விளையாட்டுக் கழகமும் எதிர் பண்டத்தரிப்பு அறிவொளி விளையாட்டுக்கழகமும், இரவு 8 மணிக்கு தாவடி காளியம்பாள் விளையாட்டுக்கழகம் எதிர் உடுவில் உதயசூரியன் விளையாட்டுக்கழகமும் மோதவுள்ளன. (ஒ-288)



95 ஆவது அரியாலை சுதேசிய திருநாள் கொண்டாட்ட விழா நேற்று நடைபெற்றன. அதில் இடம்பெற்ற பெண்களுக்கான 10 கிலோ மீற்றர் சைக்கிள் ஓட்டப் போட்டியில் பங்கு பெறும் வீராங்கனைகள். (ந-135)

## 786 இறுதிக்கு தகுதி

யாழ்ப்பாணம்,ஏப்.14
வவுனியா உதைபந்தாட்ட லீக் தனது அங்கத்துவக் கழகங்களுக்கு இடையே நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் வவுனியா நகரசபை மைதானத்தில் இடம் பெற்று வருகின்றன.



இதில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இடம் பெற்ற முதலாவது அரையிறுதியாட் டத்தில் 786 விளையாட்டுக்க ழக அணியை எதிர்த்து வட தாரகை விளையாட்டுக்கழக அணி மோதியது.
**இரு அணியினரும் ஆட்ட நேர முடிவில் எது வித கோல்களையும் பெறாததனால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது. அதனையடுத்து ,ஆட்டத்தின் வெற்றி தோல்வி தீர்மானிப்பதற்காக 5 சமநிலை தவிர்ப்பு உதைகள் இரு அணிகளுக்கும் வழங்கப்பட்டன.**
இதில் 786 விளையாட்டுக் கழக அணி 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது. (ந-23)

## சசிகலா சிறிவர்த்தன பதவி விலக விருப்பம்

இலங்கை மகளிர் கிரிக்கெட் அணித் தலைவர் பதவியில் இருந்து விலகத் தீர்மானித்துள்ளதாகச் சசிகலா சிறிவர்த்தன தெரிவித்துள்ளார். இதற்கான அனுமதியை கோரி, இலங்கைக் கிரிக்கெட் சபைக்குக் கடிதம் அனுப்பியுள்ள தாக அவர் தெரிவித்துள்ளார்.
**2005 ஆம் ஆண்டு முதல் இலங்கை மகளிர் கிரிக்கெட் அணித்தலைவராக பதவி வகித்து வரும் அவர், 49 ஒரு நாள் போட்டிகளில் விளையாடி 18 வெற்றிகளைப் பெற்றுக் கொடுத்துள்ளார்.**
புதிய வீராங்கனைகளுக்குச் சந்தர்ப்பம் வழங்கும் நோக்கிலே தாம் இந்தத் தீர்மானத்தை மேற்கொண்டதாகச் சசிகலா சிறிவர்த்தன தெரிவித்துள்ளார்.
எனினும், தலைமைத்துவத்தில் இருந்து விலகுவது தொடர்பில் சசிகலா சிறிவர்த்தன முன் வைத்த கோரிக்கைக்கு இலங்கைக் கிரிக்கெட் சபை இது வரை எந்தவித பதில்களையும் வழங்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (த)



*சசிகலா சிறிவர்த்தன*

## ஐ.பி.எல். ஆலோசகரை நியமித்தார் கவாஸ்கர்

ஐ.பி.எல் தொடரின் 2014ஆம் ஆண்டு சிறப்பு ஆலோசகராக எச்.டி.எப்.சி.சேர்மன் தீபக் பரேக் நியமிக்கப்பட்டுள்ளார்.
7ஆவது ஐ.பி.எல். தொடர் போட்டிகள் வருகின்ற 16ஆம் திகதி தொடங்குகின்றன.
**உயர்நீதிமன்றம் ஐ.பி.எல். விவகாரம் உள்ளிட்ட பிரச்சினைகளால் இந்திய கிரிக்கெட் சபையின் இடைக்காலத் தலைவராகச் சுனில் கவாஸ்கரை நியமித்தது.**
**நிதி நிர்வாகத் தகவல்களைச் சிறப்பாகக் கையாள்வதற்காக ஆலோசகரை நியமிக்கத் திட்டமிட்டு இருந்த கவாஸ்கர், நிதி நிர்வாகத் திறமைமிக்க தீபக் பரேக்கை ஆலோசகராகத் தேர்ந்தெடுத்துள்ளார்.**
அத்துடன் ஐ.பி.எல். நிர்வாக சபைக் கூட்டத்தில் கலந்து கொள்ளும்படியும் தீபக் பரேக்குக்கு அழைப்பு விடுக்கப் பட்டுள்ளது.

**ஐ.பி.எல். போட்டியின் நிதி நிர்வாகம் சரியாக நடைபெற வேண்டும் என்ற நோக்கில் இந்த நியமனம் நடந்து இருப் பதாக செய்தி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.**

ஐ.பி.எல். போட்டியின் நிதி நிர்வாகம் சரியாக நடைபெற வேண்டும் என்ற நோக்கில் இந்த நியமனம் நடந்து இருப்பதாக செய்தி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (த)

## விளம்பர உலகில் சரியாத டோனி

கிரிக்கெட் உலகில் திடீர்ச் சரிவைச் சந்தித்தாலும் விளம்பர உலகில் இந்திய அணித்தலைவர் டோனி கொடி கட்டிப்பறக்கிறார்.
இந்திய கிரிக்கெட் அணித் தலைவர் டோனி, கடந்த ஆண்டு ஒரு பொருளுக்கு விளம்பர மொடலாகத் தோன்ற ரூபா 8 கோடி பெற்றார். இந்த நேரத்தில் அடிடாஸ் நிறுவனத்துடன் ரூபா 10 கோடிக்கு ஒப்பந்தம் செய்த கோஹ்லி, முதலிடத்துக்குச் சென்றார். தற்போது டோனியின் செல்வாக்கு மீண்டும் அதிகரித்துள்ளது.
கடந்த நான்கு மாதங்களில் இவரது வர்த்தக மதிப்பு 60 சதவீதம் உயர்ந்துள்து. முன்பு ரூபா 8 கோடி பெற்ற இவர், இப்போது ஒரு பொருளுக்கு மொடலாக தோன்ற ரூபா 13 கோடி சம்பளமாகப் பெறுகிறார்.
மேலும் எக்சைட், பெப்சி, எயார்செல், ரீபோக் உள்ளிட்ட 21 பொருள்களுக்கு டோனி மொடலாக உள்ளார்.
விளம்பரங்களில் தோன்ற அதிக தொகை பெறுபவர்கள் வரிசையில் பொலிவூட் நடிகர் அமீர்கானுக்கு அடுத்த இடத்தை டோனி பிடித்துள்ளார். (த)



டோனி

## தொழிலுக்காக வெளிநாட்டுக்கு சென்ற 80 பணியாளர்கள் சாவு

***வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தெரிவிப்பு***

வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் வெளிநாடுகளுக்கு தொழிலுக்குச் சென்ற 80 இலங்கைப் பணியாளர்கள் உயிரிழந்துள்ளதாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தெரிவிக்கின்றது.

உயிரிழந்தவர்களில் 60 பணியாளர்கள் ஆண்கள் என பணியகத்தின் பொது முகாமையாளர் மங்கள ரன்தெனிய குறிப்பிட்டார்.

பணிப்பெண்களுடன், ஒப்பிடுகையில் உயிரிழக்கும் ஆண்களின் எண்ணிக்கை அதிகம் என்று அவர் சுட்டிக் காட்டினார்.

இவற்றில் 68 வீதமானவை இயற்கை உயிரிழப்புகள் என்றும் 28 வீதமானவை விபத்துக்களினால் ஏற்பட்டவை என்றும், சில உயிரிழப்புகள் தற்கொலைகள் என்றும் அவர் கூறினார்.

இதேவேளை, இவ்வாறான உயிரிழப்புக்களை தடுப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தெரிவித்தது.

ஆயினும், தனிநபர்களின் கவனக்குறைவு காரணமாக, இவ்வாறான உயிரிழப்புக்களைத் தவிர்க்க முடியாதுள்ளதாக பணியகத்தின் பொது முகாமையாளர் குறிப்பிட்டார்.

உயிரிழந்த பணியாளர்களின் சடலங்கள் நாட்டுக்கு கொண்டு வரப்பட்டதன் பின்னர், உறவினர்களுக்கு இழப்பீடு வழங்கும் நடவடிக்கைகளும் உரிய முறையில் முன்னெடுக்கப்படுவதாக மங்கள ரன்தெனிய கூறினார். (வ)

# ஈழத் தமிழர் விடயத்தில் துரோகம் இழைத்த காங்.

***தி.மு.க. பொதுச் செயலாளர் அன்பழகன் கருத்து***

சென்னை, ஏப்.14

ஈழத் தமிழர் விடயத்தில் காங்கிரஸ் துரோகம் இழைத்துள்ளதாக தி.மு.க. பொதுச் செயலாளர் பேராசிரியர் அன்பழகன் தெரிவித்தார்.

கன்னியாகுமரி தொகுதி தி.மு.க. வேட்பாளர் எப்.எம். ராஜரத்தினத்தை ஆதரித்து நேற்று முன்தினம் இரவு கொட்டாரம் மற்றும் திங்கள் நகரில் நடந்த பரப்புரை பொதுக் கூட்டங்களில் பேசினார். இதன்போது அவர் பேசியதாவது.

"குமரி முதல் சென்னை வரை தமிழ் மக்களோடு பின்னிப் பிணைந்த இயக்கம் தி.மு.க. தமிழையும், தமிழக மக்களையும், ஈழத் தமிழர்களையும் பாதுகாக்கும் விடயத்தில் காங்கிரஸ் கட்சி துரோகம் செய்து விட்டது.

பா.ஜ.க.வை பொறுத்த வரை மத சார்பற்ற அரசு அமைக்கும் என்பதில் நம்பிக்கை இல்லை. அனைத்து மதத்தினருக்கும், அனைத்து சாதியினருக்கும் அடிப்படை உரிமை கிடைக்க வேண்டும் என்பதே தி.மு.கவின் இலட்சியம்.



*அன்பழகன்*

தனது மனைவியின் பெயரை மறந்து, திருமணத்தை மறைத்த நரேந்திர மோடி பிரதமர் ஆக வேண்டும் என்று பா.ஜனதா விரும்புகிறது. வாஜ்பாய் போன்று வேறு ஆட்கள் கிடைக்கவில்லையா? இந்த மண்ணில் தமிழ் உணர்வு காப்பாற்றப்பட வேண்டும். நாட்டை பாதுகாக்க நல்லதொரு அரசு டில்லியில் வரவேண்டும்.

ஆகவே டில்லியில் நடைபெறும் ஆட்சி, கலைஞர் கைகாட்டுபவர் பிரதமராக அமரக்கூடியவராக இருந்தால் நமக்குச் சாதகமாக, மக்கள் பிரச்சினைகளைத் தீர்க்க முடியும்"-என்றார். (வ)

கேயுவின் புத்தாண்டுப் பொதி

16/04/2014 மட்டும் 10% கழிவு

இந்த தமிழ்ப்புத்தாண்டை முன்னிட்டு கே.யு மற்றும் நைற்றிங்கேல்-மலேசியா நிறுவனங்களால் வழங்கப்படும் பின்வரும் பயிற்சிநெறிகளுக்கு 16/04/14 அன்று சேர்வோருக்கு 10% கட்டணக்கழிவு வழங்கப்படும்.

IELTS Preparation
CBM/DBM- Business Management Courses
KU's i-Spoken -International English Course
Computer Hardware Technology
SDP- Personality Development Programme**Free

Visit : http://edu.kugroup.info

இணையத்தில் பயிற்சிநெறி பற்றிய முழு விபரங்களையும் பெறுங்கள். கே.யு கல்வி நிறுவனத்தின் சர்வதேச தரம்வாய்ந்த பாடத்திட்டத்தில் தரமான சான்றிதழ்களை வெறும் பாடமாக்கலை அடிப்படையாகக்கொள்ளாத ,பிரயோக அறிவுடன் கூடிய கல்வியுடன் பெற்றிடுங்கள். கல்வியில் தரத்தைப்பேணுவோம்.

KU Education
No 626,1/1,K.K.S Road,Jaffna
Tel: 021-3208342/0777302882

## ஈழத்தமிழருக்கு காங்கிரஸைப்போல் எவரும் உதவி வழங்க முடியாது

***இவ்வாறு கூறுகிறார் வாசன்***

சென்னை, ஏப்.14

ஈழத்தமிழர்களுக்கு காங் கிரஸ் அரசைப் போன்று யாரும் எந்த உதவிகளும் செய்துவிட முடியாது என்று இந்திய மத்திய கப்பல் போக் குவரத்துத் துறை அமைச்சர் ஜி.கே.வாசன் தெரிவித்துள்ளார்.

தமிழகத்தின் திருநெல்வேலி யில் அவர், செய்தியாளர் களிடம் நேற்று கூறியதாவது:-

ஈழத் தமிழர்களுக்கு காங் கிரஸ் அரசைப் போன்று யாரும் எதுவும் செய்துவிட முடியாது. பல ஆயிரம் கோடிக்கு உதவிகள் அளித்துள்ளோம்.

கச்சதீவு ஒப்படைக்கப்பட்ட பிரச்சினையில் மத்திய அரசு தனது கருத்தை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்பதே எங்களது விருப்பம்.



*ஜி.கே.வாசன்*

மீனவர்கள் பிரச்சினையில் இப்போது நடைபெறும் பேச்சு வார்த்தைக்கு மத்தியகாங்கிரஸ் அரசே காரணமாகஇருந்தது.

கூடங்குளத்தில் இப்போது 539 மெகாவாற் மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது. இந்த மின்சாரம் முழுவதும் தமிழகத்துக்கே அளிக்கப்படுகிறது.

கூடங்குளம் போராட்டக்காரர்களின் எதிர்ப்பாலும், தமிழக அரசின் அணுகு முறையாலும், மெத்தனப் போக்காலும் கூடங்குளத்தில் மின் உற்பத்தி ஆரம்பிப்பதற்கு காலதாமதமாகி விட்டது. இல்லையெனில் விரைந்து உற்பத்தி தொடங்கி மின் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்திருக்கலாம்"- என்று அவர் மேலும் தெரிவித்தார். (வ)

## மீனவர் பிரச்சினைக்கு தீர்வு தேர்தலில் வெற்றி தேவை

***வைகோ தெரிவிப்பு***

சென்னை, ஏப்.14

மீனவர் பிரச்சினைக்கு தீர்வு காண 39 தொகுதிகளிலும் வெல்ல வேண்டும் என்று ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ தெரிவித்துள்ளார்.

தமிழகத்தின் பெரம்பலூர் மக்களவைத் தொகுதியில் தேசிய ஜனநாயக கூட்டணி சார்பில் போட்டியிடும் இந்திய ஜனநாயக கட்சி நிறுவனத் தலைவர் டி.ஆர்.பச்சமுத்துவை ஆதரித்து, சனிக்கிழமை பரப்புரை மேற்கொண்டார். அப்போது அவர் பேசுகையில்:-

நடக்க இருக்கும் மக்களவைத் தேர்தலில் நரேந்திர மோடி தமிழக வெற்றியின் அவசியமின்றியே பெரும்பான்மையுடன் ஆட்சி அமைப்பார்.

ஆனால் 39 தொகுதிகளிலும் நாம் வென்றால்தான் நீதி கிடைக்கும்.

முல்லைப் பெரியாறு, காவிரி பிரச்சினை, இலங்கையுடனான மீனவர் பிரச்சினை என பல்வேறு பிரச்சினைகளில் தமிழகம் நீதி பெற நாம் 39 தொகுதிகளிலும் வென்றாக வேண்டும்.

கூட்டணி என்பதற்காக எல்லாவற்றுக்கும் உடன்பட்டுப் போக மாட்டோம். எங்கே உடன்பட வேண்டுமோ, அங்கே மட்டும் உடன்படுவோம்"-என்றுகூறினார். (வ)

மரண அறிவித்தல்

மகாலிங்கம் பாலச்சந்திரன்



யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், பிரான்ஸை வசிப்பிடமாகவும் கொண்ட மகாலிங்கம் பாலச்சந்திரன் நேற்று (13.04.2014) ஞாயிற்றுக்கிழமை பிரான்சில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மகாலிங்கம் - தங்கலட்சுமி தம்பதியரின் அன்புமகனும் தனலட்சுமியின் அன்புக்கணவரும் பாலசங்கர், சுடர்மதி, மதுமதி, பாலப்பிரியா, பிறேமச் சந்திரன் ஆகியோரின் தந்தையும் கைலாசநாயகி காலஞ்சென்ற யோகநாயகி, ஞானச்சந்திரன் ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பிரான்சில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சூரியபாலன் குடும்பம்,
வடிவேற்கரசு குடும்பம்

3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



வேலுப்பிள்ளை வேதநாயகம்

பிறப்பு 25 . 08 . 1941

இறப்பு 14 . 04 . 2011

ஆண்டுகள் மூன்று சென்றதப்பா
ஆறவில்லை எங்கள் மனம் - அன்று
நிஜமாய் நின்ற எங்கள் தெய்வம் - இன்று
நிழலாய்த் தோன்றி மறைவதேன் - அப்பா
என்றும் உங்கள் நினைவுகளுடன்
எங்கள் வாழ்க்கைப் பயணம் தொடரும்

என்றும் அன்னாரின் ஆத்மா சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

இல. 98, கச்சேரி நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம்.

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

மரண அறிவித்தல்

திருமதி விஜயலட்சுமி தவலிங்கம்

(ஆசிரியை யா/யூனியன் கல்லூரி தெல்லிப்பழை)



சுடச்சப்பை கொல்லங்கலட்டியைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட விஜயலட்சுமி தவலிங்கம் நேற்று (13.04.2014) ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் முருகையா - செம்மனச் செல்வி தம்பதியரின் மூத்தபுதல்வியும் காலஞ் சென்றவர்களான வல்லிபுரம் - இராசம்மா தம்பதியரின் மருமகளும் தவலிங்கத்தின் (ஓய்வு பெற்ற தெல்லிப்பழை கூட்டுறவு சங்க கிளை முகாமையாளர்) பாசமிகு மனைவியும் பவதாரணி, பவதரன் ஆகியோரின் அன்புத்தாயும் ஜெயகௌரி (மகாஜனக்கல்லூரி ஆசிரியை), ஜெயரட்ணம் (வலிவடக்கு பிரதேச சபை ஊழியர்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (15.04.2014) செவ்வாய்க்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கீரிமலை செம்பொன்வாய்க்கால் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

சடச்சப்பை, கொல்லங்கலட்டி

தகவல்:
குடும்பத்தினர்

6 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

துன்பம் எனும் கடலினுள் வீழ்ந்து
கண்ணீர் என்னும் முத்துக்களாய்
சொரியும் அஞ்சலிகள்

அன்னையின் மடியில் 2003 . 06 . 27

ஆண்டவனின் அரவணைப்பில் 2008 . 04 . 19



செல்வி இந்துஜா விஜயகுமார்

அன்பின் ஊற்றே அழகின் உறைவிடமே
பாசமிகு மகளே இந்துஜா
எமை விட்டு நீ சென்று ஆறு ஆண்டுகளாயினும்
உன்பிரிவில் ஆறாத்துயர்பரவையினுள்
அமிழ்ந்தபடி நம்துயரைப்பாராய்

கொம்மாந்தறை, வல்வெட்டித்துறை

அப்பா, அம்மா, தம்பி
(இந்துஷன்) மற்றும்
குடும்பத்தினர்.

கணினி திருத்தம்

உங்கள் கணினிகள் பழுதடைந்துவிட்டனவா? உடன் உங்களது வீடுகளுக்கே வந்து திருத்தி தருகின்றோம்.
அழையுங்கள். 0779086737 Computer Repair
GUNAA BEST PC 52,Hospital Road,Jaffna.

அதிஷ்ட லாபச்சீட்டிழுப்பு
பிற்போடல் தொடர்பான அறிவித்தல்

மக்கள் நலன் பேணும் அமைப்பினால் வறிய மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கான உதவி திரட்டும் முகமாக 14.04.2014 அன்று நடத்தப்படவிருந்த அதிர்ஷ்டலாபச்சீட்டிழுப்பு தவிர்க்க முடியாத காரணத்தால் 15.06.2014 ஞாயிற்றுக்கிழமைக்குப் பிற்போடப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றோம். நன்றி

செயலாளர்
மக்கள் நலன் பேணும் அமைப்பு
புகையிரத நிலைய வீதி, கோண்டாவில்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### சர்வதேச

'இராணுவத்தினரின் துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்ட கோபி, தேவியன் மற்றும் அப்பன் ஆகிய தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் உறுப்பினர்களை இவர்கள் இருவருமே வழிநடத்தியுள்ளனர். விநாயகம் மற்றும் நெடியவன் ஆகியோர் வெளிநாட்டில் இருப்பதாக உறுதியான தகவல் கிடைத்துள்ளது.

விநாயகம் என்பவரின் பெயர் தற்போது சர்வதேச பொலிஸாரின் சிவப்பு பட்டியலில் உள்ளடக்கப்பட்டுள்ளது. விரைவில் நெடியவனின் பெயரும் பட்டியலில் உள்ளடக்கப்படும்" என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை மீள ஒருங்கிணைக்க முயற்சிக்கும் சர்வதேச வலையமைப்பு தொடர்பான தகவல்கள் திரட்டிவரப்படுகின்றன என்றும் குறிப்பிட்ட அவர் வெளிநாட்டில் இயங்கும் புலிகளை சர்வதேசப் பொலிஸாரின் உதவியுடன் கைது செய்ய நடவடிக்கை எடுக்கவுள்ளதாகவும் மேலும் தெரிவித்தார். (ற-5)

### மே மாதத்தில்

கருத்துத் தெரிவித்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும், பேச்சாளருமான சுரேஷ் பிரேமச்சந்திரன், "சிறில் ராமபோஷவின் வருகையின்போது இலங்கை அரசுக்கும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையே பேச்சு ஆரம்பிப்பதற்கான கலந்துரையாடல்கள் நடை பெறும்"- என்று தெரிவித்தார்.

**தென்னாபிரிக்கா பயணம்**

தென்னாபிரிக்க அரசின் அழைப்பை ஏற்று கடந்த 9 ஆம் திகதி தென்னாபிரிக்கா பயணமான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், நாடாளுமன்ற உறுப்பினர்களான சுரேஷ் பிரேமச்சந்திரன், செல்வம் அடைக்கலநாதன் மற்றும் எம்.ஏ.சுமந்திரன் ஆகியோர் கொண்ட குழு நேற்றுக் காலை நாடு திரும்பியது.

இந்தக் குழுவின் தென்னாபிரிக்கப் பயணம் குறித்துக் கருத்துத் தெரிவித்த சுரேஷ் பிரேமச்சந்திரன்,

"இலங்கை அரசின் வேண்டுகோளுக்கு இணங்கவே தென்னாபிரிக்க அரசு இலங்கை இனப்பிரச்சினை தொடர்பிலான விவகாரங்களைக் கையாள்வதற்காக விசேட பிரதிநிதியான சிறில் ராமபோஷவை நியமித்தது. எமது பயணத்தின்போது விசேட பிரதிநிதியான சிறில் ரமபோஷ மற்றும் தென்னாபிரிக்க அரசின் வெளிவிவகார அமைச்சர் மற்றும் பிரதியமைச்சர், தென்னாபிரிக்க தேசிய காங்கிரஸின் வெளிவிவகார கொள்கை வகுப்பாளர்கள் ஆகியோருடன் கலந்துரையாடல்களை நடத்தினோம்."

**பயணத்தின் பலன்**

"குறித்த சந்திப்புக்களின் போது நாம் தமிழர் தரப்பு நியாயங்களை முன்வைத்தோம். இந்திய - இலங்கை ஒப்பந்தம், அதனூடான 13ஆவது திருத்தச் சட்டம், அவற்றுக்கு என்ன நடந்தது, பிரேமதாச மற்றும் சந்திரிகா ஆகியோரின் காலங்களில் கொண்டு வரப்பட்ட தீர்வுத் திட்டங்களுக்கு என்ன நடந்தது, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் காலத்தில் நடந்த சர்வகட்சிக் குழுவின் அறிக்கைக்கு நடந்தவை என்பவை தொடர்பாக அவர்களுக்கு விளக்கமாக எடுத்துரைத்தோம். தமிழர் தரப்புக்கள் ஏமாற்றப்பட்டு வருவதை நாம் அவர்களுக்குப் புரிய வைத்தோம்.

முக்கியமாகத் தற்போது இலங்கையில் நடந்து கொண்டிருக்கும் விடயங்களையும் அவர்களுக்கு எடுத்துக் காட்டினோம். இராணுவ முற்றுகைக்குள்ளான தமிழ் மக்களின் நாளாந்த வாழ்வியல், கடத்தல்கள், காணாமற்போனவர்கள் தொடர்பிலான பிரச்சினைகளை அவர்களிடம் எடுத்துக் கூறினோம்.

இலங்கை அரசுக்கும், எமக்கும் இடையிலான பேச்சின் போது அனுசரணையாளர்களாக தென்னாபிரிக்கா செயற்படவுள்ளது. தென்னாபிரிக்கா எமது பேச்சுக்கு அனுசரணை வழங்குவதை நாம் ஏற்றுக் கொள்கின்றோம். ஏனெனில் அவர்களும் எம்மைப் போன்று பாதிக்கப்பட்டவர்களே. பல பேச்சுகளில் தோல்வியைச் சந்தித்தவர்களே"-என்று கூறினார்.

**எப்போது பேச்சு?**

அப்படியாயின் பேச்சுகள் எப்போது ஆரம்பிக்கும்? என்று கேட்டபோது,

"தென்னாபிரிக்காவின் விசேட பிரதிநிதி சிறில் ராமபோஷ இலங்கைக்கு வரவுள்ளார். எதிர்வரும் மே மாத இறுதிப் பகுதியில் இங்கு வருவார் என்று எதிர்பார்க்கின்றோம். வடக்கு - கிழக்கின் சகல பகுதிகளுக்கும் அவர் பயணம் செய்வார். போரினால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் சகல இடங்களையும் பார்வையிடவுள்ளார். அத்துடன் போரினால் பாதிக்கப்பட்ட மக்களை நேரடியாக அவர் சந்திப்பதுடன், தமிழ் சிவில் சமூக அரசியல் பிரதிநிதிகளையும் சந்தித்துப் பேசவுள்ளார்.

அவரது இலங்கைப் பயணத்தின் பின்னரே, இலங்கை அரசுக்கும் - தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையிலான பேச்சு ஆரம்பிப்பதற்கான கலந்துரையாடல் நடைபெறும்."-என்று பதிலளித்தார்.

**பேச்சு சாந்தியமாகுமா?**

"இலங்கை அரசு நாடாளுமன்றத் தெரிவுக் குழு தவிர்ந்த வேறெந்த தீர்வுத் திட்டத்துக்கும் சாதகமான பதில் தராத நிலையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடனான பேச்சுகள் எந்தளவுக்கு சாத்தியமாகும்? என்று அவரிடம் நாம் கேட்டோம். அதற்குப் பதிலளித்த அவர், அதே சந்தேகம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இருக்கின்றது. அதனைப் பேசித் தீர்க்க வேண்டியது தென்னாபிரிக்க அரசுதான்"-என்று குறிப்பிட்டார். (ற-5)

### சந்தர்ப்பத்துக்கு

மூக்கு மற்றும் வாய் வழியாக இரத்தம் கொட்டிய நிலையில் அவர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

நேற்று இரவு 7.15 மணியளவில் பண்ணை பஸ் நிலையத்துக்கு வந்த இராணுவச் சிப்பாய் ஒருவர் திடீரென மகேந்திரராஜாவைச் சரமாரியாகத் தாக்கத் தொடங்கினார். கடுமையாகத் தாக்கிய அந்தச் சிப்பாய் மகேந்திரராஜாவின் முகத்திலும் துப்பாக்கியின் அடிப்பாகத்தால் கடுமையாகத் தாக்கினார். அதனால் அவரின் மூக்கு மற்றும் வாயிலிருந்து இரத்தம் கொட்டியது.

அதையடுத்து அங்கு கூடிய ஏனைய பஸ் உரிமையாளர்கள், நடத்துநர்களுக்கும் இராணுவத்தினருக்கும் இடையே கடும் வாக்குவாதம் ஏற்பட்டது. பெரும் எண்ணிக்கையானோர் கூடியதை அடுத்து இந்தப் பிரச்சினையை இத்தோடு விடுமாறு கூறி அங்கிருந்து அகல முற்பட்டனர் இராணுவத்தினர். எனினும் அங்கு குழுமியவர்கள் அவர்களை அங்கிருந்து அகல விட மறுத்ததோடு தாக்குதல் நடத்திய சிப்பாயை பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் செல்ல முற்பட்டனர். அந்தநேரம் அங்கு பொலிஸார் வந்து விட்டனர். தாக்குதல் நடத்திய இராணுவச் சிப்பாயை பொலிஸாரிடம் ஒப்படைத்த அவர்கள் உரிய விசாரணை நடத்த வேண்டும் என்றும் கோரியதுடன் அவர்களை நகர விடாது சுற்றி நின்றனர்.

அப்போது சீருடையிலும், சிவில் உடையிலும் அங்கு வந்த இராணுவ உயர் அதிகாரிகள் குறித்த சிப்பாயை விசாரணை செய்ய முற்பட்டனர். அங்கு குழுமியிருந்தவர்கள் குறித்த இராணுவச் சிப்பாயின் ஆயுதங்கள் களையப்பட வேண்டும் என்றும் சீருடை அகற்றப்பட வேண்டும் என்றும் ஆக்ரோஷமாகக் குரல் எழுப்பினர். அதையடுத்து குறித்த சிப்பாயின் ஆயுதங்கள் பறிமுதல் செய்யப்பட்டதுடன், சீருடையும் கழற்றப்பட்டது. அதன்பின்னர் அவர் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

**சம்பவத்தின் பின்னணி**

கடந்த வெள்ளிக்கிழமை குறித்த பஸ் யாழ்.பண்ணை நிலையத்திலிருந்து புறப்பட்டபோது சாதாரண உடையில் ஒருவர் வீதியில் நின்றுள்ளார். போக்குவரத்துக்கு இடையூறாக அவர் நின்றதால் வீதியோரமாக நிற்குமாறு பஸ் உரிமையாளர் கூறிவிட்டு தொடர்ந்து பஸ்ஸை நகர்த்தியுள்ளார்.

ஆனால் அந்த பஸ்ஸை துரத்திச் சென்ற குறித்த நபர் மிதி பலகையில் நின்றிருந்த குறித்த பஸ்ஸின் உரிமையாளரின் சேர்ட்டைப் பிடித்து இழுத்து விழுத்தியுள்ளார். அதையடுத்து பஸ் உரிமையாளர் அவரைத் திருப்பித் தாக்கியதோடு வீதியோரமாக நில் என்று கூறி விட்டுச் சென்றுவிட்டார். குறித்த நபர் யார் என்பது பஸ் நடத்துநருக்குத் தெரியாது. சாதாரண உடையில் நின்றிருந்த அந்தச் சிப்பாயே நேற்றுச் சீருடையில் வந்து குறித்த பஸ் உரிமையாளரைப் பழி வாங்கியுள்ளார்.

**கமராவைப் பறிக்கும் வழமையான செயல்**

பண்ணை பஸ் நிலையத்தில் பதற்றமான ஒரு நிலைமை காணப்படுகின்றது என்று அங்கு நின்றிருந்த பஸ் உரிமையாளர்களும் நடத்துநர்களும் 'உதயனுக்கு' தகவல் கொடுத்தனர். அதையடுத்து அங்கு சென்ற எமது செய்தியாளர் செய்திகளைச் சேகரித்ததுடன், ஒளிப்படங்களையும் எடுத்துக் கொண்டிருந்தார். அதைக் கண்ட இராணு அதிகாரி ஒருவர் செய்தியாளரின் கமராவைப் பறித்ததோடு, அங்கிருந்து அகன்று செல்வதற்கும் முற்பட்டார். எனினும் இது குறித்து அங்கு நின்றிருந்த பொலிஸாரிடம் தெரிவித்ததோடு, குறித்த இராணுவ அதிகாரியையும் அடையாளம் காட்டியதை அடுத்து கமராவை மீட்டுக் கொடுத்தனர் பொலிஸார்.

குறித்த தாக்குதல் சம்பவம் தொடர்பாகப் பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ற-4)

### மோடியைக்

டிருந்தது. அத்துடன் போர் நடைபெற்றுக் கொண்டிருந்த காலத்தின்போதும், அதன் பின்னரான காலப்பகுதியிலும் பல்வேறு இக்கட்டான நிலைமைகளில் இலங்கை அரசைக் காப்பாற்றியிருந்தது காங்கிரஸ் தலையிலான இந்திய அரசு.

தற்போது இந்திய நாடாளுமன்றத் தேர்தல் ஆரம்பமாகியுள்ள நிலையில் பாரதிய ஜனதாக் கட்சியின் செல்வாக்கு அதிகரித்துள்ளதுடன், பெரும்பாலும் பாரதிய ஜனதாக் கட்சி தலைமையி லான கூட்டணியே ஆட்சியைக் கைப்பற்றும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. அதையடுத்தே இலங்கை அரசு பா.ஜ.க. பிரதமர் வேட்பாளர் நரேந்திர மோடியுடனான பேச்சுக்களை ஆரம்பித்துள்ளது.

இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்துள்ள இலங்கை அரசின் பேச்சாளரான ஹெகலிய ரம்புக்வெல, நரேந்திர மோடி உட்பட இந்தியாவின் அனைத்துப் பிரதான கட்சிகளுடனும் இலங்கை அரசு தீவிரமான பேச்சுகளை நடத்தி வருகின்றது என்று குறிப்பிட்டுள்ளார்.

"இந்தியத் தேர்தலின் முன்னேற்றங்கள் குறித்து நாம் உன்னிப்பாகக் கவனித்து வருகின்றோம். நாம் நரேந்திர மோடியுடன் விசேடமாக பேச்சுக்களை நடத்தி வருகின்றோம். இந்தியத் தேர்தலில் போட்டியிடும் அனைத்துப் பிரதான கட்சிகளுடனும் பேச்சுக்களை நடத்துகின்றோம். அவர்கள் எமது அயலவர்கள். அவர்களுடன் நாம் தொடர்ந்து பேசுவோம்" - என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, இலங்கை விவகாரங்கள் தொடர்பில் காங்கிரஸ் கட்சி தலைமையிலான அரசு இதுவரை மென்போக்கான நிலைப்பாட்டைக் கொண்டிருந்து. எனினும் நரேந்திர மோடி இலங்கை விவகாரத்தில் வேறுபட்ட அணுகுமுறையைக் கையாளுவார் என்று பல்வேறு தரப்பினராலும் கூறப்படுகின்றது. (ற-5)

### என்மர்

யில், பயங்கரவாத தடுப்புப் பிரிவால் தேடப்பட்ட, தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர்கள் என்று இலங்கை அரசால் சொல்லப்பட்ட கோபி, தேவியன், அப்பன் ஆகியோர் இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்டிருந்தனர்.

இந்தநிலையில் கடந்த மாதம் கைது செய்யப்பட்டிருந்த யாழ்ப்பாணத்தைச் சொந்த இடமாகக் கொண்டு தொழில் நிமித்தம் தெஹிவளையில் தங்கியிருந்த 12 தமிழர்கள் மற்றும் ஒரு பெண் ஆகியோரில், ஒரு பெண் உள்ளிட்ட 8 பேர் நேற்று விடுவிக்கப்பட்டுள்ளனர்.

பூஸா தடுப்பு முகாமிலிருந்து, கொழும்பு இரண்டாம் மாடிக்கு கொண்டு வரப்பட்டு அவர்கள் விடுவிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ற-5)

### பிரிட்டனின்

கொள்ளக்கூடியசெயற்பாடுஅல்ல என்றும் தெரிவித்துள்ளது.

இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்துள்ள பிரதி வெளிவிவகார அமைச்சர் நியோமல் பெரேரா;

"இலங்கையில் மனித உரிமை மீறல்கள் இடம்பெறுவதாக கருதினால் அவர்கள், மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்ய முடியும். ஊடகங்களுக்கு முழு அளவிலான சுதந்திரம் வழங்கப்பட்டுள்ளது. இலங்கையில் மனித உரிமைகள் பேணப்பட்டு வருகின்றன."- என்று தெரிவித்துள்ளார்.

பிரிட்டனில் இருந்து வெளியாகியுள்ள அந்த அறிக்கையில் குற்றச் செயல்களுக்கு தண்டனை விதிக்கப்படாத நிலைமை நீடிக்கும் வரையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவது நடைமுறைச் சாத்தியமில்லை என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (ற)

### மாத்தறைப்

பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது,

புன்னைநீராவி, 12 ஆம் கட்டைப் பகுதியில் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களுக்கான சிவில் பாதுகாப்புக் குழு தலைமை அலுவலகத்துக்கு அருகாக ஆள்களற்ற காணி ஒன்று உள்ளது.

நேற்றுமுன்தினம் இரவு 9 மணி முதல் நீண்ட நேரமாக அந்தப் பகுதியில் நாய்கள் குரைத்த வண்ணம் இருந்தன. வன்னிப் பகுதியில் இராணுவ சுற்றி வளைப்புக்கள் நடைபெறுவதால் பொது மக்கள் எவரும் அது பற்றி அலட்டிக் கொள்ள வில்லை. இந்த நிலையில் நேற்றுக் காலை குறித்த காணியை பராமரிக்கும் அயல் வீட்டார் ஒருவர் அங்கு சென்றபோது இரத்த கறைகளும் பெண்ணொருவரின் துப்பட்டாவும் காணப்பட்டுள்ளது. இது குறித்து அவர் அயலில் உள்ளவர்களுக்கு தெரியப்படுத்தி, சம்பவம் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது. அங்கு வந்த பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர். குறித்த பெண் அப்பகுதிக்கு அழைத்து வரப்பட்டு அடித்து துன்புறுத்தி படுகொலை செய்யப்பட்ட பின்னர் 100 மீற்றர் வரையான தூரத்துக்கு சடலம் இழுத்துச் செல்லப்பட்டு பெண் அணிந்திருந்த உடைகளால் சடலத்தை கல்லோடு கட்டி கிணற்றுள் போடப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவ இடத்துக்கு சென்ற கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்ற பதில் நீதிவான் திருமதி எஸ்.விஜியராணி விசாரணைகளை மேற்கொண்டு சடலத்தை மீட்டு மருத்துவ பரிசோதனைகளுக்காக மருத்துவமனையில் ஒப்படைக்குமாறு உத்தரவிட்டார்.

சடலம் பொலிஸாரினால் மீட்கப்பட்டு கிளிநொச்சி பொது மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டது.

இதேவேளை சம்பவ இடத்துக்குவிசாரணைக்காககொண்டு வரப்பட்ட பொலிஸ் மோப்ப நாய் சிவில் பாதுகாப்பு தலைமை அலுவலகத்துக்குள் புகுந்து உள்ளது. இது குறித்தும் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

(ஜ-55-426-18)

### காங்கிரஸ்

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கும்போது,

டில்லியில் வலுவற்ற அரசு இருப்பதால் எந்தப் பயனும் இல்லை. 'ரிமோட் கன்ட்ரோல்' மூலம் இயங்கும் அரசால் எந்தப் பயனும் இல்லை. எங்கள் அணி வெற்றி பெற்றால் தமிழக தலைவர்களான ராமதாஸ், விஜயகாந்த் உள்ளிட்டோரின் உறுதுணையுடன் வலுவான அரசை அமைப்போம்.

மத்தியில் துணிச்சல் மிக்க அரசு இல்லாததால், மக்கள் இப்போது துவண்டு இருக்கிறார்கள். அண்டை நாடுகளான இலங்கை, பாகிஸ்தான், பங்களாதேஷ் உள்ளிட்டவை வளர்ந்துகொண்டிருக்கின்றன. அண்டை நாடுகளால் அச்சுறுத்தலும் இருக்கிறது. எனவே, துணிச்சல் மிக்க அரசு தேவை.

இலங்கையின் எங்கள் தமிழ்ச் சகோதரர்களுக்கும், மற்ற நாடுகளில் உள்ள தமிழ்ச் சகோதரர்களுக்கும் நாங்கள் துணைபுரிவோம். அவர்களை தற்போது உள்ள அரசு கைவிட்டுவிட்டது. ஆனால், நாங்கள் கைவிட மாட்டோம். தமிழக மீனவர்கள், இலங்கை கடற்படையால் தாக்கப்படுகிறார்கள். குஜராத் மீனவர்களை பாகிஸ்தான் தாக்குகிறது. கேரள மீனவர்களை இத்தாலியினர் தாக்குகிறார்கள். மீனவர்களைப் பாதுகாக்க மத்தியில் உறுதியான ஆட்சி தேவை. அவர்களுக்கு உரிய செயல்திட்டங்களை எங்களது அரசு வகுக்கும் - என்று தெரிவித்தார்.

அதேவேளை, நரேந்திர மோடியின் வருகைக்கு எதிர்ப்புத் தெரிவித்து, தமிழக மாணவர் அமைப்புகளினால் பல்வேறு போராட்டங்கள் முன்னெடுக்கப் பட்டிருந்தன. இருப்பினும் நரேந்திர மோடியின் பயண ஒழுங்கில் எதுவித மாறுதலும் செய்யப்படவில்லை. சூப்பர் ஸ்ரார் ரஜனிகாந்தை அவரது வீட்டில் சென்று சந்தித்த மோடி அதன் பின்னர் பிரசாரக் கூட்டத்தில் பங்கேற்றார்.

சென்னை - மீனம்பாக்கம் ஜெயின் கல்லூரி மைதானத்தில் நேற்று நடந்த தேர்தல் பிரச்சாரப் பொதுக்கூட்டத்தில் காஞ்சிபுரம், திருவள்ளூர், ஸ்ரீபெரும்புதூர் மற்றும் சென்னையின் 3 தொகுதிகளில் போட்டியிடும் தேசிய ஜனநாயக கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து மோடி பரப்புரைகளை மேற்கொண்டார். (ற-5)

### மோதிவிட்டு

மனைவியான ஞானேஸ்வரி (வயது 36) ஆகியோரே படுகாயமடைந்தனர்.

அவர்களின் பின்னால் சென்று கொண்டிருந்த டிப்பர் அவர்களை மோதியுள்ளது. மோதியவுடன் வாகனத்தை நிறுத்தாது தப்பியோடி விட்டார் அதன் சாரதி.

அவ்வழியே சென்ற பொதுமக்களே பாடுகாயமடைந்த நிலையில் காணப்பட்ட இருவரையும் மீட்டு பளை வைத்திய சாலையில் சேர்த்தனர். அவர்கள் பின்னர் சாவகச்சேரி வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர். (ற-4-9)

# ஐ.சி.சியின் புதிய விதிமுறை சிறிய அணிகளுக்கு வாய்ப்பு

International Cricket Council

டெஸ்ட் போட்டிகளில் சிறிய அணிகள் விளையாடத் தகுதிப்போட்டி நடத்த சர்வதேசக் கிரிக்கெட் சபைச் செயற்குழுக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளது.


8 அணிகள் மட்டுமே சர்வதேச அளவில் டெஸ்ட் போட்டிகளில் விளையாடும் நிரந்தரமான தகுதியைப் பெற்றுள்ளன. பங்களாதேஷ், சிம்பாப்வே ஆகிய அணிகள்டெஸ்ட்போட்டிகளில் தொடர்ந்து போராடி வருகின்றன.

சர்வதேசக் கிரிக்கெட் சபையின் இப்போதைய புதிய முடிவால் அயர்லாந்து, நெதர்லாந்து, ஐக்கிய அரபு இராச்சியம் உள்ளிட்ட அணிகளும் டெஸ்ட் போட்டிக்கான தகுதியைப் பெற வாய்ப்புக் கிடைக்கும்.

டெஸ்ட் தகுதிப் போட்டிக்கு ஐ.சி.சி டெஸ்ட் சலஞ்ச் என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது. இந்தப் போட்டி மூலம் சர்வதேசக் கிரிக்கெட் சபையில் உறுப்பினராக உள்ள பல நாடுகள் பயனடையும் என்று சர்வதேசக் கிரிக்கெட் சபை சார்பில் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிரிக்கெட் போட்டிகளுக்கான திட்டமிடுதல், நிதி நிர்வாகச் செயற்பாடுகள் குறித்து பல முக்கிய முடிவுகள் கூட்டத்தில் எடுக்கப்பட்டன.


சமீபத்தில் 20/20 உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டியை வெற்றிகரமாக நடத்தி முடித்த பங்களாதேஷ் கிரிக்கெட் சங்கத்துக்கு சர்வதேசக் கிரிக்கெட் சபை கூட்டத்தில் பாராட்டுத் தெரிவித்துள்ளது. (த)



# நடாலின் முதலிடத்தைப் பிடிக்க நோவக் ஜோகோவிச்சுக்கு வாய்ப்பு

சர்வதேச ரென்னிஸில் நோவக் ஜோகோவிச் தரவரிசைப் பட்டியலில் முதலிடத்தை நோக்கி முன்னேறுகிறார்.

சர்வதேச ஆடவர் ரென்னிஸ் தரவரிசைப் பட்டியலில் தற்போது ஸ்பெயினின் 13,730 புள்ளிகள் பெற்ற ரபேல் நடால் முதலிடத்திலும், சேர்பியாவின் 11,680 புள்ளிகள் பெற்ற நோவக் ஜோகோவிச் 2ஆவது இடத்திலும் உள்ளனர். இந்நிலையில் நடாலிடம் இருந்து முதலிடத்தைத் தட்டிப் பறிக்க ஜோகோவிச்சுக்கு வாய்ப்பு உருவாகியுள்ளது. அடுத்த வாரம் நடக்கும் மான்ட் கார்லோ மாஸ்டர்ஸ் போட்டியின் முடிவில் தரவரிசை மாற வாய்ப்பில்லை. ஆனால் அதன் பிறகு வரும் போட்டிகளில் ஜோகோவிச் வெற்றிகளை குவித்தா[ல்] மே மாத மத்தியில் மீண்டும் முதலிடத்தைப் பெற வாய்ப்புகள் உள்ளது. (த)




# சொட்சொபே இல்லை

தென்னாபிரிக்காவின் வேகப்பந்து வீச்சாளர் லொன்வாபோ சொட்சொபே அடுத்த வாரம் சத்திரசிகிச்சைக்கு உட்படுத்தப்படவுள்ளார். இதனால் எதிர்வரும் ஜூலை மாதம் நடைபெறவுள்ள இலங்கைக்கு எதிரான கிரிக்கெட் தொடரில் அவர் பங்கேற்கமாட்டார் என்று தெரிவிக்கப்படுகிறது.

**German Institute**

German, Swiss மொழிகள் தமிழ் மொழி பெயர்ப்புடன் Goethe Insitute exam க்கு ஏற்றவாறு Germany யிலிருந்து வருகை தந்த ஆசிரியையால் நடைபெறுகிறது. புதிய பிரிவு 18.04.2014 அன்று ஆரம்பம்

தொடர்பு : 10 Palaly Road, Jaffna
T.P : 077 1604823
அனைவருக்கும் புதுவருட வாழ்த்துக்கள்

**அவசர கலந்துரையாடல்**

யாழ்.பல்கலைக்கழகத்தின் வெளி வாரிப் பட்டதாரி மாணவர்களுக்கான பட்டச் சான்றிதழ் வழங்கும் நிகழ்வு தொடர்பான முக்கிய கலந்துரையாடல் 15.04.2014 (செவ்வாய்க்கிழமை) மு.ப. 11 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் நடை பெறும்.

பட்டச் சான்றிதழ் பெறவுள்ளவர்கள்
அனைவரும் தவறாது
கலந்து கொள்ளவும்.

யாழ்.பல்கலைக்கழக வெளிவாரி
மாணவர் ஒன்றியம்
(46776)
(7.6.3)

Rotary RI District 3220 - ROTARY CLUB OF JAFFNA

அமெரிக்காவில் அதியுயர் விருது பெற்ற தமிழ் விஞ்ஞானி - பௌதிகவியல் பேராசிரியர்

**சிவலிங்கம் சிவானந்தன்**

அவர்களின் யாழ்.வருகையை முன்னிட்டு

**யாழ்.றோட்டறிக் கழகம் நடாத்தும்**

**சாதனையாளர் சிறப்புரை நிகழ்வு**



காலம் : 15.04.2014, செவ்வாய்க்கிழமை. பி.ப 3.00 மணி

இடம் : யாழ்.இந்துக்கல்லூரி. குமாரசுவாமி மண்டபம்.

அறிவியலில் ஆர்வமுள்ள அனைவரும் பங்குபற்றிப் பயன்பெறுவதற்கான அரிய சந்தர்ப்பம் !

குறிப்பாகப் பாடசாலை மாணவர்கள் பயன்பெறுவதற்கான வழிகாட்டல்களைக் காணத்தவறாதீர்கள்!!

மேலதிக விவரங்களுக்கு :
0787
0718 692 692

அனுசரணை: உதயன்

AQUA CAR SHOWROOM

Hotline 077 3 169 433
AquaHolding.lk
www.aquaholding.lk

ஜப்பானில் இருந்து நேரடியாக வாகனங்கள் இறக்குமதி செய்து தரப்படும். (பெமிட் (Permit) மற்றும் ஹைபிரிட் (Hybrid) வாகனங்கள் உட்பட)

உங்களது ஜப்பான் நாட்டுத் தயாரிப்பு வாகனங்களுக்கான சகல உதிரிப்பாகங்களும் நேரடியாக ஜப்பானிலிருந்து பெற்றுத் தரப்படும்.



உங்கள் வீட்டிற்கே வருகிறது
உங்கள் கனவுக் கார்

Raja Plaza, 74, Palaly Road, Kondavil East, Jaffna
You Too Can Have A Car

வட்டுக்கோட்டை அருள்மிகு பங்குரு கந்தசுவாமி ஆலய ஜீர்ணோத்தாரண புனராவர்த்தன நவகுண்ட பக்ஷ மஹாயாக பிரதிஷ்டா

**மஹா கும்பாபிஷேக பெருவிழா விஞ்ஞாபனம்**



ஆலய கும்பாபிஷேக பெருவிழா தினத்தன்று எதிர்வரும் 17.04.2014 வியாழக்கிழமை மாலை உற்சவத்தின்போது தென் இலங்கையிலிருந்து வரவழைக்கப்பட்ட யானை சகிதம் பல வண்ண விளக்குகளால் அலங்கரிக்கப்பட்ட பூந்தண்டிகையில் எம்பெருமான் வீதியுலா வரும் காட்சி இடம்பெறும்.

குறிப்பு: 16.04.2014 அன்று காலை 9.00 மணிமுதல்மாலை 4.00 மணிவரை எண்ணெய்க்காப்பு சாத்துதல் நடைபெறும்.

எம்பெருமானின் திருவருளைப் பெற்றுய்யுமாறு அன்புடன் அழைக்கின்றோம்

ஆலய அறங்காவலர்
சு.புவனகுமார்.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 14.04.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.